மாலை 47 மணி 11 நவம்பர் 2005 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு




## தீபாவளி தத்துவ விளக்கம்



## கந்தன் திருவருள் கைகூட்டும் கந்தர் சஷ்டித் திருவிழா



## ஒரே கருவறையில் இருசிவலிங்கங்கள்



★ தசரதர் வழிபட்ட தமிழகத்திருத்தலம்

★ கந்தப்புராண அரங்கேற்றத்தில் நிகழ்ந்த அற்புதம்

## தேவிகாபுரம் அருள்மிகு பெரியநாயகி

அருள்மிகு அண்ணாமலையார் துணை

அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுதக் கடலே போற்றி!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி போற்றி!



# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

## திருக்கார்த்திகை பிரம்மோற்சவ விபரம்

(1415-ஆம் பசலி 2005 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்)

| எண் | ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி கார்த்திகை | கிழமை | உற்சவம் | வாகனம் விசேஷம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1-12-2005 | பார்த்திப ஆண்டு கார்த்திகை மற்றும் மார்கழித்திங்கள் | 16 | வியாழன் | | ஸ்ரீ துர்க்கை அம்மன் உற்சவம் |
| 2. | 2-12-2005 | | 17 | வெள்ளி | | ஸ்ரீ பிடாரி அம்மம் உற்சவம் |
| 3. | 3-12-2005 | | 18 | சனி | | ஸ்ரீ விநாயகர் உற்சவம் |
| 4. | 4-12-2005 | | 19 | ஞாயிறு | 1 | துவஜாரோகணம் காலை 5-05 மணிக்கு மேல் 6-35 மணிக்குள் |
| 5. | 5-12-2005 | | 20 | திங்கள் | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 6. | 6-12-2005 | | 21 | செவ்வாய் | 3 | சிம்ம வாகனம் |
| 7. | 7-12-2005 | | 22 | புதன் | 4 | வெள்ளி கற்பக விருக்ஷம், காமதேனு |
| 8. | 8-12-2005 | | 23 | வியாழன் | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 9. | 9-12-2005 | | 24 | வெள்ளி | 6 | வெள்ளி ரதம் |
| 10. | 10-12-2005 | | 25 | சனி | 7 | மகா ரதம் காலை 5-38 மணிக்கு மேல் 7-10 மணிக்குள் வடம் பிடித்தல் |
| 11. | 11-12-2005 | | 26 | ஞாயிறு | 8 | மாலை 4-00 மணிக்கு பிச்சாண்டவர் உற்சவம். இரவு குதிரை வாகம் |
| 12 | 12-12-2005 | | 27 | திங்கள் | 9 | கைலாசவாகனம் |
| 13. | 13-12-2005 | | 28 | செவ்வாய் | 10 | காலை 4-00 மணிக்கு பரணி தீபம் மாலை 6-00 மணிக்கு மகாதீபம் |
| 14. | 14-12-2005 | | 29 | புதன் | தெப்பல் | இரவு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பல் ஸ்ரீ பெரிய நாயகர் கிரிபிரதட்சணம் |
| 15. | 15-12-2005 | | 30 | வியாழன் | தெப்பல் | ஸ்ரீ பராசக்தி அம்மன் தெப்பல் |
| 16. | 16-12-2005 | | மார்கழி 1 | வெள்ளி | தெப்பல் | ஸ்ரீ சுப்பிரமணியர் தெப்பல் |
| 17. | 17-12-2005 | | 2 | சனி | | ஸ்ரீ சண்டிகேசுவரர் உற்சவம் |

1) கார்த்திகை தீபத்திற்குப் பிரார்த்தனை நெய்க் குடம் கட்ட விரும்பும் ஆன்மநேய செல்வர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர் முகவரிக்கு நேரிலோ, மணியார்டர் மற்றும் பணவரைவோலை மூலமாகவோ, கிலோ ஒன்றுக்கு ரூ.200/-, அரைகிலோவிற்கு ரூ.100/-, கால் கிலோவிற்கு ரூ. 50/-, செலுத்தி அச்சு ரசீதுடன் பிராசாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

2) அன்னதானத் திட்டம்:

| | | |
|---|---|---|
| 200 நபர்களுக்கு | நாள் ஒன்றுக்கு | ரூ. 2,400/- |
| | வைப்பு நிதி.. | ரூ. 30,000/- |
| 100 நபர்களுக்கு | நாள் ஒன்றுக்கு | ரூ. 1,200/- |
| | வைப்பு நிதி . | ரூ. 15,000/- |

இங்ஙனம்

**சி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்.

**அ.சி.முத்தையா,**
அறங்காவலர் குழுத் தலைவர்

**ஆர். பாஷ்யம்,** **ஏ.ஜி. இளங்கோவன்,** **எஸ்.சிவாஜி,** **திருமதி ஏ.மீரா**
அறங்காவலர்கள்

# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப கார்த்திகை
மாலை 47 மணி 11 நவம்பர் 2005


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

ஒளிவளர் விளக்காக இறைவன் திகழ்கின்றான். ஆகவேதான் இறைவனைப் போற்றும் அருளாளர்கள்

''ஒளி வளர் விளக்கே ! உலப்பிலா ஒன்றே'' என்றும்

''சோதியே ! சுடரே ! சூழொளி விளக்கே !'' என்றும்

''தீப மங்கள ஜோதி நமோநம'' என்றும்

''ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன்'' என்றும்

''அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி''

என்றும் போற்றிப் பாடியிருத்தலைக் காணலாம்.

அஞ்ஞானம் என்பது அசுர சக்தி. அசுர சக்திகளான நரகாசூரன், சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் ஆகிய தீயவர்கள் எல்லாம் மறைந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதத்திலேயே தீபாவளித் திருநாளையும், கந்தர் சஷ்டிப் பெருவிழாவையும் ஒவ்வொரு ஆண்டும் நாம் ஒப்பிலாப் பெருமகிழ்ச்சி யோடு கொண்டாடி மகிழ்ந்து வருகின்றோம்.

தீபாவளித் திருநாள் தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியத் திருநாடு முழுவதும் கொண்டாடப்படும் மக்கள் பண்டிகையாகும். அரசரும், ஆண்டியும் அகமகிழ்ந்து கொண்டாடும் ஆனந்தப் பண்டிகை தீபாவளிப் பண்டிகை என்பதைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

''பண்டிகை தீவாளிப் பண்டிகையாம் - இந்தப்
பாரத நாட்டுக்கோர் பண்டிகையாம்
தண்டிகை மன்னவர் ஏழை எளியவர்
சந்தோஷம் கொண்டாடும் பண்டிகையாம்''

என்று பெருமகிழ்ச்சியோடு போற்றுகின்றார்.

இத்தகு தீபாவளி மற்றும் கந்தர்சஷ்டியைச் சிறப்பிக்கும் அரிய படைப்புகள் இவ்விதழை அலங்கரிப்பதை வாசகர்கள் படித்து இன்புறலாம்.

தீபாவளிப் பண்டிகைப் பற்றிய தத்துவ விளக்கம் சித்தாந்த ரத்தினம் செ.வே.சதாநந்தன் அவர்களால் விளக்கப்பட்டிருப்பது வாசகர்களுக்குப் பெரும் பயன் விளைக்கும் என நம்புகின்றேன்.

''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்ற பழமொழிக்குத் தரப்பட்டிருக்கும் மெய்யான விளக்கமும் கந்தர் சஷ்டி மகிமையை நன்கு விளக்குவதாக அமைந்துள்ளது. இன்னும் ''ஆன்மீகமே வாழ்க்கையின் அடிப்படை'' என்பதை விளக்கும் ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் கட்டுரையும் பயன்மிக விளைக்கும்.

கலையழகு மிக்க தேவிகாபுரம் கோயில் பற்றிய கட்டுரை, தசரதன் வழிபட்ட தமிழ்கத் திருத்தலம், ஒரே சன்னிதியில் இரண்டு வரதராஜர்கள் யாவும் தித்திக்கும் தீபாவளி இனிப்புகள் என்றே கூறவேண்டும்.

''காலச்சுவடுகள் '' பகுதியில் கச்சியப்பர் கந்தப்புராணம் அரங்கேற்றிய போது நிகழ்ந்த தமிழ் விநோதம் சுவையாக விவரிக்கப் பட்டுள்ளது.

இவற்றுடன் வழக்கமான கேள்வி -பதில்கள், நீதிக்கதை, பயன்மிகு பெட்டிச் செய்திகள் யாவும் உங்களைப் பரவசப்படுத்தும் வகையிலேயே அமைந்து விளங்குகின்றன.

தீயவை நீங்க, தூயவை ஓங்க, பொங்கும் மங்கலம் எங்கும் நிறைய, இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் திருக்கோயில் இதழ் வாசகர்களுக்கு அன்புடன் தெரிவித்து மகிழ்கின்றேன். வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்துக்கு மூன்றுமாதச் சம்பளம் நன்கொடை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டம் தொடங்கப் பெற்ற 2002 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தமது மாதச் சம்பளத்தைத் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கே ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2005 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகையான 39,645 ரூபாயை நாகை மாவட்டம் திருக்கண்ணபுரம் அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு 13,645 ரூபாய், மதுரை மாவட்டம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 13000 ரூபாய், மதுரை மாவட்டம் அழகர்கோயில் அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயிலுக்கு 13000 ரூபாய் என வழங்கியுள்ளார்கள்.

இந்த நன்கொடைக்கான காசோலைகளை மேற்கூறிய திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொண்டார்கள்.

## இதழின் உள்ளே ....


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்துக்கு மூன்றுமாதச் சம்பளம் நன்கொடை — 2
2. கந்தன் திருவருள் கைகூட்டும் கந்தர் சஷ்டித் திருவிழா - அருள்செல்வி — 3
3. காலச்சுவடுகள் - கந்தபுராண அரங்கேற்றத்தில் நிகழ்ந்த அற்புதம் — 6
4. தீபாவளி - தத்துவ விளக்கம் - சித்தாந்த இரத்தினம் செ.வே.சதாநந்தன் — 8
5. கலையழகுமிக்க தேவிகாபுரம் கோயில்கள் - கி. ஸ்ரீதரன், எம்.ஏ., — 9
6. சிவன் கோயில்களில் செய்யத் தகுவனவும், தகாதனவும் - சித்தாந்தப் பேரறிஞர் தி.சு. கோவிந்தசாமி — 12
7. ஆன்மீகமே வாழ்க்கையின் அடிப்படை - எழுத்துச்சித்தர் பாலகுமாரன் — 13
8. கேள்வி - பதில் — 16
9. காவடி - டாக்டர் டி.செல்வராஜ் — 17
10. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் — 20
11. திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி — 24
12. ஒரே சந்நிதியில் இரண்டு வரதராஜர்கள் - டாக்டா பருத்தியூர் கே. சந்தானராமன் — 25
13. தெரிந்த கோயில், தெரியாத தகவல் - தசரதர் வழிபட்ட தமிழகத் திருத்தலம் — 27
14. திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப. (ஓய்வு) — 29
15. கலைமகளே சரணம் - முனைவர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. — 31
15. பாம்பன் சுவாமிகள் - தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. — 33
16. தமிழ்நாட்டுச்சித்தர் பரம்பரை குதம்பைச்சித்தர் - முனைவர் இரா. செல்வக்கணபதி — 35
17. பொறுமையால் கிடைக்கும் பெருமை - சுவாமி கமலாத்மானந்தர் — 37
18. இவ்வளவு தூரம் வந்தபிறகு - நிறைமதி — 39
19. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியுள்ள திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் தங்கரதத் திருப்பணி — 40

# கந்தன் திருவருள் கைகூட்டும் கந்தர் சஷ்டித் திருவிழா

– அருள்செல்வி



முருகப்பெருமான் தம் திருவருள் நோக்கத்தினால் சூரனின் பகைமையை நீக்கி, அவன் பாவங்களைப் போக்கித் தீயவன் ஆன சூரபதுமனுக்கும் திருவருள் புரிந்து மயிலைத் தம் வாகனமாகவும், சேவலைத் தம் கொடியாகவும் கொண்டருள் புரியும் பெருமைமிகு விழாவே கந்தர் சஷ்டி விழாவாகும்.

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ
அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

என்று முருகப் பெருமானின் தண்ணளியைப் போற்றிப் புகழ்கின்றது கந்தப்புராணம்.

ஐப்பசிமாதம் வளர்பிறையில் முதல் ஆறு நாட்களும் தேவர்கள், முனிவர்கள் உள்ளிட்ட யாவரும் கந்தர்சஷ்டி விழாவினை விரதமிருந்து கொண்டாடிப் போற்றினர் என்பதையும் கந்தப்புராணம்

''வெற்போடு அவுணன் தன்னை
வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றார்''

என்று பாடி விளக்கியிருக்கவும் காணுகின்றோம்.

முருகப்பெருமானுக்குரிய வார விரதங்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை விரதம். மாத விரதங்களில் சிறந்தது கிருத்திகை விரதம். ஆண்டு விரதங்களில் சிறந்தது மகா கந்தர் சஷ்டி விரதம் என்பதைக் கந்தப் புராணம் கந்த விரதப் படலத்தில் விவரிக்கின்றது.

வசிட்ட முனிவர் இவ்விரத மகிமைகளை விவரிக்கக் கேட்ட முசுகுந்தன், இவ்விரதங்கள் யாவற்றையும் கடைப்பிடித்து, முருகப் பெருமானை மயில்வாகன மூர்த்தியாகத் தரிசிக்கும்

## கேதார கௌரி விரதம் நோற்கும் முறை



புரட்டாசி மாதம் பூர்வபட்சம் அஷ்டமியில் தொடங்குதல் வேண்டும்.

நிறைகுடம் வைத்து அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து இருபத்தொரு இழையுடைய நூலைக் கையில் புனைந்து அருச்சனை செய்து தீபதூப நிவேதனம் புரிந்து வழிபட வேண்டும்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசியினன்று அதிகாலை எழுந்து நீராடி, தூயஆடை உடுத்து, நெல்லின் மீது நிறைகுடம் வைத்து மாவிலையும் தருப்பையும் வைத்து சிவமூர்த்தியை நிறுவி தூபதீப நிவேதனங்கள் செய்து வழிபட வேண்டும்.

மறுநாள் அமாவசைஅன்று காப்பை அவிழ்த்துவிட்டு உணவருந்த வேண்டும். இவ்வாறு நோற்பதே கேதார விரதம் எனப்படும்.

இந்தக் கேதார கௌரி விரதத்தை கௌதம முனிவர் கூறிய முறைப்படி உமாதேவி நோற்று இறைவருடைய இடப்பாகம் பெற்றார்.

கௌரி நோற்ற காரணத்தால் இவ்விரதம் கேதார கௌரி விரதம் எனப் பெயர் பெற்றது.

இவ்விரதத்தை 21 நாள் அனுட்டிக்க முடியாதவர்கள் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசியன்று மட்டும் மேற்கூறியவாறு அனுட்டிக்க வேண்டும்.

பேறு பெற்றதோடு வீரபாகு முதலிய நவவீரர்களைத் தன் துணைவர்களாகவும் வரம் பெற்றதாகக் கந்தவிரதப் படலம் கூறுகின்றது.

முருகப் பெருமானின் ஒன்பது தம்பியரில் முதல்வர் வீரபாகு. நவசக்திகளில் மாணிக்க வல்லியிடத்துத் தோன்றியவர். இவரே சயந்தனைச் சிறையிலிருந்து விடுவித்துச் சரவண பவனைச் சரண் அடைந்து உய்யுமாறு சூரபதுமன் பால் தூது சென்று அறிவுறுத்தியவர். சூரபதுமனின் வீரமகனான பானுகோபனை வதைத்த மாவீரர்.

பானுகோபனை வதைத்த வெற்றிக்குப் பரிசாக பிரம்மபதவி, குபேரபதவி, இந்திரபதவி வேண்டுமா என முருகப் பெருமான் கேட்டபோது எளிய அப்பதவிகளை வேண்டாது மறுத்து, என்றும் முருகப்பெருமானின் திருவடிப் பதமே வேண்டும் எனக் கேட்டுப் பெற்ற ஒப்பில்லாதவர் வீரபாகு ஆவார்.

''கோலம் நீடிய நீதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சாலநின் பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்''

என்று வேண்டி முருகப் பெருமானின் திருவடிப் பதம் பெற்றவர் வீரபாகு. அவரைத் தம் துணைவராகக் கந்தர் சஷ்டி விரதத்தால் பெற்றார் முசுகுந்தர் என்றால் கந்தர் சஷ்டி விரதத்தின் சிறப்பினை என்னென்று போற்றுவது?

திருச்செந்தூர் திருக்கோயில் வழிபடும் மெய்யன்பர்கள் மூலவருக்கு முன்புறமுள்ள மணியடி வாயிலின் வலப்புறம் நிற்கும் வீரபாகு தேவரை வழிபட்டு மகிழலாம். அதே மணியடி வாயிலின் இடப்புறம் நிற்பவர் வீரபாகு தேவரின் தம்பியரில் ஒருவரான வீரமகேந்திரர் ஆவார்.




## மச்சக் காவடி

மீனை மூன்று இடங்களில் லேசாக வெட்டி உப்பிட்டுச் சட்டியில் மஞ்சள் தண்ணீரில் போட்டுக் காவடித் தண்டில் கட்டிக் கொண்டுவருவர்.



இவ்வாறு கொண்டுவரும் மச்சக்காவடி பக்தர்கள் திருச்செந்தூரில் கடலில் இடுப்பளவு ஆழத்தில் நின்று காவடிச் சட்டியைத் தலைக்கு மேலாகத் தூக்கி ஆட்டும் போது மீன், உயிரோடு கடலில் துள்ளி விழுந்து மறையும்.



## சூரசம்ஹாரத் தத்துவம்

முருகப்பெருமான் யானை முகன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகிய மூன்று அரக்கர்களை ஒழித்தான்.

இம்மூன்று அரக்கர்களும் முறையே மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மலங்களை உணர்த்துவர்.

முதலில் மாயையை ஒழிக்க வேண்டும். மாயையை உணர்த்தும் யானைமுகனை முதலில் ஒழித்தார் முருகப் பெருமான்.

மாயை ஒழிந்தால் கன்மம் தொலையும். சிங்கமுகனை இரண்டாவது வதைத்தொழித்தார் முருகப்பெருமான்.

மூன்றாவதான ஆணவமலம் ஒடுங்குமே தவிர முற்றிலும் ஒழியாது.

சூரபதுமன் ஆணவமலம் போன்றவன். ஆகவே முருகப்பெருமான் அவனை மயிலாகவும் சேவலாகவும் ஒடுக்கிப் பணி கொண்டார்.

இத்தத்துவமே கந்தர் சஷ்டி விழாவில் தெளிவுபடுத்தப்படுகின்றது.

விரதங்களில் சிறந்த கந்தர் சஷ்டி விரதம் இருந்தால், குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும் என்பதை உணர்த்தும் வகையில் சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்ற பழமொழி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**சட்டியில் இருந்தால் - சஷ்டியில் விரதம் இருந்தால்**

**அகப்பையில் வரும் - அகமாகிய வயிற்றின் கண் உள்ள கருப்பையில் மகப்பேறு வாய்க்கும்.**

இவ்வாறு விளக்கம் அளித்துக் கந்தர் சஷ்டி விரத மகிமையை அமரர் கிருபானந்த வாரியார் சுவாமிகள் விளக்கியிருப்பதும் இங்கு எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்.

சேக்கிழார் பெருமான், பெரிய புராணத்தில் கந்தனை நோக்கி விரதம் இருந்து வழிபட்ட காரணத்தால் நாகன் - தத்தை ஆகிய வேடுவத் தம்பதியருக்குக் கண்ணப்பர் பிறந்தார் எனப் பாடியுள்ள கருத்தும் இங்கு நாம் நினைந்து மகிழத் தக்க ஒன்றாகும்.

**''பொருவரும் சிறப்பின் மிக்கார்**
**இவர்க்கினிப் புதல்வர் பேறே**
**அரியது என்று எவரும் கூற**
**அதற்படு காதலாலே**
**முருகலர் அலங்கற் செவ்வேல்**
**முருகவேள் முன்றில் சென்று**
**பரவுதல் செய்து நாளும்**
**பராய்க்கடன் நெறியில் நிற்பார்''**

***(பெ.பு. 660)***

**''வாரணச் சேவ லோடும்**
**வரிமயிற் குலங்கள் விட்டுத்**
**தோரண மணிகள் தூக்கிச்**
**சுரும்பணி கதம்பம் நாற்றிப்**
**போரணி நெடுவே லோற்குப்**
**புகழ்புரி குரவை தூங்கப்**
**பேர் அணங்கு ஆடல் செய்து**
**பெருவிழா எடுத்த பின்றை''**

***(பெ.பு. 661)***

**''பயில்வடுப் பொலிந்த யாக்கை**
**வேடர்தம் பதியாம் நாகற்கு**
**எயிலுடைப் புரங்கள் செற்ற**
**எந்தையார் மைந்தர் ஆன**
**மயிலுடைக் கொற்ற வூர்தி**
**வரையுரம் கிழித்த திண்மை**
**அயிலுடைத் தடக்கை வென்றி**
**அண்ணலார் அருளினாலே''**

***(பெ.பு. 662)***

'கலைமலிந்த சீர் நம்பி' கண்ணப்பன் என ஞாலம் போற்றும் திண்ணன் எனும் குழந்தை பிறந்தது என்று பெரிய புராணம் கூறக்காணுகின்றோம்.

குற்றாலக் குறவஞ்சி எனும் வேடுவர் வாழ்வினை விவரிப்பதான சிற்றிலக்கியத்திலும், கந்தர் சஷ்டி விழாவைப் பற்றிய கருத்து இடம் பெற்றிருப்பது கொண்டு இவ்விழாவின் மகத்துவத்தை நாம் நன்கு அறியலாம்.

குறத்தியை மணங்கொண்ட செவ்வேள் குறவர், முதல் வேட்டைக்குச் செல்ல ஆறுநாட்கள் கழித்து அவருக்கு ஒரு கொக்கு (மாமரம்) அகப்பட்டது. அக்கொக்கை அவித்து ஒரு சட்டியில் (சஷ்டியில்) சாறு (விழா) வைத்தார். அச்சாறு (விழா) வேதப்பிராமண முனிவர், அமரர் ஆகிய யாவருக்கும் மகிழ்ச்சியை தருவதாயிற்று என்று குற்றாலக் குறவஞ்சி நயம்பட உரைக்கும் பாடற்பகுதி பின்வருமாறு:

**''மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்**
**வேள் குறவன் முதல் வேட்டைக்குப் போனநாள்**
**ஆறு நாட் கூடி ஒரு கொக்குப் பட்டது.**
**அகப்பட்ட கொக்கை அவித்து ஒரு சட்டியில்**
**சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்**
**தாமுங் கொண்டார், சைவர் தாமுங் கொண்டார், தவப்**
**பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார்''**

எனக் குற்றாலக் குறவஞ்சி கூறியிருப்பது போல் இன்று வேதப்பிராமணர், முனிவர், சைவர் உள்ளிட்ட யாவரும் ஏற்றுக் கொண்டாடும் ஒரு பெரும் விழாவாகக் கந்தர் சஷ்டி விழா கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சர்ப்பக் காவடி

பச்சைமண் கலத்துள் பாம்பினை அடைத்து காவடியில் கட்டிக் கொண்டு வந்து காணிக்கை செலுத்துவது சர்ப்பக் காவடி ஆகும்.

சர்ப்பக் காவடி எடுப்பவர் கடும் விரதம் இருப்பர். காட்டினுள் தங்கி, ஆறு நாட்கள் உணவருந்தாமல் முருகனை வேண்டி உருகி நிற்பர்.

ஆறாம் நாள் அவர்கள் கனவில் முருகன் தோன்றி ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அவ்விடத்திலுள்ள பாம்பைக் கொண்டு வருமாறு கூறுவார். விரதமிருப்பவர் அவ்விடம் சென்று பச்சைமண்கலத்தைக் காட்ட பாம்பு தானாகவே வெளியே வந்து மட்கலத்துள் புகுந்து கொள்ளும். இப்பாம்புக் குடத்தைக் காவடியில் கட்டிக் கொண்டு வருவர். திருச்செந்தூரில் உள்ள வள்ளியம்மன் குகை அருகில் மட்கலத்தைத் திறந்துவிட பாம்பு வெளியேறி மறைந்துவிடும்.



காலச்சுவடுகள்

# கந்தப்புராண அரங்கேற்றத்தில் நிகழ்ந்த அற்புதம்

புராணங்கள் பதினெட்டு. இவற்றுள் தலை சிறந்தது கந்தப்புராணமே என்பதால் இதனைப் புராண நாயகம் என்று போற்றுவர்.

கந்தப் புராணத்தைப் பயின்றோர் நிலவுலகிலேயே இந்திரராக வாழலாம் என்பர் ஆன்றோர்.


**''இந்திர ராகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி அதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த
செவ்வேள்
கந்தவேள் புராணம் தன்னைக்
காதலித்து ஓது வோரே''**

என்பது கந்தப் புராணம் பயில்வதன் பயன் கூறும் அருமையான பாடலாகும்.

முத்தித்தலங்கள் ஏழனுள் ஒன்றாகிய காஞ்சித் திருத்தலத்தில் சிறப்புற்று விளங்கும் தலம் குமர கோட்டத் திருத்தலம் ஆகும்.



இத்தலத்தில் அர்ச்சகராகப் பணியாற்றி வந்தவர் காளத்தியப்ப சிவாச்சாரியார். இவர் தமக்கு மகப் பேறில்லாக் குறை தீர்க்க வேண்டுமென அருட் பெருங்கடலாகிய குமரகோட்டத்து முருகனைப் பன்னாளும் உருகிப் பிரார்த்தித்து வந்தார். முருகப் பெருமான் திருவருளால் இவர்தம் மனைவியார் மணிவயிறு வாய்த்தது. கோளும் நாளும் நன்னிலையுற்றபோது சிவஞான பானுவாகப் பிறந்தார் ஒரு புதல்வர். அவருடைய திருநாமம் தான் கச்சியப்பர் என்பதாகும்.



காஞ்சி குமரக்கோட்டத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தை அரங்கேற்றம் செய்கிறார்

கந்தனருளால் தோன்றிய கச்சியப்பருக்கு வடமொழி, தென்மொழி ஞானம் எளிதாகக் கைவந்தது. வடமொழியில் வேதவேதாந்தங் களையும், தமிழில் இலக்கண இலக்கியங்களையும் முற்றும் கற்றுணர்ந்த பண்டிதராகத் திகழ்ந்தார் இவர்.

தந்தையாற்றிய அர்ச்சகர் பணியை இவரும் விரும்பியேற்று குமரகோட்டத்துக் கந்தக்கடவுளைச் சந்ததமும் அஞ்சுவித சுத்திகள் செய்து, ஆறுகாலங்களிலும், ஏழுவகைப் பிறப்பு நீங்கும் பொருட்டு, எண்வகை மலர்கள் சாற்றி வழிபாடுகள் செய்து வந்தார்.

ஒருநாள் கச்சியப்ப சிவாச்சாரியாருடைய கனவில் மூவருக்கும் தேவருக்கும் எட்டாத முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமான் காட்சியளித்தார்.

''அன்பனே! நமது சரித்திரத்தைக் கந்தப் புராணம் எனப் பெயரிட்டுப் பாடுக'' என்று கட்டளையிட்டார். ''திகடசக்கரம்'' என்று காவியத்தைத் தொடங்குக எனவும் திருவருள் புரிந்தார்.

கச்சியப்பர் கனவு தெளிந்து உடன் எழுந்தார், கரையற்ற இன்பக் கடல் மூழ்கியவராய் ''ஐயனே! பன்னிரு கையனே! ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினும் கடையன் ஆகிய எளியனையும் ஒரு பொருள்படுத்தி அருள்புரிந்த எம்பெருமான் திருவருளே திருவருள்'' என்று ஆனந்தக் கூத்தாடினார்.

முருகன் அருளால் முருகப் பெருமான் புகழ் பாடத் தொடங்கிய கச்சியப்பர் ஒவ்வொரு நாளும் நூறு செய்யுட்கள் பாடி, எழுதிய ஏட்டையும் எழுத்தாணியையும் அர்த்த ஜாமப்பூஜை முடிந்தபின் முருகப் பெருமான் திருவடிகளில் வைத்துவிட்டுத் திருக்கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு தமது இல்லம் செல்வார்.

மறுநாள் கோயிலுக்குள் சென்று ஏடுகளை எடுத்துப் பார்ப்பார். அதில் தேவையான இடங்களில் திருத்தப்பட்டு இருந்தல் கண்டு அதிசயம் அடைவார். கந்தவேளின் கருணையை நினைத்துக் கண்ணீர் சொரிவார். இவ்வாறு நாளும் கந்தப் பெருமானே தம் திருக்கரங்களால் திருத்தியருளிய அற்புதச் செந்தமிழ்க் காவியமாம் கந்தப் புராணத்தைப் பாடி முடித்தார் கச்சியப்பர்.

இவ்வாறு நிறைவுபெற்ற கந்தப்புராணக் காவியத்தைக் குமரகோட்டத்திலேயே அரங்கேற்றுவது என முடிவுசெய்யப்பட்டு, அரங்கேற்ற நாளும் குறிக்கப்பட்டது.

காஞ்சிமாநகரே விழாக்கோலம்

பூண்டிருந்தது. குமரகோட்டத்தில் அருளாளர்கள், சான்றோர்கள், சமய ஆர்வலர்கள் யாவரும் நிறைந்திருக்க முருகப் பெருமான் அடிஎடுத்துக் கொடுத்த பெருமைக்குரிய முதற் பாடலைப் பாடினார்கச்சியப்பர்.

''திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்'' என்னும் முதற்பாடல் வரியைப் படித்து அதற்குத் திகழ் தசக் கரம் செம்முகம் ஐந்துளான் என்று பதம் பிரித்து, பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களும் கொண்ட சிவபெருமான் என்று பொருள் விளக்கம் கூறினார் கச்சியப்பச் சிவாச்சாரியார்.

''நிறுத்தும்'' என்று தடுத்தவாறு எழுந்த ஒரு தமிழ்ப் புலவர், திகழ்தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய இலக்கண நூலில் இல்லையே! அவ்வாறு இல்லாதபோது எப்படி திகடசம் எனப் பாடலாம்? என்று, முதற்கோணல் முற்றிலும் கோணல் எனக் குறை கூறிச்சீறினார்அத்தமிழ்ப் புலவர்.

கச்சியப்பருக்குப் பதில் என்ன கூறுவதெனத் தெரியவில்லை. ''ஐயா, இம்முதலடி என் வாக்கன்று; இது தமிழ்க் கடவுளாம் முருகனே தந்தவாக்கு'' என்றார்.

''முருகனே தந்த முதலடியாயின் அவரே வந்து இதற்குச் சமாதானம் கூறட்டும். இல்லையேல் இதனை அரங்கேற்ற விடமாட்டேன்'' என்று அடாவடி செய்து நின்றார்அத்தமிழ்ப் புலவர்.

''இதற்குச் சமாதானம் கூறி நாளை அரங்கேற்றுவோம்'' என்று கூறிய கச்சியப்பர் மிகுந்த மனவேதனையுடன் இல்லம் சென்று, உள்ளஉலைச்சலுடன் முருகனைத் தியானித்தவாறு கண் அயர்ந்தார்.

அப்போது ''அன்பனே! வருந்தாதே! வீரசோழியம் எனும் இலக்கண நூலில் திகழ்தசம் திகடசம் என்று புணர்தற்கு விதி உள்ளது. அந்த இலக்கண நூலுடன் நாளை யாமே வந்து அரங்கேற்றம் நிகழச் செய்வோம்'' என்று அசரீரியாக மொழிந்தார்முருகக்கடவுள்.

மறுநாள் காலை அரங்கேற்றம் நிகழ்ந்த மண்டபத்தில் கட்டுக் கடங்காமல் கூட்டம் திரண்டு இருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தவொரு தமிழ்ப்புலவர் - முருகப்புலவர் - வீரசோழியம் நூலைக் கச்சியப்பர் கைகளில் தந்தார், மறைந்தார்.

சந்திப்படலத்தின் பதினெட்டாம் செய்யுள் திகழ்தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு இலக்கணம் கூறியது, வாதிட்ட தமிழ்ப் புலவர் வாயடங்கினார். வந்திருந்த புலவர்களெலாம் வியப்புற்று நின்றார்கள்.

முத்தமிழ் முருகனே அடி எடுத்துக் கொடுத்த அற்புதக் காவியம் கந்தப் புராணம் என்பதை யாவரும் உணர்ந்து கச்சியப்பரைக் கொண்டாடிப் புகழ்ந்தார்கள்.

''முருகன் அருள்பெற்ற முனிவரே! தங்கள் பெருமை அறியாது தடை செய்தேன்'' என்று கூறிவருந்தினார்தமிழ்ப் புலவர்.

''தாங்கள் தடுத்ததால் அன்றோ முருகன் திருவருளை யாவரும் உணர முடிந்தது'' என்று சமாதானம் கூறினார்கச்சியப்ப சிவாச்சாரியார்.

தமிழ்ப் புலவராய் வந்த குமரகோட்டத்து முருகனையும், அற்புதக் காவியமாம் கந்தப் புராணம் அரங்கேறிய அருமை மண்டபத்தையும் இன்றும் குமரகோட்டம் சென்று பக்தர்கள் தரிசித்துப் பேரின்பம் பெறலாம்.

கந்தப் புராணக் காவியம் பாற்கடல் போன்றது. பாற்கடலில் திருமகளும், சரசுவதியும், அமிர்தமும் தோன்றியது. கந்தப் புராணக் கலைக்கடலைப் பயில்வோர் கல்விக் கடவுளாம் சரசுவதியின் திருவருளும், செல்வக்கடவுளாம் திருமகளின் பேரருளும் ஒருங்கு பெற்று, இரு செவிக்கும், நாவிற்கும் இன்பமாம் அமிர்தமாம் கந்தப்புராணப் பாடல் இன்பத்தில் தோயலாம் என்று கந்தப் புராணத்தைக் கொண்டாடுகின்றனர்சான்றோர்.

**''உச்சித மாம் சிவ வேதியன் காளத்தி**
**ஓங்கு மைந்தன்**
**கச்சியப்பன் செய்த கந்தப் புராணக்**
**கலைக் கடலில்**
**மெச்சிய கல்விமதியும் வெண்தாமரை**
**மேவு மின்னும்**
**இச்செவி நாவினுக்கு இன்பாம் அமுதும்**
**எழுந்தனவே''**

## அக்பர் தீபாவளிக்குச் செய்த சிறப்பு



தீபாவளி தினத்தை அரசு விடுமுறை என அறிவித்துப் பட்டாசு வெடித்துக் கொண்டாடுவதை உற்சாகப்படுத்தினார் மொகலாயச் சக்கரவர்த்தி அக்பர். இதனை அவர் எழுதிய 'அயினி அக்பர்' என்ற நூல் கூறுகிறது.


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# தீபாவளி : தத்துவ விளக்கம்

பாம்பனார் - வாரியார் அடிப்பொடி சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன்

தீபாவளி பண்டிகையைப் பற்றிப் பல விளக்கங்கள் வந்துள்ளன. நரகாசூரனின் தாயார் தன் பிள்ளை இறந்தவுடன் புத்திர சோகத்தினால் அழும்போது உலகம் துக்கப்படாமல் இன்பமாய் இருக்க அவள் வேண்டிக் கொண்டதால் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்பது மிகப் பெரிய விளக்கமாக உள்ளது.

நம்மைக்காட்டிலும் உலக நலம்தான் பெரியது என்ற ஞானத்தைக் காட்டும் பண்டிகை தான் தீபாவளி. உலக நலம் ஏற்படுவதற்குத் தன்னலமற்ற சேவை, தியாக மனப்பான்மை, ஒற்றுமை உணர்வு, சகோதரத்துவம் முதலியவைகள் அவசியம்.

தீபாவளி என்றால் தீபம் + ஆவளி - தீபங்களை வரிசையாக வைத்து வணங்குவது ஆகும். இறைவனைத் தீபமாகக் கருதி வழிபடுவது பண்டைக் காலத்திலிருந்தே ஏற்பட்ட மரபாகும்.

திருக்கோயில்களில் வழிபாட்டின் இறுதியில் தீபாராதனை செய்வது இன்றும் நடை பெறுகிறது. திருமணமான பெண்டிர் பலரும் சேர்ந்து திருக்கோயில்களில் ஒவ்வொருவரும் தனித்தனி விளக்குகள் ஏற்றி, அவைகளுக்கு அர்ச்சனை செய்து, தங்களின் திருமண வாழ்வு நீடித்து இன்பமாக இருக்க வேண்டுமென்று வழிப்டுவது வழக்கம்.

உயிரினங்களுக்கு வெளிச்சம் அவசியம். பொதுவாகத் தாவரங்கள், பறவைகள், விலங்குகள் வெளிச்சத்தைக் கண்டு மகிழ்கின்றன. இரவில் மரங்களில் ஓய்வெடுக்கும் பறவைகள் பொழுது புலர்ந்ததும் மரங்களை விடுத்து மகிழ்ச்சியுடன் பறந்து செல்கின்றன. சூரிய வெளிச்சம் ஏற்பட்டவுடன் பூக்கள் மலர்கின்றன. இருட்டறை யிலுள்ள தாவரம் அவ்வறையின் சிறிய துவாரத்தின் வழியாக வரும் வெளிச்சத்தை நோக்கிப் பரவுகிறது.

உலகம் உய்வதற்காக சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு நெருப்புப் பொறிகள் ஆறு குழந்தைகளாக மாறி, அவைகளை உமையம்மை தம் கைகளால் அணைத்து கந்தப் பெருமானாகத் தோற்றம் அளிக்கச் செய்தார் என்று காசி குமரகுருபர சுவாமிகளின் கந்தர் கலிவெண்பா கூறுகிறது. சிவபெருமானை நெருப்பாகவும், உமையம்மையை நெருப்பின் சூடாகவும், விநாயகரை நெருப்பின் சிவப்பு நிறமாகவும், முருகப் பெருமானை நெருப்பின் வெளிச்சமாகவும் சைவர்கள் கருதுகிறார்கள்.

மகாபாரதத்தில் பகாசூரனை வெற்றிக் கொண்ட பீமனுக்குத் தீபவிளக்குகளைக் கையில் ஏந்திப் பெண்கள் வரவேற்பு அளித்தனர் என்று கூறப்படுகிறது. கைகளில் தீபம் ஏந்திப் பெண்கள் புதுமனையில் புகுவது (கிரகப்பிரவேசம்) மரபாக உள்ளது.

சிவலிங்க வடிவில், மேல்பாகம் சிவஜோதி என்றும், நடுப்பாகம் அருள் ஜோதி என்றும், அடிப்பாகம் ஆத்ம ஜோதி என்றும் கருதப் படுகின்றது. குத்துவிளக்கின் அடிப்பாகம் பிரம்மா என்றும் நடுப்பாகம் திருமால் என்றும் மேல்பாகம் சிவன் என்றும் போற்றப்படுகிறது. குத்துவிளக்கின் மேல் பாகத்தின் ஐந்து பிரிவுகள் சிவபெருமானுடைய ஐம்முகங்களாக வழிபாடு செய்யப்படுகிறது. இந்த அடிப்டையில் கன்னியா குமரியை அடுத்துள்ள சுசீந்திரத்தின் இறைவன் தாணுமால் அயன் என்று வணங்கப்படுகிறார். (தாணு-சிவன்; மால்- திருமால்; அயன் - பிரம்மா).

நவீன மருத்துவ முறைகளில் பல்வேறு வியாதிகளைக் குணப்படுத்த ஒளிக்கதிர்கள் உபயோகப்படுகின்றன.



பிரம்மாவும், திருமாலும், தங்களுக்குள் யார் பெரியவர் என்று விவாதித்த போது அவர்கள் எதிரில் ஒரு பெரிய ஜோதி தோன்றியது. அந்த ஜோதியின் முடியைக் காண பிரம்மா அன்னப் பறவையாகவும், ஜோதியின் அடியைக் காணத் திருமால் பன்றி யாகவும் உருவெடுத்து முயற்சி செய்தும் இருவரும் வெற்றியடையவில்லை. இதனால் இவ்விருவரும் தங்களின் சிறுமையை உணர்ந்தனர். இவ்வரலாறு சைவத் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

தீபத்தை வரிசையாக வைத்துச் சிவபெருமானை வழிபடுவது தீபாவளி பண்டிகை ஆகும். கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள எட்டு சிவ விரதங்களில் கேதாதர கௌரி விரதம் தீபாவளியைக் குறிக்கும். இதை மக்கள் பலரும் தீபாவளி தினத்தன்று கொண்டாடி வருகின்றார்கள்.

# கலையழகு மிக்க தேவிகாபுரம் கோயில்கள்

கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், தொல்லியல்துறை, சென்னை - 8.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியிலிருந்து 23 கி.மீ. தொலைவிலும், போளூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவிலும் கலையழகு மிக்க சிற்பங்களுடன் காட்சிதரும் தேவிகாபுரம் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. இங்குக் கோயில் கொண்டு விளங்கும் இறைவன் கனககிரீசுவரர் என்றும், இறைவி பெரியநாயகி அம்மன் எனவும் போற்றி அழைக்கப் படுகின்றார்கள். சென்னையிலிருந்து வந்தவாசி-சேத்பட் வழியாகவும் இத்தலத்திற்கு வரலாம்.



**புராண வரலாறு :**

உக்கிரசேனன் என்னும் அரசன் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து கன்னியர்களில் சிறந்தவளாகப் போற்றப்படும் தேவகி என்ற புதல்வியைப் பெற்றதால் இத்தலம் தேவகிபுரம் என வழங்கப்பட்டது. பிற்காலத்தில் பெயர் மறுவி தேவிகாபுரம் எனப்பட்டது என்று கூறப்படுகிறது.

கம்சனுடைய கொடுமைகளைத் தாங்காமல் தேவகி ஈசனை வழிபட, கண்ணனே குழந்தையாக அவதரித்து இன்னல்களைக் களைந்தார். இவ்வாறு தேவகி தவம் செய்ததால் இவ்வூர் தேவிகாபுரம் என அழைக்கப்படுவதாகச் செவிவழிச் செய்தி கூறுகின்றது.

தேவியாகிய உமை ஈசனை அடைய இப்பகுதியில் தவம் இருந்ததாகவும், எனவே இவ்வூர் தேவிகாபுரம் எனப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இறைவியாகிய உமை தவம் செய்யும் கோலத்தில் தூண்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. மேலும் காளி, துர்க்கை போன்ற தேவியின் பல்வேறு வடிவங்கள் காணப்படுவதால் இக்கோயில் சக்தி வழிபாட்டுக்கு உயரிய இடம் அளித்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

**கல்வெட்டுகள் :**

இக்கோயிலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள், இங்கு நடைபெற்ற வழிபாடு போன்றவை விரிவாக எடுத்துரைக்கப் படுகின்றன.

கல்வெட்டுகளில் இவ்வூர் ''தேவக்காபுரம்'' என அழைக்கப்படுகிறது. இப்பெயரே காலப்போக்கில் மாற்றம் பெற்று தேவிகாபுரம் என அழைக்கப் பட்டிருக்க வேண்டும். 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப், பல்குன்றக் கோட்டத்தில், மேல் குன்றா நாட்டு முருகமங்கலப்பற்று - ராஜ கம்பீரன் மலைக்கு அடுத்தது' என இவ்வூரின் இருப்பிடம் பற்றி குறிப்பிடப்படுகிறது.

விஜய நகர மன்னர்கள் கிருஷ்ணதேவராயர், அச்சுத தேவராயர், சதாசிவராயர் போன்றோர் இக்கோயிலுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளனர்.

கோயில் நிர்வாகம் செய்பவர் 'கோயில் கேள்வி' என அழைக்கப்பட்டார். திருவாதிரை நாளிலும், கார்த்திகை தீபத் திருவிழா நாட்களிலும் கோயிலில் திருவிளக்குகள் ஏற்றுவதற்கு நெய் தானமாக அளிக்கப்பட்டது. இவ்விளக்குகளைப் பராமரித்தவர்கள் 'திருவிளக்குக் குடிகள்' எனப் பட்டனர். 'பட்டாடை நூல் ஆயம்' என்ற வரியிலிருந்து வரும் வருவாய் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டது.

கோயில் நிலங்கள் 'உழவுக் காணியாக' அளிக்கப்பட்டது. அதிலிருந்து வரும் நெல், ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட அளவு கோயிலுக்கு அளிக்க வேண்டும் எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. வெங்கடதேவ மகாராயர் என்பவர் கோயிலுக்கு நிலங்கள் அளித்த பொழுது நிலத்தின் அருகே குளம் - கிணறுகள் அமைத்து விவசாயம் சிறப்பாக அமைய வழிவகை வகுத்து, கோயிலுக்கு அளித்த செய்தி குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. இக்கோயிலின் பணிகளைச் சிறப்பாகப் பொறுப்பு ஏற்று நடத்தியவர் திருப்பணி வாசுவன உடையார் என்பவர் என்பதையும் அறிகிறோம். மராட்டிய மன்னர் துளஜாராஜா காலத்தில் அம்பாள் சன்னதியில் திருப்பணிகள் செய்ததையும் அறிய முடிகிறது.

## கங்கா ஸ்நானம்



தீபாவளித் திருநாளில் அதிகாலையில் நீராடுதல் கங்கா ஸ்நானப் பலனைத் தரும். ஆகவேதான் கங்கா ஸ்நானம் ஆச்சா? என்று இந்நாளில் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொள்வது வழக்கமாக உள்ளது. தீபாவளித் திருநாளில் அதிகாலையில் தைலம் தேய்த்து நீராடுவோர் பத்து அசுவமேத யாகம் செய்த பலனைப் பெறுவர் என்று புராணங்கள் கூறுகின்றன.


இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் 'வசந்தமண்டபம் - திருமலை உடையார்', திருமலை உடைய நாயனார், ஸ்ரீகிரீசுவரர், திருமலை நாயனார் என்றும், அம்பாள் பெரிய நாச்சியார் எனவும் அழைக்கப்படுவதைக் கல்வெட்டுக்களில் காணலாம்.

காஞ்சிபுரத்திற்குத் தெற்கு எல்லையாக இத்தலம் விளங்குவதாகக் காஞ்சிப்புராணம் கூறுகிறது. இத்தலத்தைச் சுற்றி மல்லிகார்ச்சுன சுவாமி ஆலயம், வில்வாரணி மலை, பூண்டி, சம்பத்கிரிமலை (போளூர்), படைவீடு, குன்னத்தூர் மலை ஆகிய தலங்கள் அமைந்துள்ளன. இவை **'சப்த கைலாசம்'** எனச் சிறப்பித்துப் போற்றப் படுகின்றது.

**கனக கிரீசுவரர் கோயில்:**

இத்தலத்தில் இரு கோ்யில்கள் உள்ளன. இவ்வூரில் உள்ள சிறு குன்றின் மீது கனககிரீசுவரர் கோயில் அமைந்துள்ளது. இறைவன் பொன்மலை நாதர் எனவும் அழைக்கப்படுகிறார். கோயிலுக்குச் செல்ல 320 படிகளே உள்ளன. கிழக்கு நோக்கிய திருக்கோயில், இருபிரகாரங்கள். மூன்று நிலை திருக்கோபுரம். திருவாயிலின் முன்பு பலிபீடம், கொடிமரம், நந்தி மண்டபம் ஆகியன உள்ளன. வாயிலின் முன்பு உள்ள 36 கால் மண்டபத்துத் தூண்களில் வீரபத்திரர், சிவபெருமானின் பல்வேறு வடிவங்கள். திருமாலின் வடிவங்கள் அழகிய படைப்புச் சிற்பங்களாக (Relief Sculpures) காணப்படுகின்றன.





இவற்றின் அழகைக் கண்டு மகிழ்ந்து உள்ளே செல்கிறோம். முதல் திருச்சுற்றில் சப்தமாதர், விநாயகர், ஆறுமுகன், விசாலாட்சி அம்மன், சண்டிகேசுவரர் சன்னதிகள் உள்ளன. இங்கே கோயில் கொண்டு விளங்கும் ஆறுமுகப் பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிப் பாடியுள்ளார்.

கருவறையில் இறைவன் சுயம்பு வடிவில் காட்சி தருகிறார். முன்னொரு காலத்தில் இப்பகுதியில் வேடன் ஒருவன், மலை மீது தோண்டும் பொழுது கோடரிப்பட்டு இரத்தம் வெளிப்படுகிறது. இறைவன் சுயம்பு வடிவாகக் காட்சி தருகிறார். மன்னன் ஒருவன் இக்கோயிலைக் கட்டும்பொழுது சுயம்பு வடிவான இறைவன் காணவில்லை. எனவே மன்னன் காசிவிஸ்வநாதரை ஸ்தாபித்து வழிபட்டாராம். பிறகு சுயம்பு வடிவமாக இறைவன் தென்படவே, கருவறையில்



# திருச்செம்பூர் திருமுருகன் திருக்கோயில்

குன்றுதோறும் ஆடிவரும் குமரன் மும்பையில் குடியிருக்கும் இடத்தில் குன்று இல்லாத காரணத்தால் நிலப்பரப்பில் இருந்து 51 அடி உயரத்தில் அமைந்த மேல்தளத்தில் கோயில் கொண்டுள்ளான்.

முருகன் சந்நதியை அடைய 108 படிகள் ஏறிப் போக வேண்டும். வயதானவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் லிப்ட் வசதி செய்யப் பட்டுள்ளது. ஒவ்வொரு படியிலும் ரூ.1001 நன்கொடை கொடுத்தவர்கள் பெயர்கள் எழுதப் பட்டிருக்கிறது. படிகளின் மீது ஏறுகையில், சுவற்றின் இரு பக்கங்களிலும் முருகனின் வீரச் செயல்கள், விளையாட்டுக்கள், அருள் பாலித்தல் நிகழ்ச்சிகள் வண்ண ஓவியமாக சுதபிம்பங்கள் காட்சி அளிக்கின்றன.



இரண்டு சிவலிங்க வடிவங்களை வழிபடும் அற்புதத்தை இங்கே காணலாம்.

மேலும் கருவறையில் சிவலிங்க வடிவை உருத்திராக்கத்தாலும் அமைத்து அதனையும் வழிபாடு செய்து வருகின்றனர். இறைவன் சுயம்பு வடிவாக தோன்றிய பொழுது வெண்ணீரால் அபிஷேகம் செய்து சுத்தம் செய்தனராம். இன்றும் கருவறையில் இறைவனுக்கு வெண்ணீரால் அபிஷேகம் நடைபெற்று வருவது சிறப்பானது.

கருவறை மற்றும் மண்டபங்கள் விஜயநகர காலக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இக்கோயில் கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டில் 1889-ம்ஆண்டு நவம்பர் 29ம் தேதி ஆரணி ஜாகீர்தார் அபிநவ பூர்ணபிரியர் சீனிவாசராவ் சாகேப் அவர்களால் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்ற குறிப்பு காணப்படுகிறது.

இம்மலையிலிருந்து பார்த்தால் பெரியநாயகி அம்மன் கோயில் தோற்றம், அருகில் உள்ள ராஜகம்பீரன்மலை போன்றவைகளும், இயற்கை அழகுடன் மன மகிழ்ச்சியை அளிக்கிறது. இம்மலையைச் சுற்றிக் கிரிபிரதட்சணம் செய்தால் தீராத நோய்களும் இறை அருளால் நீங்குகிறது. செவ்வாய்க் கிழமைகளில் இத்தகைய கிரிபிரதட்சணம் நடைபெற்று வருகிறது.

**பெரியநாயகி அம்மன்:**

தேவிகாபுரத்தின் ஊரின் நடுவே ஏழுநிலை கோபுரத்துடன் பெரியநாயகி அம்மன் கோயில் காட்சி தருகிறது. கிழக்கு நோக்கிய கோயில். கோபுரவாயிலின் முன்புறம் அமைந்துள்ள தேர் முட்டி மண்டபம் இருபக்க படிக்கட்டுகளுடன் காட்சி தருவது குறிப்பிடத்தக்கது. அதன் அருகே நான்கு கால் மண்டபம். திருவீதி உலா வரும் பொழுது இறைவன் இம்மண்டபத்திற்கு எழுந்தருளியிருந்து பொதுமக்களுக்குக் காட்சி அளிக்கும் வைபவம் நடைபெறும். கோயில் மதிற் சுவற்றில், யானை, குதிரை, வராகம் (பன்றி) மூன்று வரிசையாக தொடர்ந்து செல்வது போல் வரிசையாக புடைப்புச் சிற்பம் காண்பது அரிய காட்சியாகும். இதன் முடிவில் வராகத்திற்கு அருகே கட்டாரியும் மேலே சூரியன் - சந்திரன் ஆகியவை செதுக்கப்பட்டுள்ளது. இது விஜய நகர மன்னர்களின் அரசமுத்திரை (இலச்சினை) ஆகும். இக்கோயில் விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டதற்கு அடையாளமாக விளங்குகிறது.

கோபுரவாயில் ஒரு சிற்ப களஞ்சியம் என்றால் மிகையில்லை. வாயிலின் இரு பக்கங்களிலும் பைரவர், காளி, அஷ்டபுஜ துர்க்கை, அதிகாரநந்தி, சிவபெருமானின் பல்வேறு வடிவங்கள், நரசிம்மர் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் என அழகிய சிற்பங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சி தருகிறது. சைவ-வைணவ வழிபாட்டு ஒற்றுமைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

**திருவிழாக்கள்:**


சித்திரை மாதத்தில் தமிழ்வருடப் பிறப்பு, வைகாசி மாதத்தில் ஞானசம்பந்தர் குருபூஜை, ஆனிமாதத்தில் திருமஞ்சனம், ஆடிப்பூரம், ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் அன்னாபிஷேகம், கார்த்திகை தீப உற்சவம், மார்கழி திருவாதிரை, தைப் பொங்கல் திருநாள், மாசி மாதத்தில் சிவராத்திரி, பங்குனி மாதத்தில் உத்திரத் திருவிழா ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பங்குனி மாதத்தில் நடைபெறும் உத்திரத் திருவிழாவில் மக்கள் அனைவரும் இறைவிக்குப் பூமாலை சார்த்திப் பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். பெண்கள் திருமணம் ஆகவும், திருமணம் ஆன பெண்கள் குழந்தை பேறு அடையவும் இவ்வேண்டுதலை நிறைவேற்று கின்றனர். அருள் பெறுகின்றனர். இப்பகுதி மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும் திருவிழா இது.

கலையழகு மிக்க சிற்பங்கள், சிறப்பான வழிபாடு, அமைதியான சூழ்நிலை, உடல் நலம் வேண்டிக் கிரிபிரதட்சணம் ஆகியவற்றுக்கு சிறப்பான தலமாக தேவிகாபுரம் பெரியநாயகி சமேத கனககிரீசுவரர் திருக்கோயில் விளங்குகிறது.

## சிவபெருமானை வழிபடும் எட்டு விரதங்கள்

1. சோமவார விரதம்
2. உமாமகேஸ்வர விரதம் (கார்த்திகை பௌர்ணமி)
3. திருவாதிரை விரதம் (மார்கழி)
4. சிவராத்திரி விரதம் (மாசி)
5. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)
6. பாசுபத விரதம் (தைப்பூசம்)
7. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்ச அஷ்டமி)
8. கேதார மாவிரதம் (தீபாவளி)



# சிவன் திருக்கோயில்களில் செய்யத் தகுவனவும், தகாதனவும்

சித்தாந்தப் பேரறிஞர் தி.சு. கோவிந்தசுவாமி

**செய்யத் தகுவன :**

1) நீராடித் தூய ஆடை உடுத்தி சைவ சமயச் சின்னங்களான திருநீறு உருத்திராக்கம் அணிந்து கொள்வது.

2) மலர்கள், தேங்காய்ப் பழம், வாசனை பத்தி, தீபமிட எண்ணெய், நெய் இவைகளில் எவையேனும் கொண்டு போவது.

3) கோபுரவாயிலினுள் செல்லுமுன் கை கால்களைக் கழுவிப்பின், தலைக்கு மேல் இரண்டு கைகளையும் கூப்பிக் கோபுரத்தை வணங்கி உட்செல்லுதல்.

4) ஐந்தெழுத்தை மனதில் செபித்தல்

5) முதலில் கொடி மரத்தின் பக்கமாய்ப் பூமியில் வீழ்ந்து வணங்குதல்

6) தலவிநாயகரைத் தரிசித்து 3 முறை தலையில் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போடுதல்

7) கொடிமரம் பலிபீடம் நந்தி இவைகளை வணங்கியபின் துவார பாலகரின் உத்தரவு பெற்றுச் சிவபெருமான் சன்னதி போவது, திருமுறைகள் ஓதி வழிபடுதல்.

8) மூலமூர்த்தியை வணங்கியபின் சந்திர சேகரர், நடராசர், சிவகாமியம்மை, சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகளை வணங்குதல்.


9) பின், அறுபத்துமூன்று நாயன்மார்கள், தட்சிணாமூர்த்தி, முருகன், சண்டேசுவர், நவக்கிரகங்கள் முதலியோரை வழிபடுதல்.

10) அம்பாள் சந்நிதியை அடைந்து தேவியை வழிபடுதல்.

11) இறைவன், தேவி கோயில்களில் மூன்று முறை வலம் வருதல்.

12) ஒவ்வொரு சந்நிதியிலும் அந்தந்தத் தெய்வத்துக்குரிய தோத்திரப் பாடல்களைப் (மற்றவரின் அமைதிக்குப் பங்கம் வராமல்) பாடுதல் , மற்ற நேரத்தில் ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டே இருப்பது அல்லது திருவாசகம் சிவபுராணத்தை ஓதிக் கொண்டும் வரலாம்.

13) கடைசியாக கொடி மரத்தருகில் வந்து பூமியில் விழுந்து வணங்கி இறைவனிடம் விடை பெறுதல்.



14) வணங்கியபின் சற்று தூரத்தில் அமர்ந்து ஐந்தெழுத்தை 108 முறைக்குக் குறையாமல் செபித்தபின் கோயிலை விட்டு வெளியேறுதல்.

15) சைவசமயப் பிரசாரம் செய்தல், செய்வித்தல்,

16) சிவன் கோயில்களை முறைப்படி பாதுகாத்தல்.

**செய்யத் தகாதன :**

1) கோபுர வாயிலுக்குள் காலணி முதலிய வற்றோடு செல்லக்கூடாது.

2) சமயச் சின்னங்கள் (திருநீறு, உருத்திராக்கம்) அணியாமல் போகக் கூடாது.

3) வம்பு பேசுதல், சண்டை போட்டுக் கொள்ளல், வேகமாக நடத்தல், இடித்துத் தள்ளிக் கொண்டு போதல், எச்சில் துப்புதல் முதலியவற்றைச் செய்யக் கூடாது.

4) நிர்மாலியம் (இறைவனுக்கு அணிந்து களைந்து போட்டிருப்பது) வில்வம் அபிஷேகத் தீர்த்தம் இவைகளை மிதிக்கக் கூடாது.

5) சண்டேசுவரர் முன்பு துணியைக் கிழித்துப் போடுவது கூடாது.

6) விக்கிரங்களைத் தொட்டுக் கும்பிடுவதும், மலரிடுவதும், அவைகளுக்கு வெகு அருகில் சூடத்தைக் கொளுத்துவதும் கூடாது. தூண்களிலுள்ள உருவங்களை வழிபடக் கூடாது.

7) பலிபீடம், நந்தி இவைகளுக்கும் இறைவனுக்கும் குறுக்கே செல்லக் கூடாது. இவைகளுக்கு இடையில் பூமியில் விழுந்து வணங்குவது கூடாது.

8) ஒரு கையால் கும்பிடுதல், ஒருமுறை வலம் வருதல் இவை கூடாது.

9) பொருத்தமில்லாத பாடல்களை வழிபடும் மற்றவருக்கு இடையூறாக உரக்கவும் பாடக் கூடாது.

10) திருக்கோயிலுக்குள்ளிருக்கும் மூர்த்திகளைத் தவிர கோவிலுக்குள் எவரையும் கீழே விழுந்து வணங்குதலும் கும்பிடுதலுங் கூடாது.

# ஆன்மீகமே வாழ்க்கையின் அடிப்படை



''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

ஒருவர் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம் ஆன்மீகமாக இருப்பின் அந்த வாழ்க்கை செழிப்பாகவும், சுகமாகவும் இருக்கும் என்று கற்றுணர்ந்தோர் சொல்கிறார்கள்.

வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமாக பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. அதிகாரம் ஒரு விஷயமாக இருக்கிறது. பணம் இன்னொரு விஷயமாக இருக்கிறது. போகங்கள் சிலருக்கு முக்கியமாக இருக்கின்றன.

எதிர்மறையாக இருத்தலே உயர்வு என்ற எண்ணமும், வாழ்க்கையின் அடிப்படையான ஆதாரமாகச் சிலருக்கு இருக்கிறது.

ஆனால், கடவுளை அறிதல் அல்லது எங்கும் நிறைந்து இருக்கின்ற இயற்கையின் பிரம்மாண்டத்தை உணர்தல் என்பதை வாழ்க்கையில் ஆதாரமாகக் கொண்டால் இங்கு சண்டைச் சச்சரவுகள் குறைவாக இருக்கும். பிரச்சினைகள் மெல்லியதாக இருக்கும்.

இப்படி அடிப்படையான ஒரு விஷயத்தை இளம் வயதிலிருந்தே ஆரம்பிப்பது மிகச் சிறந்தது. வீட்டிலுள்ள சிறு குழந்தைகளுக்குப் பெரியோர்கள் வற்புறுத்தி, வலியுறுத்திக் கடவுள் நம்பிக்கை கொடுத்து, கதைகள் சொல்லி அவர்களை பூஜை செய்யும் பழக்கத்திற்கோ அல்லது மந்திர ஜபம் செய்யும் பழக்கத்திற்கோ பழக்கப்படுத்தினால் தான் வளர்ந்து பெரியவர்களாகும் போது அவர்களுக்கு அந்த விஷயங்கள் மிகுந்த உதவியாக இருக்கும்.

எட்டுமணி பள்ளிக்கூடத்துக்கு ஏழு மணிக்கு எழுந்து, ஏழே முக்காலுக்கு உணவு உட்கொண்டு எட்டு ஐந்திற்கு பள்ளிக்கூடத்தில் நுழைவது என்பது மிகப்பெரிய மனப் பதட்டத்தை, உடல் சூட்டை அதிகரிக்கின்ற விஷயம். குறைந்த பட்சம் ஆறு மணிக்காவது எழுந்திருந்தால் தான் நிதானமாய் எட்டு மணிக்கு வகுப்பறையில் வியர்வை வழியல் இல்லாமல் அமர முடியும். அமர்ந்த ஐந்தாவது நிமிடத்தில் பாடத்தோடு ஒன்ற முடியும்.

''புள்ள, படுக்கும்போதே பன்னிரெண்டு மணி'' என்று அம்மா சொல்கிறாள்.

பன்னிரெண்டு மணிவரை வீட்டில் டி.வி. சீரியல் ஓடிக் கொண்டிருந்தால், எந்தக் குழந்தைக்கும் தூக்கம் வராது. அது எட்டு மணி வரை தூங்குகின்ற பழக்கத்தைத்தான் ஏற்படுத்தும்.

பிள்ளை பாடம் தான் படித்துக் கொண்டு இருந்தான் என்றால், பன்னிரண்டு மணிக்குத் தூங்கிய குழந்தை ஆறு மணிக்கு எழுந்திருப்பதில் எந்தச் சிரமமும் இல்லை. அந்த ஆறுமணி நேரத் தூக்கம் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்துவிடும்.

பள்ளிக்குக் கிளம்ப இரண்டு மணிநேர அவகாசம் இருக்கும் போது பத்து நிமிடம் பிரார்த்தனையில் நிச்சயம் ஈடுபட முடியும்.

எதற்குப் பிரார்த்தனை?

வெற்றியடையும்போது மமதை ஏற்படாமல் இருக்கவும், தோல்வி ஏற்பட்டால் துவண்டு போகாமல் இருக்கவும், இந்தப் பிரார்த்தனை பெரிதும் உதவி செய்யும். தானே தன் இயக்கத்தின் பலம் என்பதை மறந்துவிட்டு, தனக்கு மேல் ஒரு சக்தியிருக்கிறது அதனால் இயங்குகிறோம் என்று தெளிவாகிவிட்டால் இயல்பாக ஒரு அடக்கம் வரும். அந்த அடக்கம் அமைதியைத் தரும். அந்த அமைதி நன்றாக யோசனை செய்ய வைக்கும். பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும்.

ஆனால், தமிழ்நாட்டில் ஒரு அபத்தமான கருத்து நிலவி வருகிறது. ஆன்மீகம் என்பது வயதானபிறகு கொண்டாடப்பட வேண்டிய விஷயம் என்று பலரும் நினைக்கிறார்கள்.

''ஏன், ஸார் இப்போதெல்லாம் ஆன்மீகமா எழுத ஆரம்பிச்சுட்டீங்க'' என்று என் கதைகளைப் படித்துவிட்டுச்சிலர் பேசுகிறார்கள்.

''இப்பொழுதெல்லாம் என்றால், எனக்கு நரைத்தபிறகு நான் ஆன்மீகம் எழுதலாம் என்று சொல்கிறீரா?''. நான் அவரை வாய் கிளறி

## கடலில் மிதந்து வந்த கொடிமரம்

திருச்செந்தூர் முருகன் இலங்கை மன்னன் கண்டியரசன் கனவில் தோன்றிச் 'சந்தன மரம் ஒன்றை வெட்டிக் கடலில் மிதக்கவிடு' என்று ஆணையிட்டார்.

அவ்வாறே அம்மன்னன் சந்தன மரமொன்றை வெட்டிக் கடலில் மிதக்கவிட்டான். அம்மரம் கடலில் மிதந்து வந்தது.



திருச்செந்தூர் கடலோரத்தில் நீந்திக் கொண்டிருந்த எருமை ஒன்று சந்தன மரத்தைத் தள்ளிக் கொண்டு வந்து கரைசேர்க்க முருகப் பெருமான் அசரீரியாக உரைத்த ஆணை வழி அச்சந்தன மரத்தையே திருச்செந்தூர் ஆலயக் கொடிமரம் ஆக்கியுள்ளனர். இவ்வற்புதம் திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூலில் இடம் பெற்றுள்ளது.


தங்கத்தகடுகள் பொதியப்பட்ட சந்தனக் கொடிமரத்தைத் திருச்செந்தூரில் இன்றும் பக்தர்கள் கண்டு வழிபடலாம்.

விசாரிப்பேன்.

அவர் என்னைச் சரிவரப் படித்திருக்க மாட்டார். என் முதல் நாவலே கூட ஆன்மீகச் சிந்தனைகளால் அடுக்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியாது.

சமூக நாவல் எழுதும் போது அதில் ஆன்மீகக் கருத்து இருக்கக் கூடாது என்று எந்தச் சட்டமும் இல்லை. அவ்வாறே நான் எழுதியிருக்கிறேன் என்பதும் உண்மை. அவர்களாகவே எனக்கு வயதாகி விட்டது. நான் ஆன்மீகம் எழுதுகிறேன் என்று தீர்மானித்து விட்டார்கள். வாலிபப் பருவத்தில் நான் உல்லாசக் கதைகள் எழுதியதாகவும், ஒரு அபிப்ராயத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

பள்ளிக்கூட வயதிலெல்லாம், படித்துத் தூங்கிவிட்டு, வாலிப வயதில் விதம் விதமாக கனவு கண்டு மத்திம வயதில் குடும்பப் பொறுப்பு ஏற்று திசைதெரியாமல் உழன்று வயதானபிறகு ஆன்மீகம் ஏற்றுக் கொள்வதுதான் சிறப்பு, அது தான் மரியாதை, அதுதான் கௌரவம் கொடுக்கும். நாலுபேர் பார்க்கும்போது நம்மால் கம்பீரமாக நடக்க முடியும் என்ற எண்ணத்தில் வயதானவர்கள் இருப்பதைக் கவனித்திருக்கிறேன்.



''நான் சாக்த உபாசகி. பஞ்சாக்ஷரி ஜபம் எடுத்துண்டிருக்கேன். துளசிக்கு ஜலம் விட்டு அதைச் சுத்திண்டே சொல்கிறேன்'' என்று ஒரு பெண்மணி சொல்கிறார்.

அவர் சொல்லியதில் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. சாக்த உபாசகி சிவன் நாமம் சொல்கிறார். சிவன் நாமம் சொல்லியபடி துளசியை வலம் வருகிறார். என்ன, சொல்லத் தெரியாமல் சொல்கிறாரா அல்லது வேண்டுமென்றே குழப்புகிறாரா? நான் யோசனை செய்து அந்த அறுபது வயதுப் பெண்மணியிடம் விவரம் கேட்க அந்த அம்மாள் சிவ மந்திரம் சொல்லியபடி துளசிக்கு ஜலம் ஊற்றுவதும், ஏதோ மந்திர ஜபம் கற்றுக் கொண்டதாலேயே தன்னை சாக்த உபாசகி என்று சொல்லிக் கொள்வதும், தனக்கு அம்மன் வருவதாக நினைத்துக் கொள்வதும், போவோர், வருவோரிடம் சொல்லிச் சொல்லியே தன்னுடைய கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்வதும் தெரிந்தது.

ஆனால், இவையெல்லாம் செய்கிறாரே, உணவுக் கட்டுப் பாடோ அல்லது பிறருக்கு உதவி செய்கின்ற பெரும்மனமோ அந்த அம்மையாரிடம் இல்லவே இல்லை. மாறாய், மகளுக்கும் பேரர்களுக்கும் மற்றுமுள்ள உறவினர்களுக்கும் மிகுந்த தொந்தரவு கொடுப்பதாகவே நான் கேள்விப் பட்டேன். அதுவுமல்லாது ஒரு சிறிய மணிப்பர்ஸை என்னிடம் கொடுத்து இதில் தான் ரட்சைஇருக்கிறது. இந்த ரட்சைதான் என்னை காப்பாற்றுகிறது என்று அந்த அம்மையார் சொன்னார். அதைப் பிரித்துப் பார்க்க அதில் வெறும் குங்குமம் இருந்தது.

என்ன ரட்சை? பக்தி இல்லாதபோது இது எப்படிக் காப்பாற்றும்?

அது அவர் நம்பிக்கை. ஆனால், இந்த நம்பிக்கையால் அவருக்கு ஏதேனும் நன்மை விளைந்ததா? எவருக்கேனும் உதவியாக இருந்தாரா? அவர் தன்னுடைய மனக் கொந்தளிப்புகளைக் குறைத்துக் கொண்டு அமைதியாக ஜபத்தில் ஈடுபட முடிந்ததா? தியானம் செய்ய முடிந்ததா என்றால் இல்லை.

டி.வி. பார்க்கும் நேரத்தில் விருந்தினர்கள் வந்து விட்டார்கள் என்று கோபித்துக் கொண்டு, விருந்தினர்களை அவமானப்படுத்தியது தான் மிச்சமாக இருந்தது.

''பேரப்பிள்ளைகளுக்கு டி.வி. தொந்தரவாக இருக்கிறது இரவு ஒன்பது மணி வரை போட வேண்டாம்'' என்று சொன்னால், எவன் எக்கேடு கெட்டால் என்ன என்று பேரப்பிள்ளை படித்துக் கொண்டிருக்கும் போதே டி.வியை போட்டு, கால் அகட்டி உட்காருவதே அவருடைய கடமையாக இருந்தது. அப்படியானால், தன்னை உபாசகி என்று சொல்லிக் கொள்வதும், துளசியைச் சுற்றி வருவதும் என்ன?

மிகப் பெரிய பொய். மந்திர ஜபம் என்கிற பெயரில் செய்யும் அபத்தம். ஏனெனில் அந்த அம்மையார் ஐம்பத்தைந்து வயதுக்குப் பிறகு தான் இவையெல்லாம் ஆரம்பித்தார். அதனால் ஏற்பட்ட குழப்பம் இது.

எப்படி எங்களால் முப்பது வயதில் ஜபம் எடுத்துக் கொள்ள முடியும். அலுவலகத்திற்குப் போய், அங்கேயும் வேலை செய்து, குழந்தைகள் படிக்கவும் உட்கார்ந்து, டி.வி. சீரியலும் பார்த்து ஒரு

நாளில் எல்லா பொழுதுகளும் அவசரமாக இருக்க, எப்படி நான் ஜபத்தில் உட்கார முடியும் என்று பலர் கேட்கவும் கூடும்.

பதினைந்து நிமிடம் ஜபத்திற்கென்று ஒதுக்கினால், இப்போது சொன்ன அத்தனையும் நன்கு அனுபவிக்க முடியும். அனுபவிக்கின்ற ஒரு சூழ்நிலை மனதில் ஏற்பட்டுவிடும்.

முப்பது வயது - ஆன்மீகத்தில் தீவிரமாக ஈடுபட வேண்டிய வயது. வாழ்க்கையில் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு, குழந்தை வளர்ப்பும், பெற்றோருக்கு அனுசரணையாய் இருத்தலும், புருஷனை மேல் நிலைக்கு அழைத்துச் செல்லுதலும் ஒரு பெண்ணின் கடமையாக இருக்க, இவைகளைத் திறம்பட செய்ய வெகு நிச்சயமாய் முடியும். மந்திரஜபம் உதவி செய்யும்.

எனக்குத் தெரிந்த ஒரு அம்மையார் அலுவலகத்திற்குப் பயணம் செய்கின்ற இருபத்தைந்து நிமிட பஸ் பயணத்தையும், மந்திர ஜபமாக மாற்றுவார். லலிதா சஹஸ்ரநாமம் சொல்லுவார். அந்த நேரத்தில் மற்ற பெண்கள் மற்றவர்களின் உடை விஷயம் பற்றியும், உறவு விஷயம் பற்றியும் பேசிக் கொண்டிருக்க, அந்த அம்மாள் மிகத் தீவிரமாக ஜெபத்தில் ஈடுபடுவார்.

ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமை போன்ற விடுமுறை நாட்களில், பண்டிகை நாட்களில் சிரமப்பட்டுவிடுவேன் என்று என்னிடம் பேசினார். ஏன் என்று கேட்க அப்போது பஸ்ஸில் பயணம் செய்ய முடியாதே, பஸ்ஸில் பயணம் செய்தபடியே லலிதா சஹஸ்ரநாமம் படிப்பது மிகச் சௌகரியமாக இருக்கிறது என்று சிரித்தபடி சொல்வார்.

லலிதா சஹஸ்ரநாமம் சொல்ல பஸ் பயணம் வேண்டுமென்ற அளவுக்கு அவர் பழக்கப்பட்டு விட்டார். இந்த ஆன்மீகப் பழக்கம்தான் அவரை உயர்நிலைக்கு கொண்டு போக உதவி செய்யும். வாழ்வின் கடைசிப் பகுதியில் வலிவு குறைந்த நாட்களில், புத்தியில் ஞாபகசக்தி குறைந்த நேரங்களில், அதிகம் தூக்கம் வருகின்ற நேரங்களில் ஆன்மீக ஈடுபாடு ஆரம்பித்து எந்தப் புண்ணியமும் இல்லை.

பதினைந்து வயதில் இப்படி ஜபம் செய்ய உட்கார்ந்து முதுகுத்தண்டும், கழுத்தும், தலையும் ஒரே நேர்க்கோட்டில் இருக்கும்படி செய்து மனம் அதற்குப் பக்குவப்பட்டு விட்டால் அறுபது வயதில் மிக நேர்த்தியாக இதில் ஈடுபட முடியும். அப்போது மற்ற சடங்குகளைக் கூட மெல்ல மெல்லச் சேர்த்துக் கொள்ள முடியும்.

மனம் முற்றிலும் விழித்துக் கொண்டு முழுமையாய் இறை அபிஷேகத்தை நிறைவேற்றும். அதாவது மனம் எதையோ சிந்தித்துக் கொண்டு, மயங்கியிராமல் என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதில் முற்றிலுமாய் லயிக்கும். இப்படி முற்றிலுமாய் லயிக்கின்ற மனம் முதுமைக்கும் நல்லது. இது உடல் நலத்தைப் பேண மிகவும் உதவும். தன்னுடைய உடம்பு என்ன சொல்கிறது என்று உற்றுப் பார்க்க இந்த அபிஷேக ஆராதனைகள், நிச்சயம் உதவி செய்யும்.

ஆன்மீகம் என்பது ஏதோ தனித்த வழியல்ல. அது வாழ்வின் நெறி. அதை அறிந்து கொள்ளும் வழி. தன்னோடு தான் பேசுதலின் துவக்கம். நெஞ்சோடு புலத்தல் என்று கவிஞர்கள் சொல்வார்களே அதுபோல.

''ஏய்... பாலகுமாரா... நீஎன்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்'' என்று என்னையே விசாரித்து அறிகின்ற முறை.

இதை அறுபது வயதுக்கு மேல் கைக்கொள்ளும்போது வெறும் அலட்டலும், பொய்யும் புனைசுருட்டும்தான் மிஞ்சுகின்றன.

தன்னை அறிதலின் பயிற்சிதான் ஆன்மீக வழிகள். ஆசார சடங்குகள். பக்திப் பாடல்கள். மந்திரஜபங்கள். இதை இளமையிலேயே கைக் கொள்வது தான் நல்லது.

## வாசகர் எண்ணங்கள்

நவராத்திரி சிறப்பிதழாக மலர்ந்த அக்டோபர் திருக்கோயில் இதழின் முகப்பை அலங்கரித்த மாங்காடு ஸ்ரீ காமாட்சி அம்மன் படமும், கட்டுரையும் மிக நன்றாக இருந்தது.

- த. சத்தியநாராயணன், அயன்புரம்

கேள்வி-பதில் பகுதியில் இடம் பெற்ற விநாயகர் சதுர்த்தி விழாக் கொண்டாட்டம் பற்றிய பதில் மிக அருமை.

கடலில் விநாயகர் உருவத்தைக் கரைப்பதனால் நமது ஆசை, பற்றுதலில் இருந்தும் விடுபடுகிறோம் எனப் பதில் தந்திருப்பது பாராட்டுக்குரியது. திருக்கோயில் மாத இதழ் அனைத்துத் தரப்பினரையும் கவரும் விதமாக வெளிவருகின்றது. ஆன்மீகப் பெருமக்களுக்கு ஆனந்த மகிழ்ச்சி தரும் அற்புதமான இதழ் திருக்கோயில் இதழ். பாராட்டுகள். பணி தொடர வாழ்த்துகின்றேன்.

- இர. இராசேந்திரன், கடலூர்

''மேலப்பரங்கிரி மல்லிகார்ச்சுனர் ஆலயம்'' இன்றைய இளைஞர்கள் கண்டிப்பாக சென்று வணங்கி வர வேண்டும். அருமையான கட்டுரை, வெளியிட்டமைக்கு நன்றி

- எஸ். ஆறுமுகம், கழுகுமலை

'உறையூரில் ஆட்சி செய்யும் ஸ்ரீ வெக்காளி அம்மன்' கட்டுரை அருமை. ''வேண்டும் வரம் தருவாள், வெக்காளி துணை வருவாள்'' இது முக்காலும் உண்மை என்பதை நன்கு விளக்கியது.

- திருமதி பிரேமா விநாயகம், சைதை.

'ஐப்பசியில் அன்னாபிஷேகம் பற்றிய பேராசிரியரின் கட்டுரை பெரும் பயன் விளைக்கும் கட்டுரை என்பதில் ஐயமில்லை

- இராஜலிங்கம், பள்ளிபாளையம்.

# பதில்





''மூத்தோர் சொல் அமிர்தம்'' என்பது முது மொழி. வாசகர்கள் தொடுக்கும் வினாக்களுக்குச் சான்றோர்கள் தரும் விளக்கங்கள் பதிலாகத் தொகுத்து வழங்கப்படும். இம்மாதம் வாசகர்கள் வினாக்களுக்குத் தெய்வத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாக்கிலிருந்து பதில்கள் வழங்கப் பட்டுள்ளன என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.)

★★★ தாமரைவடிவு, திருச்சி

கேள்வி: கருணை மிகுந்தவர் என்று கூறப்படும் கடவுளுக்குக் கையில் வாள், வேல் முதலிய கொடுமையான கருவிகள் ஏன் இருக்கின்றன?

பதில்: கருணை வடிவமான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று.

வேல் என்பது ஞானம்,

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு.

1.ஆழம். 2. அகலம். 3. கூர்மை.

வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கின்றது, நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.

''ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'' என்பார் மாணிக்க வாசகர். எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டு. இவைகளை நுனித்து உணர வேண்டும்.

★★★ சக்திவடிவேலன், மதுரை

கேள்வி: குடும்பத்தில் ஆதிபராசக்தி அல்லது மகிஷாசுரமர்த்தினி திருவுருவப் படங்களை வைத்து வணங்கலாமா? சிலர் வேண்டாம் என்கிறார்கள். தாங்கள் கூறும் வழி என்ன?

பதில்: ஆதிபராசக்தி, மகிஷாசுரமர்த்தினி, காளிதேவி என்ற மூர்த்திகளை இல்லத்தார் வைத்து வணங்கலாம். பிழையில்லை.

சர்க்கரை மிட்டாய் விற்பவன் கத்திரிக்காய் வடிவிலும், பாகற்காய் வடிவிலும், கரும்பு வடிவிலும் மிளகாய் வடிவிலும் செய்து விற்பான்.

கரும்புமிட்டாய் இனிக்கும், பாகற்காய் மிட்டாய் கசக்கும், மிளகாய் மிட்டாய் உறைக்கும் என்று கருதலாமா? எல்லாம் சர்க்கரைதானே? வடிவில் தானே வேறுபாடு!

அது போல காளி, மகிஷாசுரமர்த்தினி என்ற வடிவங்கள் அம்பிகை எடுத்துக் கொண்ட மிளகாய் மிட்டாய் வடிவம். அவர் கருணாம்பிகை. ஆதலால் வழிபடுவதால் குறைவு உண்டாகாது.

★★★ லலிதகுமாரி, திருச்செந்தூர்

கேள்வி: நம் விதிப்படி எதுவும் நடக்கும் என்கிறார்கள். கடவுளை வழிபடுவதால் நம்முடைய விதி மாறுமா?

பதில்: அதிதீவிர பக்தி புரிகின்றவர்கட்கு விதியின் வேகம் தணியும்.

ஊழை ஒருவராலும் ஒழிக்க முடியாது. ஆனால் இறைவனை வழிபடுகின்றவனுக்கு அதன் வலிமை கெட்டு மெலிவாகித் தணியும்.

''ஊழையும் உப்பக்கம் காண்பர்!''

என்கிறார் திருவள்ளுவர்.

ஆதலால் முழுமனத்துடன் இறைவனை உள்ளம் குழைந்து உருகி வழிபடுவோர் விதியின் வேகம் தணியப்பெறுவர்.

★★★ சுப்பிரமணி, சேலம்

கேள்வி: இறைவனைத் தினசரி வணங்கும் பொழுது நமக்கு வேண்டியதைத் தருமாறு வேண்டுவது தவறா?

பதில்: இறைவனை வழிபடும் போது நமக்கு வேண்டியதைத் தருமாறு பிரார்த்திப்பது பிழையன்று. அது குழந்தை தந்தையிடம் கேட்பது போலாகும். ஆனால் மேல்நிலையில் இது நின்று விடும்.

''கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

என்ற பெரிய புராணத் திருவாக்கின்படி ஒன்றனையும் விரும்பாத நிஷ்காம்ய பக்தி உண்டாகும்.

★★★ த. சத்தியநாராயணன், அயன்புரம்

கேள்வி : கோயிலுக்குச் சென்று அங்கு சாமி கும்பிட முடியாத சூழ்நிலை ஏற்படு மானால் திரும்பி வந்து விடுகிறோம், இதனால் கெடுதல் ஏற்படுமா?

பதில்: கோயிலுக்குச் சென்று அங்கு சாமி கும்பிட முடியாத சூழ்நிலை ஏதுவும் ஏற்பட்டுவிடுமானால் அது நம்முடைய பிழையாகாது. இதனால் கெடுதல் ஏற்படும் என அஞ்சவேண்டியதில்லை. எங்கே இருந்து வழிபட்டாலும், அங்கே வந்து அருள் புரிபவன் இறைவன். ஆகவே அத்தகைய சூழ்நிலையில் இறைவனை வழிபடாமல் திரும்ப நேரிடுவது குறை எனக் கருதல் வேண்டா.

# காவடி

டாக்டர் டி.செல்வராஜ்

**வழிபாட்டு முறை :**

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான வழிபாட்டு முறை இருப்பதுண்டு.

தோப்புக்கரணம் போட்டும், சிதறு தேங்காயை உடைத்தும் விநாயகரை வழிபட வேண்டும்.

ஸ்ரீ ஐயப்பனை வழிபட விரதங்காத்து, இருமுடிகளை ஏந்தி, நெடும் பயணத்தை மேற் கொள்ள வேண்டும்.

கரகாட்டம் ஆடி மாரியம்மனை வழிபடலாம்.



பழங்காலத்தில் முருகனை வழிபட வேலன் வெறியாட்டயர்ந்தனர். இந்த வழிபாட்டு முறை காலப்போக்கில் மறைந்தது. காவடி சுமந்து, முருகனது கோயிலை நோக்கி வழி நடந்து சென்று, அவனை வழிபடும் ஒரு வழிபாட்டு முறை தோன்றியது.

**சொற் பொருள் விளக்கம் :**

காவு + தடி = காவடி. காவு = சுமத்தல்; தடி=தண்டு. ஒரு தண்டின் இரு முனைகளில் இரு உறிகளைக் கட்டி, அவற்றில் பொருள்களை ஏற்றிச் சுமந்து செல்வது காவடி.

புறநானூற்றில் (206) காவடி குறிக்கப் படுகிறது.

''காவினெனன் கலனே சுருக்கினெம் கலப்பை''

'காவினென் = எனது பொருள்களைக் காவடியில் கட்டினேன் ; கலப்பை = பொருள்கள் அடங்கிய பையைச் சுருக்கினேன். அவற்றைச் சுமந்து செல்லலானேன்.

திருவள்ளுவர் காவடியை மிகவும் பொருத்தமான ஓர் உவமையாகப் பயன் படுத்துகிறார்.

''காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பினகத்து''

*(திருக்குறள் 1167)*

பொருள் : 'பல துன்பங்களைப் பொறுக்க முடியாத என் உடம்பிலே, உயிரானது காவடியைத் தூக்கும் தண்டாக இருக்கக் காமமும், நாணும் அதன் இருமுனைகளில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இது தலைவி கூற்று.

மேற்கண்ட குறிப்புகளால், பழங்காலத்தில் காவடி இருந்தது என்பதும், அது வாழ்வுக்கு அவசியமான பொருள்களைச் சுமக்கப் பயன்பட்டது என்பதும் புலனாகின்றன. தேவையான பொருள்களைக் காவடியில் சுமந்து செல்லும் வழக்கம் இப்போதும் உண்டு.

காலப்போக்கில் முருகனுக்குச் செலுத்த வேண்டிய படையல், காணிக்கைப் பொருள்கள் முதலியவற்றைக் கொண்டு செல்லவும் காவடி துணை செய்தது. இந்த வகையில் அது ஒரு வழிபாட்டு முறையாக மெல்ல மாறியது. இந்த வழிபாட்டு முறை மிகவும் பிற்காலத்தில் தோன்றியது. ஆகவே, பழைய இலக்கியங்களில் இதைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

**காவடியின் தோற்றம் :**

காவடியின் தோற்றத்தைப் பற்றிய ஒரு புராண வரலாறு இருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு :-

அகத்தியர் கந்தகிரியில் முருகனை வணங்கினார். அருகில் இருந்த சிவகிரி, சக்திகிரி ஆகிய இருமலைகளைச் சிவ சக்தியாக வழிபட்டார். அவற்றைப் பொதிகை மலைக்குக் கொண்டு சென்று வழிபட விரும்பினார். அதற்கு முருகனிடம் அனுமதியும் பெற்றார்.

அந்த மலைகளைப் பெயர்த்தெடுத்துத் திருக்கேதாரத்திற்கு அருகிலுள்ள பூர்ச்சவனத்தில் வைத்தார். பொதிகையை நோக்கி மீண்டு வந்தார்.

வழியில் திருக்குற்றாலத்திற்கு அருகில் இடும்பனைச் சந்தித்தார். இவன் அசுர குலத்தினருக்கு வில் வித்தைகளைக் கற்பிக்கின்றவன். சிவபக்தன். முருகனின் அடிமையாக வாழ வேண்டும் என்ற தன் விருப்பத்தைச் சிவனிடம் விண்ணப்பித்து அதை வரமாகவும் பெற்றான். இவன் மனைவி இடும்பி.

அகத்தியர், வடக்கே பூர்ச்சவனத்தில் இருக்கின்ற இருமலைகளைப் பெயர்த்தெடுத்துப் பொதிகையில் சேர்ப்பிக்குமாறு இடும்பனிடம் ஆணையிட்டார்.

இடும்பன் நாகங்களைக் கயிறுகளாகப்

## திருச்செந்தூர் கோபுரம் கட்டப்பட்டபோது நிகழ்ந்த அற்புதம்



திருச்செந்தூர் கோபுரம் கட்டும் திருப்பணியை மேற்கொண்டவர் திருவாவடுதுறை தேசிகமூர்த்தி சுவாமிகள்.

இவர் கோபுரம் கட்டும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்குக் கூலியாக இலை விபூதியையே கொடுத்தார்.

பணியாளர்கள் தூண்டுகை விநாயகர் கோயிலைத் தாண்டிப் போனதும் இலையினைத் திறந்து பார்க்கலாம் எனக் கூறினார். பணியாளர்களும் அவ்வாறே பார்க்கும் போது தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் இலை விபூதியின் உள்ளே இருக்கக் கண்டு வியப்புற்றார்கள்.

பிணித்து, பிரம்ம தண்டத்தின் இரு முனைகளில் இரு உறிகளைப் போல இணைத்து அவற்றில் மலைகளை வைத்துக் காவடி போலச் சுமந்து தென்திசைநோக்கி வந்தான். திருவாவினன் குடியை அடைந்தான். அங்கே மலைகளை வைத்துச்சற்று இளைப்பாறினான்.

இடும்பன் மலைகளை மீண்டும் எடுக்க முயன்றான். முடியவில்லை அப்போது ஒரு குரா மரத்தடியில் முருகன் எழுந்தருளினான். அந்த இருமலைகளும் அங்கேயே நிலைத்து இருக்குமாறு திருவுளங்கொண்டு இடும்பனையும் இடும்பியையும் ஆட்கொண்டான்.

அன்று முதல் சிவகிரியின் அடிவாரத்தில் இடும்பன் உறைகின்றான். பல காவடிகளை ஏந்தி வரும் பக்தர்கள் முதலில் இடும்பனை வழிபட்டுக் காணிக்கைப் பொருள்களைச் செலுத்து கின்றனர். பின்னர் முருகனைத் தரிசித்து அருளைப் பெறுகின்றனர்.

சிவகிரி = பழனி மலை; சக்திகிரி = இடும்பன் மலை.

**காவடியின் அமைப்பு :**

காவடிகளின் அளவு, அமைப்பு, அதில் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்கள், தூக்கிச் செல்லும் முறை முதலிய அனைத்திற்கும் பல கட்டுப்பாடுகள் உள்ளன. மீறப்படுவதில்லை.

**காவடியின் அமைப்பு வகைகள்:**

காவடிகள் அடிப்படையில் இரண்டு வகைப்படுகின்றன.

(1) நீளமான, வழவழப்பான, இலேசான ஆல விழுது முதலியவற்றால் ஒரு தண்டைத் தயாரிக்கின்றனர். அது அழகாகவும், வலிமையாகவும் இருப்பதற்காகப் பித்தளைப் பூண்களைக் காப்பாகப் பொருத்துகின்றனர். அதன் இரு பக்கங்களிலும், காணிக்கைப் பொருள்களை இரு செம்புகளில் நிரப்பிக் கட்டுகின்றனர். மலர்களால் அலங்கரிக்கின்றனர்.

(2) மேலும், அந்தத் தண்டின் மீது அரைவட்ட வடிவமாகச் சில குச்சிகளை வளைத்து அழுத்தமாகக் கட்டுகின்றனர். வண்ண வண்ணப் பட்டுத் துணிகளாலும், மயில் தோகைகளாலும் அதனை அழகுபடுத்திப் பல மலர் மாலைகளைச் சூட்டுகின்றனர். இவை இரண்டும் காவடிகள் ஆகும்.

**காணிக்கைப் பொருள்கள் :**

பக்தர்கள், அவரவர் நேர்ந்து கொண்ட பல பொருள்களைக் காணிக்கைப் பொருள்களாகக் காவடிகளில் ஏந்திச் செல்கின்றனர்.

பால் காவடியும், பன்னீர்க் காவடியும் மிகவும் பிரபலமானவை. மேலும், புஷ்பக்காவடி, தேன் காவடி, பஞ்சாமிர்தக்காவடி, மச்சக்காவடி, முதலிய இருபதுக்கும் மேற்பட்ட காவடிகள் உள்ளன.

சிலர், மாரியம்மனுக்கும் வேப்பிலைக் காவடி எடுக்கின்றனர்.

**வேல் குத்துதல் :**

காவடி எடுக்க வேண்டும் என்று முடிவு செய்த பக்தர்கள் கடும் விரதங்களைக் காக்க வேண்டும். மேலும், காவடி ஏந்தும் போது அவர்கள் நாக்கில் வேலைக் குத்திக் கொள்வதும் ஒரு மரபு.

காவடி என்பது அடிமைத்தனத்தையும், அதிலுள்ள காணிக்கைப் பொருள்கள் முருக பக்தியையும், நாக்கில் வேல் குத்துதல் நா அடக்கத்தையும் மன அடக்கத்தையும் புலப்படுத்துகின்றன.

**சரண முழக்கங்கள் :**

காவடி எடுப்பவர்களுடன் பலர் கூட்டம் கூட்டமாகச் செல்வர். வழியில், பக்தியாலும், இசையாலும் ஈர்க்கப்பட்ட பலர் உடன் சேர்ந்து கொள்வர். பாட்டுப்பாடியும், ஆட்டம் ஆடியும் நடப்பர்; வேகமாக நடப்பர்; சில போது ஓடுவர். முருகா -முருகா, வேல்வேல், முருகனுக்கு அரோகரா வேலையா, தங்கையா என்றெல்லாம் முருகனது பெயர்களைச் சரண முழக்கமிடுவர். ஆகவே, காவடி என்பது காவடி எடுப்பவனை மையமாகக் கொண்ட கூட்டு வழிபாடாக மலர்கிறது. இதனால் முருக பக்தி மணம் எங்கும் கமழ்கிறது.

**முருகன் திருத்தலங்கள்:**

காவடி எடுத்தல் என்ற வழக்கம் பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், கழுகுமலை, எட்டிக்குடி, திருத்தணி முதலிய மிகப் புகழ் பெற்ற முருகன் திருத்தலங்கள் அனைத்திலும் நிகழ்கின்றது.

**காவடி ஆட்டம்:**

பக்தர்கள் தோள்களிலும், கழுத்திலும் காவடித்தண்டு உருளும்படியும், சுழலும்படியும் நடனமாடுவர். இந்த வகை நடனம் கடினமானது. இதற்கு முதலில் முருக பக்தி தேவை. தொடர்ந்து, விடா முயற்சியும், கடுமையான பயிற்சியும் மேற்கொண்டால் காவடி நடனத்தைச் சிறப்பாக ஆட முடியும். முருக பக்தர்களால் செழித்து வளரும் நடனக்கலை இது.

புராணக் காலத்தில் இரு மலைகளைக் காவடியில் சுமந்த இடும்பனுக்கு முருகன் அருள் புரிந்தான். இன்றும் காவடி ஏந்திக் காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு முருகனது அருள் நிறையவே கிடைக்கின்றது.

**காவடிச்சிந்து:**

காவடியை ஏந்தி வழி நடக்கும் போது பாடுவது காவடிச் சிந்து. இவ்வாறு பலர் சேர்ந்து பாடுவதால் நீள் வழியைக் கடந்து செல்லும் களைப்பும், காவடியை ஏந்திச் செல்லும் துன்பமும், மலைமீது ஏறுவதால் ஏற்படும் சோர்வும் தணிகின்றன.

சென்னிகுளம், கவிராசர் அண்ணமலை ரெட்டியார் (1860-91) கழுகு மலை முருகன் மீது, காவடிச்சிந்தை முதல் முதலில் இயற்றினார்.

காவடிச்சிந்து 24 இசைப் பாடல்களைக் கொண்டது.

விநாயகர் துதி, முருகன் துதியாக அமைந்த பாடல்கள்சில.

மலை, கோயில், நகர், வாவியின் வளங்களைப் புனைந்துரைக்கும் வருணனைப் பாடல்கள் சில. எஞ்சிய 14 பாடல்களும் அகப்பொருள்துறைகளில் அமைந்தவை.

காவடிச் சிந்தைப் போல மற்றோர் இலக்கியம் இதற்கு முன் தோன்றியதில்லை.



காவடிச் சிந்து சிறந்த கற்பனைக் களஞ்சியம்; இசைத்தமிழும், இயல் தமிழும் நிறைந்தது; பாமரரையும், பண்டிதரையும் ஒருங்கே கவர வல்லது; எதுகை, மோனை, இயைபுத் தொடைகளை மிக அதிகமாகப் பூண்டது; முருக பக்தியை அடிப்படையாகக் கொண்டு பல சுவைகளைத் தருவது; தோன்றிய காலந்தொட்டே மிக்க புகழுடன் திகழ்வது; நூல் மிகச் சிறிய நூலாயினும் மிக அரிய பெரிய பொருள்கள் அமைந்தது; இசைவல்லுநர்கள் எப்போதும் விரும்பிப் பாடுவது; பல கோயில்களில் பாராயண நூலாக விளங்குவது.

பண்டிதர் விரும்பும் மரபும், பாமரர் விரும்பும் எளிமையும், இசைவல்லுநர் விரும்பும் புதுப்புது மெட்டுகளும் காவடிச்சிந்தில் சங்கமம் ஆகின்றன.

சில மேற்கோள்:

*(1) கழுகு மலை (3:2)*

வெள்ளிமலை ஒத்தபல மேடை - முடி
மீதினிலே கட்டுகொடி யாடை - அந்த
வெய்யவன்நடத்திவரும்
துய்ய இரதப்பரியும் - விலகும்
படி - இலகும்

*(2) கோயில் வளம் (4:7)*

அருணகிரிநாவில் பழக்கம் - தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் - பல
அடியார்கணம் மொழிபோதினில்
அமராவதி இமையோர்செவி அடைக்கும்
அண்டம் உடைக்கும்.

*(3) வாவி வளம் (6:6)*

வண்ணத் தாமரையைக் கண்டு - வாயில்
மதுரராகம் பாடிக் கொண்டு - மதி
மயங்கிப் பேட்டினுடன்
முயங்கியே கிடக்கும் வண்டு
கள்ளை உண்டு

*(4) தலைவன் வருத்தம் சாற்றல் (16:1)*

வண்ணத் தினைமாவைத் தெள்ளியே -
உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே - உயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே - இரு
வடமேருவை நிகராகிய
புய மீதணி பலமாமணி
மாலை படீரெனத் துள்ளியே - விழ
வான்மதி வீசும் தீ அள்ளியே.

## காவடியின் வகைகள்

காவடியின் தண்டின் இருபுறங்களிலும் கட்டப் பொருளைக் கொண்டு அக்காவடி பெயர் பெறுகிறது.

பால் கட்டப்படுமானால் பால்காவடி.

தீர்த்தம் கட்டப்படுமானால் தீர்த்தக்காவடி.

பன்னீர்க்காவடி, புஷ்பக்காவடி, இளநீர்க் கா வேல்காவடி, சர்க்கரைக் காவடி, சாம்பிராணிக்கா மச்சக்காவடி, சர்ப்பக்காவடி எனப் பலவகைக் காவ கந்தனுக்குக் காணிக்கையாக்கப்படுகின்றன.

# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

19

மன்னன் விராடனின் வீரமைந்தனான உத்திரன் பாண்டவர்களாலும் மைந்தனாகப் பாவிக்கப்பட்டுப் பாசம் பாராட்டப்பட்டவன் ஆவான். விராடனுடைய மச்சதேசத்தில் ஓராண்டுக்காலம் பாண்டவர்கள் தம்மை இன்னார் என்று வெளிக்காட்டி கொள்ளாமல் மாறு வேடங்களில் வேறு பெயர்களில் வாழ்ந்து கொண்டிருந்த போது அவர்கள்பால் உத்திரன் காட்டிய அன்பும், உத்திரன் பால் பாண்டவர்கள் காட்டிய அன்பும் அளவிட முடியாததாகும்.

கங்கபட்டர் என்ற பெயரில் துறவியாகத் தருமரும், பலாயனன் என்ற பெயரில் சமையல்



காரனாக வீமனும், பிருகந்நளை என்ற பெயரில் நாட்டியம் கற்பிக்கும் பேடியாக அர்ச்சுனனும், தாமகிரந்தி என்ற பெயரில் குதிரைகளைப் பராமரிப்பவனாக சகாதேவனும், தந்திரபாலன் என்ற பெயரில் நகுலனும், விரதசாரிணி என்ற பெயரில் ஒப்பனைமகளாக துரோபதையும் மச்சநாட்டில் அஞ்ஞாதவாசம் புகுந்த போது அவர்களுக்கு அடைக்கலம் தந்து அன்பு பாராட்டியவர்கள் விராடனும் அவன் இளைய மகன் உத்திரனுமே.

சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பாசுபதாத்திரம் பெற்ற அர்ச்சுனன், தன் தந்தை இந்திரனின் விருப்பத்திற்கிணங்க அமராபுரி சென்று சிலநாட்கள் தங்கி இருந்த நேரத்தில், அவன் ஊர்வசியால் பேடியாகச் சபிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது.

கண்டோர் காதல் கொள்ளும் கட்டழகனான அர்ச்சுனனைக் கண்ட ஊர்வசி, அவன் மேல் மையல் கொண்டாள். தனிமையில் அர்ச்சுனனைச் சந்தித்துத் தன் காதலை வெளியிட்டாள்.

தன் தந்தை இந்திரனின் அன்பிற்குரியவளான ஊர்வசி தனக்கும் தாயே ஆவாள் என்பதைத் தெரிவித்து அர்ச்சுனன், ஊர்வசியின் காதலைத் தகாது எனக் கூறி நிராகரித்தான்.

அப்பொழுது அர்ச்சுனன் மேல் ஆத்திரம் கொண்ட ஊர்வசி அவனைப் பேடியாகுமாறு சபித்தாள். அர்ச்சுனனும் ஊர்வசியின் சாபத்தால் பேடியாக உருவம் மாறித் தன்னுடைய அறையிலிருந்து வெளியே வர முடியாமல் முடங்கிக் கிடந்தான்.

நடந்த சம்பவத்தை அறிந்து கொண்ட இந்திரன் பின் ஊர்வசியை அழைத்து, அவள் கொடுத்த சாபத்தைத் திரும்ப பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். ஊர்வசியும் அர்ச்சுனன் விரும்பிடும் போது மட்டும் அவனுடைய வடிவம் பேடி வடிவமாகுமாறு சாபத்தை மாற்றி உதவினாள்.

12 ஆண்டுக் கால வனவாசம் முடிந்து, பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் பற்றிச் சிந்தித்த போது அர்ச்சுனன் தனக்கு ஊர்வசி இட்ட சாப விவரத்தைத் தெரிவித்து, ஓராண்டுக் காலம் தான் பேடி வடிவத்தில் பிருகந்தளை என்ற பெயரில் விராடன் மகள் உத்திரைக்கு நாட்டியம் கற்றுத் தரப் போவதாகத் தெரிவித்து, அவ்வாறே செய்யலானான்.

இவ்வாறு மாற்றுருவம் பூண்டு, பாண்டவர்கள் விராடனுடைய தேசத்தில் மறைந்து

வாழ்ந்த நேரத்தில் தான், துரியோதனன் தன் தூதுவர்கள் துணையால் கண்டு பிடித்து மீண்டும் அவர்களைப் பன்னிரண்டு வருட காலத்திற்கு வனவாசம் அனுப்பி விடத்துடித்தான். பாண்டவர்களைத் தேடிச் சென்ற தூதுவர்கள் திரும்பி வந்து, துரியோதனனிடம் விவரம் தெரிவித்தார்கள்.

''பாண்டவர்கள் எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. மச்சநாட்டில் விராட மன்னனின் மைத்துனன் கீசகன். மிகப் பலசாலியான அவனை, யாரோ இரவில் கொன்று விட்ட செய்தி எங்களுக்குக் கிடைத்தது. அவனைக் கொல்லத்தக்க வலிமை வீமன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பதால், மச்சநாட்டில் பாண்டவர்கள் மறைந்து வாழக்கூடும்''.



தூதுவர்களின் இந்தத் தகவலைக் கேட்ட பிறகு தான், பாண்டவர்களை அடையாளம் காணும் பொருட்டு, மச்சநாட்டின் மேல் படை எடுத்து வந்தான் துரியோதனன். துரியோதனனின் நட்பு மன்னனான திரிகர்த்தராசன் மச்சநாட்டின் தெற்கெல்லையை முற்றுகையிட்டு, விராடனுடைய ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டான். அத்தகவலைக் கேள்விப்பட்டு விராடன் மிகவும் வருத்தம் கொண்டான்.

''எதிரிகள் பலருக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தானே என் மைத்துனன் கீசகன்! அவன் உயிரோடு இருந்திருந்தால் எனக்கிந்தத் துன்பம் வந்திருக்குமோ?'' என்று விராடன் வேதனை கொண்டான்.

விராடனின் மைத்துனன் ஆகிய கீசகனைப் பிறர் அறியாதபடி துவந்தயுத்தம் செய்து கொன்று போட்டவன் உண்மையிலே வீமனே ஆவான். விராடனின் மனைவி சுதேட்டிணைக்கு ஒப்பனை மகளாகப் பணியாற்றிய துரோபதையின் மேல் காமம் கொண்டு, அவளிடத்தில் அவன் தகாத முறையில் நடந்து கொண்ட காரணம் பற்றியே சுதேட்டிணையின் தம்பியும், மச்சநாட்டின் தளபதியுமான கீசகனை வீமன் கொல்ல நேர்ந்தது.

கீசகன் இறந்து விட்டபடியால் இனி எதிரிகளை வெல்வது எப்படி சாத்தியமாகும் என்று வருத்தப்பட்ட விராடனுக்குக் கங்கபட்டராக மறைந்து வாழ்ந்த தருமரே ஆறுதல் கூறினார்.

''கவலை வேண்டாம்! நான் இப்பொழுது துறவியாக இருந்தாலும் ஒரு காலத்தில் போர்க்களப் பயிற்சிகள் பெற்றுப் பல யுத்தங்களில் போர் செய்தவனே. பலாயனன், தாமகீர்த்தி, தந்திரபாலன் ஆகிய இவர்களையும் அழைத்துக் கொண்டு போய், எதிரியை வெல்லலாம்'' என்று தருமர் விராடனுக்கு ஆறுதல் கூறிப் பின், அவ்வாறே அனைவரும் புறப்பட்டுப் போய் தெற்கெல்லையை முற்றுகையிட்டிருந்த திரிகர்த்தனுடன் போர் புரிந்து வெல்லலானார்கள்.

திரிகர்த்தன் மச்சநாட்டின் தெற்கெல்லையில் போர் செய்து கொண்டிருந்த அதே நேரத்தில், துரியோதனன் தானும் தன்னுடைய படைகளோடு வந்து, மச்சநாட்டின் வடக்கு எல்லையை முற்றுகையிடலானான். பாண்டவர்கள் மச்சநாட்டில் மறைந்து வாழ்வார்களானால், மச்சநாட்டைப் பல புறங்களிலும் தாக்கினால் பாண்டவர்கள் வெளிப்பட்டு நிச்சயம் போரிட வந்தே தீருவார்கள் என்பது துரியோதனனின் கணிப்பு.

துரியோதனன் மச்சநாட்டின் வடக்கெல்லையை முற்றுகையிட்டு விராடனின் ஆநிரைகளைக் கவர ஆரம்பித்தவுடனே, தூதுவர்கள் விரைந்து வந்து சுதேட்டிணையிடம் விவரத்தைத் தெரிவித்தார்கள். அப்பொழுது சுதேட்டிணைக்குத் துணையாக அரண்மனையில் அவனுடைய இளைய மகனும் சிறுவனுமாகிய உத்திரன் மட்டுமே இருந்தான் என்பது குறிப்பிடத் தக்கது. உத்திரன் இளையனாக இருந்தாலும் வீரத்தில் மிகவும் பெரியவனாக விளங்கினான் என்பதைத்தான் நாம் இங்கே காணப்போகிறோம்.

வடக்கெல்லையைத் துரியோதனன் முற்றுகையிட்டு விட்டான் என்பதைக் கேட்ட அளவிலே உத்திரன் வீரம் பொங்கத் தன் தாயிடம் ''அம்மா! எதிரிகளின் கடலளவு படையை நான் ஒருவனே எதிர்த்து, கண் இமைக்கும் நேரத்தில் புறமுகிட்டு ஓடச் செய்வேன். எனக்கு இப்பொழுது தேர் செலுத்த ஒரு சாரதி மட்டுமே தேவை'' என்று கூறினான்.

**''கனைகடற் படையுடன் நிரைக் கணங் கவர்ந்தவரை**

**முனைபடப் பொருதிமைக்குமுன் முதுகு கண்டிடுவேன்**

**வினை முகத்தினை அறிந்து தேர் விசையுடன் விட என்**

**நினைவொடொப்பதோர் சாரதி நேர்ந்திலன் என்றான்''**

*(நிரை மீட்சிச் சருக்கம், 30)*

வயதில் இளையவனாக இருந்த போதிலும், தன் நாட்டைக் காக்கத் துடித்து எழுந்த உத்திரனின் வீரத்தை எப்படிப் புகழ்வது? அவனுடைய வீர உரையைக் கேட்ட சுதேட்டிணையும், அவனை ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்து பூரித்துப் போனாள்.

சுதேட்டிணையுடன் அங்கே அப்பொழுது இருந்தவளாகிய விரதசாரிணி (துரோபதை) ''இளவரசே! கவலை வேண்டாம்! உத்திரைக்கு நாட்டியம் கற்பித்து வரும் பேடியளாகிய பிருகந்தளை நன்றாகத் தேர் ஓட்டக் கூடியவள் என்று பிறர் கூற நான் கேட்டிருக்கின்றேன், அவளையே தாங்கள் தேரோட்டியாகக் கொள்ளலாம்'' என்று கூறப் பிருகந்நளையையே தேரோட்டியாகக் கொண்டு துரியோதனனை வெல்லப் புறப்பட்டான் விராடனின் வீரமகனாகிய உத்திரன்.

பிருகந்நளை எனும் பெயரில் உத்திரனுக்குத் தேரோட்டியான அர்ச்சுனனும், சிறுவன் உத்திரனின் துணிவைக் கண்டுப் பெருமிதம் கொண்டான். பிருகந்நளை தேரோட்ட உத்திரனும், துரியோதனன் முற்றுகையிட்டிருந்த வடக்கெல்லையை வந்து அடைந்தான்.

அங்கே திரண்டிருந்த துரியோதனன் படையையும், வீடுமர், விதுரர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, கர்ணன் போன்ற மாபெரும் வீரர்களையும் பார்த்த மாத்திரத்தில் பாலனின் வீரம் பறந்து போய்விட்டது. பயத்தினால் உத்திரன் கைகளும் கால்களும் நடுங்க மயங்கி விழப் போனான். அப்பொழுது உத்திரனைப் பிருகந்தளை தேற்றினான்.

''அஞ்சல் அஞ்சல் நீ பகைவரை ஆருயிரடுதல்

துஞ்சல் என்றிவை இரண்டலால் துணிவு வேறுண்டோ?

வெஞ்சமர் தனில் வந்து புண்படா தினி மீண்டால்

வஞ்சநெஞ்சுடை வஞ்சியர் என்சொலார் மறவோய்''

(நிரை மீட்சிச் சருக்கம் . 37)

''வீரனே !'' என்று உத்திரனை விளித்து பிருகந்நளை ''பகைவரைக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால் வீர மரணத்தை அடைய வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்து, மேனியில் விழுப்புண்களைப் பெறாவிட்டால், மங்கையர்கள் நகைக்க இடமாகுமே!'' என்பதாக உத்திரனின் வீரவுணர்ச்சியைத் தூண்டியும் கூட உத்திரனின் பயம் தெளிந்த பாடில்லை.

உத்திரன், தனக்கு வீரம் உரைப்பவள் ஒரு பேடி தானே என்று எண்ணியவனாய், மேலும் தேரில் இருப்பது ஆபத்தாகும் என்று அஞ்சித் தேரை விட்டு இறங்கி, ஓட்டமும் பிடித்தான்.

ஓடாதே! நில்! என்பதாகப் பிருகந்தளையும் உத்திரனை விரட்டிப் போய் பிடித்து வந்து, அவனைத் தேரிலேயே நிற்க வைத்து, அவன் ஓடிப் போகாமல் இருக்கக் கயிறு கொண்டும் கட்டினாள்.

இந்த வேடிக்கையைத் துரியோதனனின் படைகள் இப்படிப் பார்க்கவும் நகைக்கவும் கேலிக்காளான உத்திரன், பிறகு பிருகந்நளையை அர்ச்சுனன் என்பதாகத் தெரிந்து கொண்டு, அதன் பின் பெரு வீரனாகத் தானும் மாறிப் போனான் என்பதுவே நாம் இங்கே குறிப்பிடத்தக்கது.

அஞ்ஞாத வாசத் தொடக்கத்தின்போது பாண்டவர்கள் மச்சநாட்டெல்லையில் அமைந்திருந்த வன்னி மரம் ஒன்றின் பொந்தினில் தங்களுடைய ஆயுதங்களை எல்லாம் கட்டி மறைத்து வைத்திருந்தனர். உத்திரனைத் தேரில் கட்டிப் போட்ட பிருகந்நளை தானே அந்த வன்னி மரத்தை நோக்கித் தேரைச் செலுத்திக் கொண்டு போய் நிறுத்தினாள்.

உத்திரனின் கட்டுக்களை அவிழ்த்துவிட்ட, பிருகந்நளை வன்னி மரத்தின் பொந்தினில் இருந்த காண்டீபத்தை எடுத்து வரக் கூறி, உத்திரனும் அவ்வாறே எடுத்த வந்தபின், தான் அர்ச்சுனன் என்ற உண்மையையும் உத்திரனுக்கு உணர்த்துகின்றான்

அர்ச்சுனனே பிருகந்நளை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு உத்திரனின் பயமும் தெளிகிறது. அதன் பிறகே உத்திரன் உண்மையில் வீரனாக அர்ச்சுனனுக்குத் தேரோட்டும் சாரதியாகச் செயல்பட்டு, துரியோதனனின் படைகளை அர்ச்சுனன் வெற்றி கொள்ள உற்ற துணைவன் ஆகிறான்.

''அறிந்து தாள் விழுந் தெழுந்து பின் ஆங்கவண் அருளால்

செறிந்தமால் பெருஞ் சிறப்பே அச்சிறுவனும் பெற்றுப்

பிறிந்த பற்பல பேரணி நால்வகைப் படையும்

முறிந்து போக அத்தேர் விடு தொழிலினில் மூண்டான்''

(நிரை மீட்சிச் சருக்கம். 46)

என்று வில்லிப்புத்தூரார், அர்ச்சுனனுக்குச் சாரதியாகும் பேறு திருமாலுக்கு வாய்த்தது போல் சிறுவனாகிய உத்திரனுக்கும் வாய்த்தது என்று கூறிப் பாராட்டுவதைக் காணுகின்றோம்.

இவ்வாறு அர்ச்சுனனால் வீரனாக்கப்பட்ட உத்திரனே பாரதப் போரின் முதல்நாள் போரில் அர்ச்சுனனுக்குத் துணையாகப் போரிட்டுச் சல்லியனை எதிர்த்துத் தன்னுடைய வீரத்தைக் காட்டிச் சல்லியன் மேல் அம்பு மழையைப் பொழிந்து, இறுதியில் சல்லியன் எறிந்த வேலால் வீரசொர்க்கம் அடைந்ததைச் சென்ற இதழில் கண்டோம்.

இவ்வாறு உத்திரன் மிகச் சிறிய வயதில் பெரியசெயல்கள் எல்லாம் செய்து நம்முடைய நெஞ்சங்களில் எல்லாம் நீங்காத ஒரு இடத்தைப் பெற்று மாண்டு போய் விடுகிறான். அவனுடைய மரணத்தால் பாண்டவர்கள் கொண்ட துன்பம் பெரிது. பாண்டவர்களின் தளபதியான சுவேதன் கொண்ட துன்பமோ பெரிதிலும் பெரிது. தன் தம்பியைக் கொன்ற சல்லியனைக் கொல்வதன் மூலம் தன் துயரத்தைத் தணித்துக் கொள்ளத் துடித்தது ஆத்திரம் கொண்ட அவன் ஆவேசமனம்.

அவனும் அர்ச்சுனனைப் போலவே நீண்ட நெடுங்காலம் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து சிவபெருமான் அளித்த வில்லை வரமாகப் பெற்றவன். தன் தம்பியைக் கொன்றவனைக் கொல்லப் பயன்படாமல் போகுமோ சிவன் வில் என்று ஆத்திரம் கொண்டு, எதிர்ப்பட்டவர்களை எல்லாம் எமனுலகிற்கு அனுப்பி வைத்தவாறே, சல்லியனையும் கண்டுபிடித்து, அவனையும் தன் தம்பி சென்ற எமன்

உலகிற்கே அனுப்பி வைப்பதற்காக அம்புகளைத் தொடுக்கின்றான் சுவேதன்.

சுவேதனுடைய வில்லிலிருந்து சீறி வரும்அம்புகள் சல்லியனின் உயிரைக் குடிக்கத் துடிக்கின்றன. சல்லியனும் மாபெரும் வீரனாகையால் எதிர்க்கணைகளைத் தொடுத்துச் சுவேதனின் தாக்குதலைச் சமாளிக்கிறான். எனினும் சுவேதனுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சல்லியன் தடுமாறுவதையும், எந்நேரமும் சல்லியன் சாவை அணைத்துக் கொள்ள நேரிடலாம் என்பதையும் அனுமானித்த துரியோதனன், தன்னுடைய தம்பிகள் அறுவரை அவசரமாக அழைத்துச் சல்லியனைப் பாதுகாத்துப் போரிடுமாறு அனுப்புகிறான். அறுவர் என்ன? அறுபது பேர் திரண்டு வந்தாலும் அடங்குவதோ சுவேதனின் ஆத்திரம்!

சுவேதனின் வில்லிலிருந்து புறப்படும் அம்புகள், துரியோதனனின் தம்பிமார்கள் அறுவரின் வில்லையும் இரண்டிரண்டாக்கி முறித்துப் போடுகிறது என்றால் என்னே அவன் தன் வில்லாற்றல்!

''முரண்டெதிரு மன்னவர் முரண்கொள் சிலையோரென்று

இரண்டு சிலையாக ஒரு வீரன் இவை செய்தான்

திரண்டுவரு மன்னர் முடிசிந்தியுடன் மண்மேற்

புரண்டுவிழ வாளிமழை தூவு புயல்போல் வான்''

(முதற்போர்ச் சருக்கம் . 53)

எப்படிப் பெரும்புயலில் மரங்கள் பல வேரற்றுச் சாயுமோ அப்படி சுவேதனை எதிர்ப்பவர்கள் எல்லாம் முடிசிந்திச் சாய்கின்றனர். சுவேதனின் ஆவேசத்தினால் துரியோதனனின் படைகள் அனைத்தும் அன்றைய நாள் மாலைப் பொழுதிற்குள்ளேயே முழுவதும் மடிந்து போய் விடுமோ என்று அஞ்சத்தக்க அளவிற்குச் சுவேதன் வடவாக்கினியைப் போலக் கொதித்தெழுந்து போர் செய்கின்றான்.

துரியோதனனின் தம்பிகள் அடுத்தடுத்து ஓடி வந்து சல்லியனைக் காக்க சுவேதனோடு போர் செய்து சிறிது நேரம் கூட நின்று போர் செய்ய முடியாமல் வந்த வழியே திரும்பி ஓடி விடுகிறார்கள். இக்கட்டான இந்த நிலையில் சல்லியனின் உயிரைக் காக்கத் துரியோதனனின் படைத்தளபதி வீடுமரே வந்து முன்நின்று போர் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

வீடுமரின் வில்லாற்றல் வையம் அறிந்த ஒன்று. பரசுராமரிடம் படைக்கலப் பயிற்சி பெற்ற மாபெரும் வீரராகிய வீடுமர், தம்முடைய குருவையே மிஞ்சிய சீடர். ஒரு சமயம் பரசுராமரே அவருடன் போர் செய்ய வந்தபோது, அவரையே தம்முடைய வில்லாற்றலால் தோற்று ஓடிப்போக வைத்தவர். அத்தகைய வில்லாற்றல் வாய்ந்த வீடுமரே அன்றைக்குச் சுவேதனிடம் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

வீடுமர் தன்னுடன் போர் புரிய முன் வந்ததும் சல்லியனை விட்டு வீடுமருடன் பொருகின்றான்

## அற்புதத் தீர்த்தம்



முருகனே தம் கைவேலால் உண்டாக்கிய நாழிக்கிணறு எனும் அற்புதத் தீர்த்தமும், வதனாரம்ப தீர்த்தமும், திருச்செந்தூரில் மிகச் சிறப்பான தீர்த்தங்கள். வியாழ பகவானே முன்னின்று முருகப் பெருமானுக்கு அசுரர் வரலாறு கூறியத் திருத்தலம் ஆதலால் குருவருளாலும் சிறப்புற்ற திருத்தலம் திருச்செந்தூர்.

சுவேதன். சுவேதன் விடும் முதல் அம்பே, வீடுமரின் வில்லை இரண்டாக்கி முறித்து விடுகிறது. புலி போன்ற வலிமை வாய்ந்த வீடுமர் சுவேதனுக்காற்ற முடியாமல் சித்திரம் போல் திகைத்து நிற்கிறாராம். இதனை வில்லிப்புத்தூரார்

''மத்திரனை விட்டு மிசைவந்த மகிபதிமேல்

அத்திரமும் விட்டு அவன்அடற்சிலைய றுத்தான்

சித்திரம் எனும்படி திகைத்தனன், விராடன்

புத்திரன் விடும்கணை பொறாது புலிபோல் வான்''

(முதற் போர்ச்சருக்கம் 56)

போர்க்களத்தில் வீரர்கள் தம்முடைய தேரில் ஒன்றுக்கு மேற்பட்ட விற்களையும், வாட்களையும், கதாயுதங்களையும், கணக்கற்ற அம்புகளையும் வைத்திருப்பார்கள். அவ்வாறே அவர்கள் ஏறி நின்று போர் செய்யப் பயன்படுத்தும் தேர்களும் கூட ஒன்றுக்கு மேற் பட்டனவாக அவர்களுக்கு உதவ தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். வீடுமர் தன்னுடைய வில்லைச் சுவேதன் முறித்த அளவில் வேறொரு வில்லைப் பாய்ந்து எடுக்கிறார். ஆனால் அவர் அந்த வில்லை எடுத்தாரோ இல்லையோ, சுவேதன் அதனையும் தன் அம்பால் இரண்டாக்கி விடுகிறான்.

சுவேதனின் வில்லிலிருந்து பலப்பல அம்புகள் பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றில் ஒன்று வீடுமரின் தேர்க் கொடியை அறுத்துத் தள்ளுகிறது. மற்றொரு அம்பு தேர்ப்பாகனைக் கொல்கிறது. மற்றும் பல அம்புகள் தேர்க்குதிரைகள் மேல் பாய்ந்து அவற்றை எல்லாம் கொன்றழிக்கின்றன. துரியோதனன் சல்லியனைக் காப்பாற்ற வீடுமரை அனுப்பப் போய், இப்பொழுது வீடுமரையே காப்பாற்ற பல மன்னர்களை அனுப்ப வேண்டி இருக்கிறது.

வீடுமரைக் காப்பாற்ற குகுர தேசத்தரசனையும், மேலும் ஐந்து நாட்டரசர்களையும் அனுப்பி வைக்கின்றான் துரியோதனன். சுவேதனோ சற்றும் சளைத்திடாமல் தன்னை எதிர்த்து வந்த மன்னர்களை எல்லாம் புறமுதுகிட்டு ஓடும்படியாக அம்புகளைத் தொடுத்த வண்ணமாக இருக்கின்றான். சுவேதனின் வீரத்தை அன்றைக்கு பாராட்டிப் பேசாதவர்களே கிடையாது என்று கூறும்படியாக அவனைப் பாண்டவர் அணியினரும் பர்ராட்டு கிறார்கள். துரியோதனன் அணியினரும் பார்த்து மெய்சிலிர்க்கிறார்கள்.

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

## மாபாதகம் தீர்த்த படலம்

குலோத்துங்கப் பாண்டியனின் ஆட்சிக் காலத்தில், அவந்தி நகரத்தில் ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அழகிய மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் பெண்ணிற்கு உரிய குணம் எதுவும் இல்லாதவள். அவளுக்கு ஒரு கொடிய மகன் பிறந்தான். அவன் இளமை செழிக்க வளர்ந்து வந்தான். அவன் கட்டுக் கடங்காத காமம் கொண்டவனாய் இருந்தான். தீவினையினால் தன்னைப் பெற்று வளர்த்த தாயினையே விரும்பினான். தாயாகிய கொடிய பாவியும் அவன் விருப்பத்திற்கு இணங்கினாள்.

இந்தக் கீழ்மகனின் தீய ஒழுக்கத்தினை அறிந்த அவன் தந்தை பெரிதும் வருந்தினான். இச்செய்தியைப் பிறர் அறியாவண்ணம் மறைத்து வைத்தான். மீண்டும் இது நிகழவே இது பற்றி யாதும் கூறாமல் இருந்தான். அப்பொழுது அவன் மகன் கோபம் கொண்டு என் தந்தையைக் கொல்வேன் என்று புறப்பட்டான். அப்போது தாயாகிய கொடிய பாவி ''நீதாயிடம் காம இன்பம் அனுபவித்தாய் ! தந்தையைக் கொன்றால் என்ன பயன் அடைவாய் ?'' என்று கூறித் தடுத்தாள். இருப்பினும் அக்கொடிய பாவி மண்வெட்டி ஒன்றால்தந்தையை வெட்டிக் கொன்றான்.

அக்கொடியபாவி இரவில் தன் தந்தையைத் தகனம் செய்தான். பல பொருள்களை எடுத்துக் கொண்டு, தாயையும் அழைத்துக் கொண்டு கற்கள் நிறைந்த காட்டின் வழியே நெடுந்தூரம் சென்றான். அப்போது கொடிய வேடர்கள் அவன் கையில் உள்ள பொருள்களைப் பறித்துக் கொண்டும், அப்பார்ப்பினியைக்கவர்ந்து கொண்டும் சென்றனர்.

'தூரதேசம் சென்று இன்பமாக வாழலாம்' என்ற நினைத்த அந்த மாபாதகனுக்கு அவன் தந்தையைக் கொலை செய்த மாபாதகமே வேடர்களின் வடிவில் வந்து அவனைப் பற்றிக் கொண்டது. அதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட அந்தப் பாதகன், 'இனி நான் என்ன செய்வேன்' என்று துன்பமடைந்தான். அவனைக் கண்டவர்கள் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு சிவனாரின் திருவருளினால் அந்த மாபாவியின் கொலைப் பாவமும் நீங்கும் நாள் நெருங்கவே பல இடங்களிலும் திரிந்து அலைந்த அவன் மதுரை நகரை அடைந்தான்.

அப்போது சோமசுந்தரக்கடவுளும் அங்கயற்கண் அம்மையும் வேடுவர், வேட்டுவச்சி போல வந்து திருக்கோபுரவாசல் அருகே இருந்தார்கள். இருவரும் சூதாடினர். அப்போது அக்கொடிய பாதகன் திருக்கோயிலின் அருகே வந்து கொண்டிருந்தான்.

அவன் வருவதைக் கண்ட இறைவன், இறைவியை நோக்கி, ''யாருமே நினைக்கக்கூடாத, அஞ்சுகின்ற மிகக் கொடிய பாவங்களைச் செய்த மாபாவி ஒருவன் வருவதைப் பார் ! காமம், மனிதப் பண்பாடுகளை நீக்கும். கொலையும் பழிபாவங்களும் நெஞ்சில் இடம் பிடிக்கச் செய்யும். தன் உயிருக்கு அழிவு வருவதையும் கூட எண்ணிப் பார்க்காமல் அதைத் துச்சமாகக் கருதும்; முடிவில் நரகத்துக்கே கொண்டு செல்லும்'' என்று சொல்லிக் கொண்டு இருந்தார்.



அப்போது அங்கு வந்த அந்தப் பாவியைக் கண்டு நீஏன் வருந்தி வாடுகிறாய்? என்று கேட்டார். இறைவனைப் பார்த்த மாத்திரத்திலேயே தன் நெஞ்சில் நல்லுணர்வுகள் தோன்றப் பெற்ற அவன், நடந்தவற்றை எல்லாம் இறைவனிடம் கூறி, தான் செய்த கொலைப் பாவம் பிரம்மஹத்தி வடிவமாகத் தன்னைப் பிடித்துத் துன்புறுத்துவதாகவும், எங்குத் திரிந்தாலும் அது நீங்காமையினால் மதுரைக்கு வந்ததாகவும்கூறி, அழுது வருந்தினான்.

இறைவன் அவன் மீது கருணை கொண்டார். இப்பாவம் எங்குப் போனாலும் இந்தப்பதியிலன்றி வேறு எங்கும் நீங்காது. உன் பெயரைச் சொல்பவர்க்குக் கூட இப்பாவம் பிடித்துக் கொள்ளும். இதனை வேறு யாரால் தான் நீக்க முடியும்?

''இப்பாவம் நீங்கும் வழியினைச் சொல்கிறேன், கேட்பாயாக ! நீநாள்தோறும் பிச்சைஎடுத்து ஒரு வேளை மட்டும் உண்ண வேண்டும். இயன்றவரை நீசிவனடியார்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். சூரிய உதயத்திற்கு முன்பே நீஎழுந்து அருகல்புல்லை அறுத்துப் பசுக்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் திருக்கோயிலின் புறத்தே உள்ள புறத்தொட்டி தீர்த்தத்தில் நீராடி நூற்றெட்டு முறை அங்கப் பிரதட்சணம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் உன்னைப் பிடித்துள்ள பெரும் பாவம் அகலும்'' என்று அறிவுரைகூறினார்.

அதைக் கேட்ட வேடுவச்சி உருவிலிருந்த உமையம்மை சிவபெருமானை நோக்கி, ''இக்கொடியவன் மாபாதகம் செய்த மகாபாவி ஆயிற்றே ! இவன் செய்த கொடிய பாவத்திற்கு உய்யும் வகையே கிடையாதே ! அப்படியிருக்க இக்கொடிய பாவிக்கும் உய்யும் வகையினை அருளிச் செய்தது ஏன்?'' என்று கேட்டார்.

அதற்கு சிவபெருமான் கொலைக்கும், பழிக்கும் அஞ்சாத புலையராயினும் அந்த உயிரும் அதை உணர்ந்து, தன் பாவம் தீரும் வழி இல்லாமல் தவித்து, நம்மைச் சரணடைந்து அழும் போது காப்பது தானே நம் கடமை என்றார். பின்னர் சோமசுந்தரச் கடவுளும், அங்கயற்கண் அம்மையும் மறைந்தருளினர்.

கொடிய பாதகனான அந்த வேதியனும் மதுரை நாயகன் கூறியபடி விரதம் இருந்து மிகக் குறுகிய காலத்திலேயே தன் பாபங்கள் முற்றும் நீங்கப் பெற்றான். சோமசுந்தரக்கடவுள் மீது வடமொழியில் பாமாலைகள் பக்தியுடன் படைத்து மகிழ்ந்தான்.

(தொடரும்)

# ஒரே சன்னதியில் இரண்டு வரதராஜர்கள்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.,

ஒரு கிரகண வேளையில் இராகுவின் நச்சுக் காற்றால் சூரியன் தனது முகப்பொலிவை இழந்தான். சோழநாட்டில் குடமுருட்டி ஆற்றின் வடகரையில் சிவபெருமானை வழிபட்டு, சூரியன் தனது சுடர்முகத்தை மீண்டும் பெற்றான்.

பரிதி என்றால் சூரியன் என்று பொருள். பரிதி ஈசனை வழிபட்ட திருத்தலமே பரிதியூர் என்று அழைக்கப் பட்டுத் தற்காலத்தில் பருத்தியூர் என்று வழங்கி வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்தில் உள்ள பருத்தியூருக்குச் செல்ல கும்பகோணம், குடவாசல், நன்னிலம் போன்ற இடங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு.

ஸ்ரீகல்யாண வரதராஜப் பெருமாள் கோயில் என்று அழைக்கப்படும் இந்தத் திருக்கோயிலில் ஒரே சன்னதியில் இரண்டு வரதராஜர்கள் எழுந்தருளியுள்ளனர்.

துர்வாசமுனிவர் ஒரு முறை மன்னன் அம்பரீஷனின் அரண்மனைக்கு அதிதியாக வந்தார். அம்பரீஷன் துர்வாசரை உரிய முறையில் வரவேற்று உபசரித்தான். அன்று தன்னுடன் திருவமுது செய்யும்படி வேண்டினான். துர்வாசரும் அன்று அம்பரீஷனின் அரண்மனையில் உணவருந்தச் சம்மதித்தார். நீராடி வர ஆற்றங்கரைக்குச் சென்றார். அன்று ஒரு துவாதசி நாள். அம்பரீஷன் ஏகாதசி விரதத்தை மிகுந்த ஈடுபாட்டுடன் கடைப் பிடிப்பவன். துவாதசி பாரணையை, துர்வாசருடன் உணவருந்தி நிறைவு செய்ய விரும்பினான். ஆற்றுக்குச் சென்ற துர்வாசர் வெகுநேரம் ஆகியும் திரும்பவில்லை.

அம்பரீஷனுக்குத் தர்மசங்கடமான நிலை! அதிதியாக வந்த துர்வாசரை விடுத்து உணவு அருந்தவும் கூடாது ; உரிய நேரத்தில் விரதத்தையும் நிறைவு செய்ய வேண்டும். குலகுருவின் ஆலோசனைப்படி அம்பரீஷன், நீர் மட்டும் அருந்தி, தனது விரதத்தை நிறைவு செய்தான். காலம் தாழ்த்துத் திரும்பிய துர்வாசர், அம்பரீஷன் தன்னை அவமதித்துவிட்டதாகக் கருதினார். கடுஞ் சினத்துடன், ஒரு பூதத்தை உருவாக்கி ஏவினார். அப்பூதம், அம்பரீஷனைத் தாக்க முற்பட்டது. அதனைக் கண்டு அஞ்சாத



அம்பரீஷன் தனது வழிபடுதெய்வமான திருமாலைத் தியானித்தார். தனது பக்தன் அம்பரீஷனைக் காத்திடத் திருவுள்ளம் கொண்ட திருமால், தனது சுதர்சனச் சக்கரத்தை ஏவினார். அது, துர்வாசர் படைத்த பூதத்தை வதைத்து, துர்வாசரையும் துரத்தியடித்தது!

பெருமாளின் சக்கரத்துக்கு ஈடுகொடுக்க இயலாத துர்வாசர் திருமாலிடம் சரணடைந்தார். ''அடியவர்களுக்குத் தீங்கு செய்பவர்களை என்னால் மன்னிக்க இயலாது ! நீர் அம்பரீஷனிடமே சென்று மன்னிப்புக் கேளுங்கள்!'' என்றார் திருமால். அவ்வாறே, துர்வாசர் அம்பரீஷனிடம் மன்னிப்புக் கேட்டவுடன்சக்கரம் பெருமாளிடம் திரும்பியது.

பக்தனைக் காத்திடத் துர்வாசர் மீது ஏவிய சுதர்சனச் சக்கரத்துடன் காட்சியளிக்கிறார் பருத்தியூர் ஆதிவரதராஜர். பொதுவாக, சக்கரம் பெருமாளின் கையில் பக்கவாட்டில் இருக்கும். பருத்தியூர் ஆதிவரதராஜப் பெருமாளின் கையிலுள்ள சக்கரம் ஏவிவிடும் நிலையில் பிரயோகச் சக்கரமாக உள்ளது. அதன் காரணமாக, பெருமாள் கோயில் இருக்கும் தெருவில் வலப்பக்கத்தில் வீடுகள் இல்லை! இடப்பக்கத்தில் மட்டுமே வீடுகள் ஒற்றை வாடையாக அமைந்துள்ளன.

திருக்கோயிலின் பக்கத்தில் இருக்கும் திருக்குளம், அம்பரீஷ தீர்த்தம் என்று அழைக்கப் படுகிறது. இத்தீர்த்தத்தில் நீராடி, ஆதிவரதராஜரைத் தரிசித்தால், சாபங்கள் நீங்கிவிடும். அதே சன்னதியில் கல்யாண வரதராஜப் பெருமாளும் எழுந்தருளியிருக்கிறார். அவர், தடைப்பட்ட திருமணங்களை விரைவில் நிறைவேற்றி வைக்கிறார் என்பது அனுபவ பூர்வமான உண்மை.

ஆதிவரதராஜரின் பஞ்சலோகப் படிமம் ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானது. சோழர் காலத்தைச் சேர்ந்தது என்று தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கருதுகின்றனர். ஆதிவரதராஜர் போருக்குப் புறப்படும் ஒரு



# தசாவதாரக் காட்சித்தலம்

தாமிரபரணிக் கரையில் அமைந்துள்ள புண்ணியத்தலம் அகரம். இத்தலத்தில் வாழ்ந்திருந்த இளைஞன் மித்ரசகா. இவன் பணி, ஊர்ஊராகச் சென்று ஸ்ரீமந் நாராயணனின் தசாவதாரக் கதையை நாடகமாக நடத்துவது.

இவனுடைய பக்தியைக் கண்டு மெச்சிய திருமால் காஷ்மீரத்து இளவரசி சந்திரமாலினியை மணக்க அருள் புரிந்தார்.

இருவரும் மணமுடித்த பின் அகரம் கிராமத்துக்கே வந்து திருமால் பணி செய்து நீண்ட காலம் வாழ்ந்தனர். இவர்களின் முதுமைக் காலத்தில் ஸ்ரீமன் நாராயணன் தசாவதாரக் கோலத்தில் காட்சி தந்து ''ஓம் நமோ பகவதே வாசுதேவாய'' எனும் அற்புத மந்திரத்தையும் உபதேசித்தருளினார், இவர்கள் அமைத்ததே அகரத்தில் உள்ள ''தசாவதார சேத்ரம்'' ஆகும். இத்திருத்தலம் நவகிரக தோசங்கள் நீக்கி நல்வாழ்வு நல்குவதால் பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டுப் பயன் அடைகின்றனர்.

---

வீரனைப் போல் தோற்றமளிக்கிறார். பிரயோகச் சக்கரத்தைப் பெருமானின் உத்தரியத்தால் மூடியே வைக்கின்றனர். ஆதிவரதராஜரின் இடப்புறத்தில் கல்யாணவரதராஜா சாந்தஸ்வரூபியாகக் காட்சி கொடுக்கிறார். இவர்கள் இருவரும் கிழக்கு நோக்கிய சன்னதியில் எழுந்தருளி இருக்கின்றனர்.



புகழ் மிக்க பருத்தியூர் இராமர் தெற்கு நோக்கிய சன்னதியில் காட்சி தருகிறார். இராமர், சீதை, இலட்சுமணர், ஆஞ்சநேயர் ஆகிய நால்வரின் பஞ்சலோக மூர்த்தங்களும் அதே சோழர்காலத்தைச் சேர்ந்தவையே. அதாவது, ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானவை. நாலரை அடி உயரமுள்ள இராமர் அழகு கொஞ்சும் திருமேனி உடையவர். ஆஞ்சநேயர் வாயில் கையைப் பொத்திய நிலையில் அஞ்சலி ஹஸ்தராகக் காட்சியளிக்கிறார். பக்தர்கள் நினைத்தது நிறைவேற ஆஞ்சநேயருக்குச் சந்தனக் காப்பு செய்கின்றனர்.

மகாலட்சுமித் தாயாருக்குத் தனியே சன்னதி உள்ளது. அது பெருமாள் சன்னதியின் இடப்புறத்தில் வெளிச்சுவற்றில் அமைந்துள்ளது.

திருக்கோயிலின் நுழைவாயிலில் இப்போது மொட்டைக் கோபுரமே உள்ளது. பலமான அடித்தளத்துடன் விளங்கும் அக்கட்டுமானத்தின் மீது இராஜகோபுரம் எழுப்பத் தீர்மானித்து இருக்கின்றனர்.

ஸ்ரீராமநவமி விழா பத்து நாட்களுக்கு, பஜனை பத்ததியில் நடைபெற்று வந்தது. தற்காலத்துக்கு ஏற்ப, எளிய சொற்பொழிவுகளையும், இராமாயணப் பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சி களையும் ஏற்பாடு செய்து பாமர பக்தர்களை மகிழ்விக்க வேண்டியது நிர்வாகிகளின் கடமையாகும்.

தஞ்சைமற்றும் திருவாரூர் மாவட்டத் திருக்கோயில்களுக்கும், நவக்கிரகக் கோயில் களுக்கும் செல்வோர், பருத்தியூர் திருக்கோயில் களுக்கும் சென்று தரிசித்துப் பயனடையலாம்.

# தசரத சக்கரவர்த்தி வழிபட்ட தமிழகத் திருத்தலம்



சோழ வள நன்னாட்டில் கோயில் நகரமாம் குடந்தைக்குத் தென்பால் 10 கி.மீ. தொலைவில் கும்பகோணம் - திருவாரூர் மெயின் சாலையில் காவேரியின் உபநதியான அரசலாறு மற்றும் திருமலைராஜன் ஆற்றின் இடையில் ஆழ்வாரால் பாடல் பெற்ற 108 திருப்பதிகளில் ஒன்றான நறையூர் நம்பி ஆலயத்திற்கும் திருநறையூர் சித்தீஸ்வரம் சித்தநாதசுவாமி திருக்கோயில் இடையிலும் அமைந்துள்ளது அருள்மிகு பர்வதவர்த்தினி உடனுறை அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்.

இத்திருக்கோயில் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி ஆலய அமைப்புச் சிறப்பை போன்றே உள்ளது. மூலவர் அருள்மிகு இராமநாத சுவாமி; அம்பிகை அருள்மிகு பர்வத வர்த்தினி ஆகும்.

இத்திருக்கோயிலில் தனி சன்னதியில் தன் இரு மனைவி இரு மகன்களுடன் குடும்ப சமேதராய் அருள்மிகு சனீஸ்வர பகவான் அமைந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அருள்மிகு சனீஸ்வர பகவானின் பரிகாரத் திருத்தலமாக இத்தலம் உள்ளது.

ஸ்ரீராமர் போருக்கு செல்லும் முன் வணங்கி சென்றது இராமேஸ்வரம் ஆகும். போரில் வெற்றி பெற்ற பிறகு, வெற்றி இராமனாக வந்து இவ்வூர் அருள்மிகு இராமநாத சுவாமியை தரிசனம் செய்ததாக ஐதீகம்.

கிழக்கு நோக்கிய இத்திருக்கோயில் முன்பு அதிகார நந்தியும், பலிபீடமும் அமைந்துள்ளது. இவர்களைத் தரிசித்து பிரதான வாயிலை நுழைந்து உள்ளே சென்றால் மூலவர் இராமநாத சுவாமி உள்ளார்.

இராமபிரான் இராவண யுத்தம் முடிந்து நாடு திரும்புகையில் தன் தந்தை தசரதர் வழிபட்ட இத்தலத்தில் இராம தீர்த்தம் என்ற குளம் ஏற்படுத்தி அதில் தன் துணைவியார் சீதை மற்றும் இலட்சுமணருடன் நீராடி ஒரு சிவனையும், பார்வதியையும் பிரதிஷ்டை செய்து தன் இராவணவத தோஷத்தையும் நிவர்த்தி செய்து தான் இராமேஸ்வரத்தில் இட்ட பெயரையே இத்திருக்கோயில் மூலவருக்கும் வைக்கிறார். ஹனுமாரும் இவரை வணங்கி கோஷ்டத்தில் ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து ஹனுமந்த லிங்கம் எனப் பெயரிடுகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆவணித் திங்கள் 25ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை சூரியன் தன் ஒளிக்கதிர்களால் இறைவனை வழிபடுகிறார்.

சந்திரனும் சித்ராபௌர்ணமி தோறும் இவ்வாறே வழிபடுகின்றார்.

இவரை ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் வழிபடுவதன் மூலம் மனிதர்களுக்கு எல்லையில்லாபலனை அளிக்கிறார்.

இறைவி அருள்மிகு பர்வத வர்த்தினி தெற்கு நோக்கி அலங்கார சொரூபியாக நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவரது சந்நிதியில் லலிதா ஸகஸ்ரநாமம், பாராயணம் செய்யும்போது அஷ்டலெட்சுமியின் அனுக்கிரஹம் கிடைப்பது நிச்சயம்.

சுவாமி அம்பாளை வணங்கிப் பிரகாரம் சென்றோமானால் தென் திசைநோக்கி அமர்ந்திருக்கும் தெட்சிணாமூர்த்தி ரிஷப வாகனத்தில் அமர்ந்து மேதா தட்சிணாமூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இது வேறு எங்கும் காண முடியாத சிறப்பம்சமாகும். குரு பெயர்ச்சி தோறும் விசேஷ அபிஷேகம், ஹோமங்கள், அர்ச்சனைகள் நடைபெற்று வருகிறது, பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. ஜாதக ரீதியாக குரு பலம் குறைந்தவர்கள் இவருக்கு அபிஷேகம், ஹோமங்கள் செய்வித்துப் பரிகாரம் பெறலாம்.

கிழக்கு நோக்கி கம்பீரமாகக் காட்சி தரும் ஆனந்த கணபதி நான்கு திருக்கரங்களுடன் அமைந்துள்ளார். வேண்டுவோர்க்கு வேண்டும் எல்லா வரங்களை தரும் இந்த கணபதியை வணங்கி எண்ணற்ற முனிவர்களும் சித்தியை அடைந்துள்ளனர். மாத சதுர்த்திகள் சிறப்பாக நடைபெறுகிறது. ஆவணி மாதம் வரும் பிள்ளையார் சதுர்த்தியில் இவருக்கு மூன்று நாள் உற்சவம் மிகவும் சிறப்பாக



நடைபெற்று வருகிறது.

ஆனந்த கணபதியை வழிபட்டுப் பிறகு பிரகாரத்தில் வலம் வரும்போது அருள்மிகு சுப்பிரமணியர் இரு தேவியர்களுடன் அமர்ந்து அருள்பாலிக்கிறார். எதிரே அண்ணாமலையார் உள்ளார். ஒவ்வொரு கார்த்திகைக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

அதற்கடுத்து அருள்மிகு ஹனுமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஹனுமந்த லிங்கம் மற்றும் மஹாலெட்சுமி, கெஜலட்சுமி அருள் பாலிக்கின்றனர்.

கெஜலட்சுமி வடமேற்கு மூலையிலிருந்து தன்னுடைய வீச்சன்யத்தை கிழக்கு மூலையில் (ஈசான்ய மூலையில்) அமைந்திருக்கும் அருள்மிகு பைரவருக்கு வழங்குவதால் அருள்மிகு சொர்ண ஆகர்ஷண பைரவராகி, வழிபடும் பக்தர்களுக்கு சத்ரு தொல்லைகள், வழக்கு விவகாரங்களில் அருள்பாலிப்பவராக உள்ளார். வறுமையை நீக்கி நல்ல நிலையை அடைய அருள் வழங்குகிறார். அருள்மிகு பைரவரை ஒவ்வொரு அஷ்டமி திதி தோறும் வழிபட்டால் எண்ணற்ற இன்பங்களைத் தந்தருள்வார்.

அருள்மிகு துர்க்கை கையில் சங்கு சக்கரத்துடன் ஸ்ரீ விஷ்ணு துர்க்கையாகக் காட்சி அளிக்கிறார். இராகு காலம் தோறும் இவரை வழிபடுபவர்கள் நல்ல மண வாழ்க்கையும், இல்வாழ்க்கையும் அடைகின்றனர். வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அருகே பிரம்மாவும், எதிரே சண்டிகேஸ்வரரும் அருள் பாலிக்கின்றனர். இராகு கேது தனி மேடையில் அமர்ந்து ஒவ்வொரு இராகு, கேது பெயர்ச்சி தோறும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இராகு, கேதுவை வணங்கி வலம் வந்தவுடன் எதிரே அருள்மிகு சனி பகவான் தன் திசையான மேற்கு நோக்கி தனிக்கொடிமரம் காக வாகனத்தோடு தனி சந்நதியில் குடும்ப சமேதராய் அருள்பாலிக்கிறார்.

**இந்தியாவிலேயே இந்த ஒரு சந்நிதானத்தில் மட்டுமே தன் இரு மனைவிகள் இரு குழந்தைகளுடன் தசரதர் கைகூப்ப குடும்ப சமேதராய் சாந்த சொருபமாய் அருள்மிகு சனீஸ்வர பகவான் அருள்புரிந்து வருகிறார்.**

சனி பகவான் ரோகிணி நட்சத்திரத்தில 12 வருட காலம் வாசம் செய்து வெளியேறினால் உலகில் ரோகிணி சகடபேதம் என்ற பஞ்சம் ஏற்படும். அதை யாராலும் தடுக்க முடியாது என்று சிவபெருமான் வாயிலாக நாரதர் கேட்டு அச்செய்தியை வசிஷ்டரிடம் கொண்டு சேர்க்கிறார். இந்தச் செய்தியை தசரதரிடம் கொண்டு சேர்த்த வசிஷ்டர் தடுக்க வழி ஏதும் இல்லை எனக் கூறுகிறார்.

## அருள்மிகு சனிபகவான் கவசம்



அன்ன தானத்தின் மீது
அளவிலா பிரியம் வைத்த
மன்னனே! சனியே! உன்னை
மனதாரப் போற்றுகின்றோம்!
உன்னையே சரணடைந்தோம்!
உயர்வெலாம் எமக்குத் தந்தே,
மன்னர் போல் வாழ்வதற்கே
மணியான வழிவகுப்பாய்!

மந்தனாம் காரி, நீலா
மணியான மகர வாசா!
தந்ததோர் கவசம் கேட்டே
சனியென்னும் எங்கள் ஈசா!
வந்திடும் துயரம் நீக்கு!
வாழ்வினை வசந்தம் ஆக்கு!
எந்த நாள் வந்த போதும்
இனிய நாள் ஆக மாற்று!

இதைக் கேட்ட தசரதர் சனி பகவானை ரோகிணியை விட்டு கடக்குமுன் தடுத்து நிறுத்துகிறார். போரிட தயாராகும் தசரதரைப் பார்த்த சனி பகவான் நகைத்து ''மானிட அரசரே! உன் வீரத்தை பாராட்டுகின்றேன். அதில் உள்ள மக்கள் நலத்தையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும் என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை வழிவிடு'' என்கிறார். மனம் ஒப்பாத தசரதர் அவரை நோக்கி ஸ்தோத்திரம் செய்கிறார் (தசரத ஸ்லோகம்) அதில் மனம் குளிர்ந்த சனி பகவான் தசரதரை நோக்கி ''உன் ஸ்தோத்திரத்தால் மனம் மகிழ்ச்சியடைகிறேன். என்னை திருநறையூரில் வந்து வழிபடும்போது நான் மங்கள சனியாக காட்சி கொடுத்து யாரும் யாருக்கும் கொடுக்க முடியாத வரத்தை தருகிறேன்'' என்கிறார். அதுபோல தசரதர் இத்தலத்தில் உள்ள சூரிய தீர்த்தத்தில் நீராடி சனி பகவானை வணங்க அவருக்கு கல்யாண கோலத்தோடு காட்சி தருகிறார். இரு வரங்களையும் தருகிறார்.

முதல் வரமானது ரோகிணி சகடபேத காலத்தில் நான் யாருக்கும் எந்த கஷ்டத்தையும் கொடுப்பதில்லை என்றும், இரண்டாவது வரமானது குடும்ப சமேதராய் அருள்மிகு மந்தா தேவி, அருள்மிகு ஜேஷ்டா தேவி, அருள்மிகு மாந்தி, அருள்மிகு குளிகன் சமேதரராய் உள்ள இவ்வாலயத்தில் என்னை வந்து வழிபடுவோருக்கு மற்ற எட்டு கிரஹங்களால் ஏற்படும் பாதிப்புக்களை நீக்குவேன் என்று அருள்புரிகிறார்.

இவ்வாலயத்தில் மட்டுமே சனி பகவான் அருள்மிகு மந்தாதேவி அருள்மிகு ஜேஷ்டா தேவி சமேதராய் காட்சியளிக்கிறார். தனது இரு குழந்தைகளான ஆயுளை நிர்ணயிக்கும் கிரஹமான மாந்தி என்ற மகனும், காலங்களை நிர்ணயிக்கும் குளிகை என்ற காலத்தின் அதிபதியான குளிகனோடும் இரு மனைவி, இரு குழந்தைகளோடும் காட்சியளிக்கிறார். வெளிநாட்டு பக்தர்களும் இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபடுகின்றனர்.

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)



**''உண்ணின்றுருக்கியொருப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே''**

(திருமந்திரம் : உபதேசம் 1)

எங்கும், எதிலும், நாம் காண்பதிலும் கேட்பதிலும் அனுபவிப்பதிலும் திருவருளையே உணர்ந்தவர்கள் அருளாளர்கள். தன்னையும் ஒரு பொருளாக மதித்து, சிவிகையேற்றி, இறைவன் தனக்கு அருள் புரிந்த தன்மையை நினைந்து நினைந்து உருகி தனது அன்பினை வெளிக் காட்டினார் மாணிக்கவாசகப் பெருமான்.

பாண்டிய மன்னனின் அமைச்சராகப் பணிபுரிந்து மாணிக்கவாசகர் மன்னனின் படைக்கு குதிரை வாங்கச் சென்றவர் திருப்பெருந்துறையில், குரு வடிவத்தில் வந்த இறைவனால் ஈர்க்கப்பட்டார். தன்னை மறந்தார். உலக வாதனை அவரை விட்டகன்றது. பெருந்துறையில் திருவருட்கடலை எதிர்நோக்கி நின்றார். திருவருளும் மழையெனப் பெய்தது. பல பிறவிகளில் பண்பட்ட அவருடைய ஆன்மாவை திருவருள் மழை நிரப்புகிறது. அன்பெனும் வித்து, முளை விட்டு, செடியாகி, மலர்களாகி, அன்பெனும் தேன் பெருமானது உள்ளத்திலும், உடலிலும் பரவிப் பெருமானை உருகச் செய்கிறது.

அவ்வாறு உருகும் நேரத்தில் அருளாளர்கள், திருவருளால் தாங்கள் பெற்ற நலன்களை எல்லாம் பற்றிச் சிந்திக்கின்றார்கள். இவ்வுலகில் பிறவி எடுக்கும் உயிர்கள், தத்தம் வினைப் பயன்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யும் போது அவை பெற்ற வினை அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்து மேலும் வினை உலகில் புகாமல் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து நன்னெறிகளை மேற்கொண்டும். தீ நெறிகளைத் தவிர்த்தும் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொள்ளும் முனைப்பில் இருப்பதில்லை.

அங்கே ஒன்று தடைப்படுகிறது. ஒரு தடை இருப்பதாகக் கூட உயிர்கள் தெரிந்து கொள்வதில்லை. அதைப் பற்றிச் சிந்திப்பதும் இல்லை. இந்தத் தடையை அறியாமை என்கிறோம். ஆனால் அறியாமை என்பது ஒரு காரியம். வேறு ஒரு காரணத்தின் விளைவாகும்.

அந்தக் காரணத்தை, அடிப்படை பலமாக வைத்து, அதற்கு ஆணவம் என்று அருளாளர்கள் பெயரிட்டார்கள்.

ஆணவம் மூல மலம், சகசமலம் என்றெல்லாம் கருதப்படுகிறது. ஆணவம் உயிரின் இயல்பான, சிறப்பான நிலையை மறக்க வைக்கின்றது. உயிர்களுக்கு எல்லாம் தலைவனான இறைவனைப் பற்றியும் சிந்திக்க விடாமல் செய்து விடுகிறது. ஆணவம், பிறவி தோறும் உயிரோடு இணைந்து வந்தாலும், அது உயிரின் குணம் ஆகாது. அது உயிரின் குறைபாடேயாகும். இந்த குறைபாட்டைக் களைய இயலும்.

ஆனால், அறியாமை காரணமாக, உயிர் தனது குறைபாடான ஆணவத்தையும் அறிந்து கொள்வதில்லை. மாறாக, ஆணவத்தோடு நின்று செயல்படும் வகையில், தன்னை உடல் என்று கருதி, உலக அனுபவங்களில் திளைத்து, இறப்பு, பிறப்பு ஆகிய சூழலுக்கு வித்திட்டுக் கொள்கிறது. பொருளில் நின்று அருளை மறக்கின்றது. ''மாயை மறைக்க மறைந்தது அப்பொருள்'' என்கிறார் திருமூலர். ''பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்'' என்றும் அவர் சொல்வார்.

அருளாளர்கள் இதையெல்லாம் கடந்தவர்கள். ''எல்லாப் பிறவியும் பிறந்து இளைத்தேன்'' என்கிறார் மணிவாசகப் பெருமான். இளைத்தல் என்றால் பணி செய்தல் என்ற பொருளும் உண்டு. பல பிறவிகளில் புலன் வழி சென்று உடலுக்குப் பணி செய்வதையே பெரிதாகக் கொண்டேன். அது பயனற்றது. வீணானது என்று உணருகிறேன். உன்னைத் தேடுகிறேன். உன் அருளை நாடுகிறேன். உன் கருணை அளப்பரியது. உன் திருவருளைக் காட்டினாய். எல்லாவற்றையும் துறந்தேன். உன்னுடைய திருவடிப் போற்றினில் அடங்கி உள்ளேன்'' என்ற பொருள்பட, மணிவாசகப் பெருமான், தமது உள்ளக்கிடக்கையை சிவபுராணத்தில் வெளியிடுகிறார்.

ஆணவம் காரணமாக இருக்க, இந்த உணர்வு நிலை எளிதில் கிடைக்கக் கூடியதல்ல. திருவெண்ணைநல்லூரில் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்படும் பேறு வரும் வகை நம்பி ஆரூரர், கிழவேதியராக வந்த இறைவனுடன் வாதாடுகிறார். ஆட்கொண்டு, ஈசனார் காட்சி அளித்த பிறகுதான், இறைவன் அறியாமையில் மூழ்கியிருந்த தன்னை மனத்தில் வைத்திருந்த பெருங்கருணையை நினைக்கிறார். தாய்ப் பசுவின் குரலைக் கேட்ட இளங்கன்று போல் அலறுகிறார். உள்ளம் உருகுகிறது. கண்ணீர் பெருகுகிறது. திறந்து விட்ட அணைக்கட்டிலிருந்து பாய்ந்து வரும் வெள்ளம் போல, அன்பெனும் உணர்வு, தமிழிசைவெள்ளமாக வரத் தொடங்கியது.

**''பித்தா பிறை சூடிபெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை**



# கார்த்திகையில் ஆழ்வார், நாயன்மார் திருநட்சத்திரம்

| | | |
|---|---|---|
| திருப்பாணாழ்வார் | - | ரோகிணி |
| திருமங்கையாழ்வார் | - | கார்த்திகை |
| கணம்புல்லர் | - | கார்த்திகை |
| மெய்ப்பொருள்நாயனார் | - | உத்திரம் |
| ஆனாயர் | - | அத்தம் |
| மூர்க்கர் | - | மூலம் |
| சிறப்புலியார் | - | பூராடம் |

வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெல் நல்லூர்அருட்துறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேன்
எனலாமே''

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதி மாண்பும் சிற்றறிவினால் அறிந்து கொள்ள இயலுமோ!

பிறவியின் நோக்கம், மலங்களை நீக்கி, நம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, திருவருளைப் பற்றிச் சிந்தித்து, அது நம்முடைய வாழ்வில், பற்றுக்கோடாக நின்று துணை புரிய வேண்டுமென்று இறைவனை வழிபடுவது தான்.

இந்த நோக்கம் உள்ளத்தில் புலப்பட பல பிறவிகள் எடுக்க நேர்ந்தாலும் திருவருளின் இயக்கம் ஓய்வதில்லை. அதற்குத் தொடக்கமோ, முடிவோ கிடையாது. நாம், நமது வினைப் பயன்களை அனுபவித்தே தீர வேண்டுமென்ற நிலையில், பராசக்தி, ஆதிசக்தியாகவும், திரோதன சக்தியாகவும், பரிணமித்து, உயிருக்கு உயிராக, தோன்றாத் துணையாக, உயிரை நடத்திச் செல்கிறது. இன்பமும் துன்பமும் கலந்தே வரும் வினைப்பயன் அனுபவம் ஆணவ மலத்தின் வலிமையைக் குறைக்க உதவுகிறது.

திருமூலர் சொல்வார் : எனது இயற்கை பாசமாகிய ஆணவத்தின் சக்தியை வலு இழக்கச் செய்வதன் பொருட்டு, செயற்கைப் பாசமாகிய கன்மம், மாயை ஆகியவற்றில் இட்டு, துன்பம் கொடுத்ததும் உலகம், உறவு, பொருள்கள் போன்றவற்றில் விருப்பத்தை வளர்க்கச் செய்தும் திருவருள் இயங்கி வருவதை நான் அறிவேன். அவ்வாறு அனுபவம் பெற்று, அறிவு படிப்படியாக முதிர்ச்சி அடையச் செய்தலும் அருளே. மெய்ப் பொருளை தெரிந்து கொள்வதற்குத் தடையாக நின்றவற்றை நீக்கியதும் அருளே. அதனால் தயக்கம் நீங்கி, திருவருள் வழி மெய்ப்பொருள் மீது எனக்குப் பற்று வளர்ந்தபோது, துன்பக் கடலிலிருந்து என்னைக் கரையேற்றியதும் திருவருளே. அவ்வாறு கரையேறியபோது, நான் எல்லையில்லாத ஆனந்தம் பெற்றபோது, அதற்குக் காரணமாக இருந்த திருவருள் தான் தோன்றாது மறைந்து நின்றதையும் உணர்ந்து கொண்டேன்.

''பாசத்தில் இட்ட(து) அருள் ; அந்தப் பாசத்தில்
நேசத்தை விட்ட(து) அருள்; அந்த நேசத்தின்
கூசற்ற முத்தி அருள்; அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றாநிலை அருளாமே''

(திருமந்திரம். ஏழாம் தந்திரம்- திருவருள் வைப்பு)

திருவருள் உயிருக்குச் செய்யும் உதவியை உயிர் அறிந்து கொள்ளத் தொடங்கிய போது, இறைவன் தனக்கு வழிகாட்டி, கண் காட்டி, நெறி காட்டி, தன்னோடு சேர்த்துக் கொள்ளும் அவர்தம் ஒப்பிலா ஆனந்தமாக அமைகிறது. மலங்கள் நீங்கித் தூய்மை அடைதலே, உயிருக்கு ஒரு விடுதலை அனுபவமாகிறது. அப்போது, உள்ளத்திலிருந்து எழும் நன்றி உணர்வுகள் கரை புரண்டு ஓடுகிறது.

புறத்தே உள்ள கண்கள் உலக அனுபவத்தைச் சேகரித்து உயிரை அமிழ்த்தும் நிலை மாறி, திருஅருளால், உள்ளத்து உணர்வுகள் இயங்கத் தொடங்கி, அகக்கண்கள் திறந்து பார்க்கும் போது தான் பெற்ற அனுபவங்களைத் தெளிவாகச் சொல்கிறார்திருமூலர் பெருமான்.

எனது அறியாமையால் திருவருள் வழி செல்லாமல் உழன்றேன். சிவன் தனது திருவடிகளை என் தலையில் சூட்டி என் அறியாமையைப் போக்கினான். என்னை ஆட்கொண்டான். அதனால் நான் தூய்மை பெற்றேன். அவன் என்னுள் புகுந்து நிற்க, நான் அவனது அருளேயாய், எனது இயற்கைத் தன்மையை அடைய வைத்தான். அவன் எனக்கு அளித்த சொல்லொணா இன்பத்தை நினைத்து ஒன்றும் தோன்றாது நிற்கின்றேன்

''புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
திறமே புகுந்தென்னை நின்மலனாக்கி
அறமே புகுந்தெனக்கு ஆரமுதீந்த
திறமே தென்றெண்ணித் திகைத்திருந்தேனே!''

(திருமந்திரம். ஏழாம் தந்திரம்)

(தொடரும்)



# கலைமகளே சரணம்

டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை''
- திருவள்ளூர்

''கலை என்பது கடந்த காலத்தின் கன்னி ; நிகழ்காலத்தில்
மனைவி ; எதிர்காலத்தில் தாய்''
- காண்டேகர்

''அறிவே இன்பம்; அறிவே அணிகலன்; அறிவே ஆற்றல்;''
- பிரான்சிஸ் பேக்கன்

''அறிவைத் தேடுங்கள் ! அது நம்மை ஆற்றலுடையவனாக
ஆக்குகிறது. அறிவு, தனிமையில் நமது தோழன்;
இன்பத்திற்கு வழிகாட்டி; துன்பத்திலோ ஆதரவாளி!
நண்பர்களுக்கிடையில் அது நமது நல்லாபரணம்;
பகைவர்களிடமிருந்து அது நம்மைக் காக்கும் கேடயம்!''
- நபிகள் நாயகம்

''ஒரு பெரிய நூல் நிலையத்தில் மானிட சமுதாயத்தின்
நாட்குறிப்பேடு அமைந்துள்ளது''
-ஜி. டாசன்

''ஒரு நூல் நிலையக் கதவு திறக்கப்படும் பொழுது ஒரு
சிறைச்சாலைக் கதவு தாழிடப்படுகிறது''
-சுவாமி விவேகானந்தர்

''நாடு நலம் பெற வீட்டுக்கொரு நூலகம்
வேண்டும்''
- அறிஞர் அண்ணா

ஒரு சமுதாயம் ஏற்றத்தோடும் எழிலோடும் வாழ வேண்டுமானால் அந்தச் சமுதாயத்தில் கல்வி போற்றப்பட வேண்டும். கல்வி வளர வேண்டுமானால், அந்த நாட்டிலே பள்ளிகளும் கல்விச் சாலைகளும் விரிவாக அமைக்கப்பட வேண்டும். இவை ஏற்படுத்தப்படுகின்றபோதுதான் கல்வி வளர்ச்சியடைகின்றது. கல்வியின் மூலமாக சிந்தனை வளம் பெறுகின்றது. சிந்தனை வளம் பெறுகின்றபொழுது ஒரு சீரான சமூகம் உருவாகும். சீரான சமூகம் உருவாகின்றபொழுது மனித நாகரீகமும் பண்பாடும் போற்றிப் பாதுகாக்கப்படும். இவற்றை எல்லாம் அரவணைத்துக் காக்கக்கூடிய சர்வ வல்லமையும் படைத்த தெய்வம் முப்பெரும் தேவியரில் ஒருவரான கலைமகள்.

கலைமகள், மலைமகள், அலைமகள் என்று மனித சமுதாயத்தால் வணங்கப்படும் இந்த முப்பெருந்தேவியரில், கலைமகள் கல்விக்கு அதிபதி. அறிவை வளர்க்கக் கூடிய அனைத்துச் சக்திகளையும் பெற்ற தேவி, ஞானத்தை ஊட்டக்கூடிய நவரசநாயகி, வீணையும் கையுமாக இருந்து மக்களுக்கு வெற்றிக் கொடி அளிக்கக்கூடிய பெருமாட்டி. சரஸ்வதி அந்தாதி என்று சொல்லக்கூடிய நூலில் கம்பநாடர் சரஸ்வதியை போற்றிப் பாடுவார்.

''ஆய கலைகள் அறுபத்துநான்கும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்''

கவிச் சக்ரவர்த்தியான ஒட்டக்கூத்தர் பெருங்கவிஞரானது கலைமகளின் கருணைக் கொடையால்; தேவியின் மீது பேரன்பு கொண்டு தாம் பாடிய தக்கயாகப் பரணியில்,

''ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியவே''

என்று பாடியிருக்கிறார்.

நாகைக்கு அருகில் திருமலைராயன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனது அரசவைக் கவிஞர் அதிமதுரம் என்பவர். அவருக்குக் கவி காளமேகத்தைக் கண்டால் பிடிக்காது. அவரைப் பற்றி அதிமதுரம் புறம் சொல்லி வைத்திருந்தார் அரசனிடம்.

ஒரு நாள் கவி காளமேகம் அரசனைப் பார்க்கச் சென்று எலுமிச்சம் பழம் கொடுத்தான். ஆனால் பெற்றுக் கொண்ட அரசன் இருக்கை கொடுக்கவில்லை. உடனே கலைமகளை வேண்டினார். திருமலைராயன் சிம்மாசனத்தை வளருமாறு செய்தாள் கலைவாணி. சரிசமமாக அமர்ந்தார் காளமேகம். அவர் கலைமகள் மீது பாடிய பாடல் கல்லையும் உருக்கும் சக்தி

வாய்ந்தது.

''வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியா சனத்தில் வைத்த தாய்''

ஊமையாகப் பிறந்து திருச்செந்தூரில் முருகப் பெருமானின் திருவருளால் வாய் திறக்கப்பட்டவர் குமார குருபர சுவாமிகள். அவர் ''சகலகலா வல்லிமாலை'' என்ற அற்புதத் துதி ஒன்றை சரஸ்வதி தேவியின் அருள் கொடையைப் பாராட்டிப் பாடுவார். அதை அன்றாடம் ஓதி வந்தால் கலைமகளின் திருவருளால் காரிய சித்தி ஏற்படும் என்பது பெரியோர்களின் கூற்று.

''வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!''

மகாகவி பாரதியார் சரஸ்வதி தேவியுடைய துதியிலே பாடுகின்றபொழுது வெள்ளைத் தாமரைப் பூவில் இருந்து மக்களுக்கு அருள் பாலிக்கும் விதத்தை அருமையாக பாடி இருப்பார். ஆனந்த பைரவி ராகத்தில் அந்தப் பாடலைப் பாடுகின்றபொழுது சரஸ்வதி தேவி அவர் முன்னால் தாண்டவம் ஆடுவாள்.

''வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்''

கலைமகளை வணங்கி அவளின் அருள் பெற்றோர் அனேகர். நான்முகன் என்று சொல்லப்படும் படைப்புக் கடவுளான பிரம்ம தேவன் சரஸ்வதி தேவியை துதித்து அவள் அருள் பெற்ற பின்னரே பதிஞானத்தின் உட்பொருளை உபதேசிக்க முடிந்தது என்பது புராணம்.

ராம கதையை வடமொழியில் அருளிய வால்மீகி, கலைமகளை வணங்கிய பின்னரே புராண சூத்திரங்களை வியாசருக்கு உபதேசித்தார் என்பது வரலாறு. இதுபோலவே பிரகஸ்பதி



என்பவரும் கலைமகளை வணங்கி அவளிடம் வரம் பெற்ற பின்னர் தான் சப்தசாஸ்திரம் என்ற நூலை இந்திரனுக்குக் கற்றுக் கொடுத்தார் என்கிறது புராணம். சரஸ்வதி தேவி பேரில் ஒரு துதி எழுத அத்துதியைக் கேட்டு மகிழ்ந்த தேவி அவரை பெரிய ஞானியாகத் திகழ வரம் அளித்து ஆசீர்வதித்தார்.


சரஸ்வதி தேவியின் தீவிர பக்தரான காளிதாசர் தாம் எழுதிய ரகுவம்சம், குமார சம்பவம், மாளவிகாக்கினிமித்திரம், சாகுந்தலம் மற்றும் மேகதூதம் ஆகிய நூல்களில் தேவியைப் பற்றிப் பாடியுள்ளார்.

போஜமகாராஜா இறந்து விட்டான் என்று கூறக் கேட்ட காளிதாசன் ஒரு ஸ்லோகம் பாட அவன் முன்னால் மாறுவேடத்தில் நின்ற போஜ மகாராஜா செத்து விழ, சரஸ்வதி தேவியை வேண்டி மூன்றேமுக்கால் நாழி உயிருடன் இருக்கும் வரம் பெற்றான் போஜமகாராஜா.

போஜராஜ மன்னன் அவையில் யாருடைய கவிதை உயர்ந்தது என்ற சர்ச்சையில் தராசின் இரு தட்டுகளிலும் காளிதாசனின் கவிதை மற்றும் பவபூதி கவிதைகளை வைக்க பவபூதிக்கு அவமானம் நேர்ந்துவிடக்கூடாது என்பதால் தேவி தன் மாலையில் இருந்த வெண் தாமரை மலரில் இருந்த தேன் துளியை விரல் நுனியால் எடுத்து பவபூதியின் தட்டின் மீது தெளித்து இரு தட்டுக்களையும் சமமாக நிறுத்தினாள்.

ஒரு முறை சரஸ்வதியின் கடாட்சத்தைப் பெற்ற அமரசிம்மன் ஆதிசங்கரருடன் தர்க்கம் நடத்த, ஆதிசங்கரரின் நெருடலான கேள்விகளுக்கு திரை மறைவில் இருந்து சரஸ்வதி தேவி பதில் தந்ததாக வரலாறு.

## ராமானுஜரிடம் சரஸ்வதி



ஒரு முறை பட்டிமன்றம் ஒன்றில் ராமானுஜரிடம் சரஸ்வதி எதிரில் எழுந்தருளி சுருதிக்கு பொருள் கேட்க அதற்கு ராமானுஜர் பொருத்தமான பொருளைக் கூற, அவருக்குப் பாஷ்யக்காரர் பட்டத்தையும் ஹயக்ரீவரையும் அளித்தாள் சரஸ்வதி.

# பாம்பன் சுவாமிகள்

தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.
சிறப்புச் செயலாளர், தமிழ் வளர்ச்சி
பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை



'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' என்பது வள்ளுவர் வாக்கு. இந்த வாக்கின்படியே சுவாமிகளுக்கு ஒரு நல்ல காலம் கிடைத்தது.

நல்ல இடமான பிரப்பன் வலசைஎன்ற கிராமத்திலுள்ள மயானத்தைத் தேர்ந்தெடுத்தார். சமரசம் உலவும் இடம், ஜாதியில் மேலோரென்றும், தாழ்ந்தவர் கீழோரென்றும் பேதமில்லாத இடம். ஆண்டியும் அரசனும், அறிஞனும் அசடனும், யோகியும் போகியும், ஈசன் பொற்பாதம் வணங்கும் ஞானியும் உயிர் போன போது கூடும் ஒரு பொது இடம். எல்லோரும் உறங்குமிடம் மயானம்.

மனைவி, தாய், தந்தை மற்றுமுள்ள சுற்றத்தாரும் உயிர் போன பிறகு ஒருவரும் உதவ மாட்டார். உற்ற துணையாவான் உமைபாலனே என்பது சுவாமிகள் வாக்கு. ஆகவே இந்த மயானத்தைத் தேர்ந்தெடுத்தார்.

தேடிய மாடு, நீடிய செல்வம், மாட மாளிகை, கூட கோபுரம் ஆகியவை மயானம் போகும் போது கூட வருவதில்லை. சமய நூல் அறிஞர்கள் கருத்துப்படி மயானம் மலமாய கன்மங்களைச் சுட்டு நீறாக்கும் குறிப்பை உடையது. உயிர்களின் மல மாசுகளை ஒழிக்கவல்ல கூத்தப் பெருமானது நடனசாலை மயானமே. ஆகவேதான் சுவாமிகள் மயானத்தைத் தவச்சாலையாக ஏற்றார்.

'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்பார்கள். பல நல்வினைப் பயனால் இந்த தவநிலை நமது பாம்பன் சுவாமிகளுக்குக் கிட்டியது. அதனால்தான் சுவாமிகள் தம்முடைய உயிரையும் சிறிதும் பொருட் படுத்தாமல் தம் மனத்தை அடக்கி, மயில் வாகனனை வழிபடுகின்ற மாபெரும் முயற்சியில் இறங்கினார். இதில் தனிச் சிறப்பு என்னவென்றால் சுவாமிகள் இல்லறத்திலிருந்தே செய்தார்கள் என்பது.

அப்போதைய மாவட்ட கலெக்டர் ஆணைப்படி மயான வெளியில் ஒரு கொட்டகை போடப்பட்டது. அதன் நடுவிலே ஒருவர் நன்கு உட்காரக் கூடியதாக ஒரு சதுரக் குழி வெட்டப்பட்டது. நாற்புறமும் வேலியிடப் பட்டது. சுவாமிகள் நிட்டைக்குப் புறப்படுவதற்கு முன்பாக தம் அன்பர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் குமரக் கடவுளை மறவாதிருங்கள் என்று உபதேசித்து நல்லோர்களை வணங்கிக் கொட்டகையில் புகுந்தார்.

பின் குழியில் வடக்கு நோக்கி எட்டி மரத்தால் ஆன யோகத் தண்டுடன் அமர்ந்தார். குமரகுரு, குமரகுரு என்று கூறிக் கைகூப்பி வணங்கியவண்ணம் இருந்தார். இவ்வாறு சுவாமிகள் தம்முடைய சித்தத்தில் செவ்வேளையே சிந்தித்து அமர்ந்து இருந்தார். முருகப்பெருமான் திருநாமங்களில் பலவற்றுள் 'குமரகுரு' என்ற நாமம் முன்நின்று காட்ட வல்லது. ''மறையாயிரங்களும் குமரகுரு என, வலிய சேடன் அஞ்சவந்திடுவோனே ''என்ற அருணகிரியார் அருள்வாக்கால் அறிக.

**சோதனையும் சாதனையும்:**

''நலமதொன்றற்கு உறுமிடையூறு நாதனே பலவுள'' என்பர் மாதவச் சிவஞான யோகிகள். அதேபோல நம் அடிகளாருக்கும் மேற்கொண்ட தியான யோக சாதனையில் வேதனை விளைவிக்கும் பல சோதனைகளும் ஏற்பட்டன. ஒரு நாள் பாம்பொன்று இவருள்ள இடத்தினைக் கடந்து இவர் கண்ணெதிரில் சென்றது. வாய்தோறும் நெருப்பு உமிழும் வாசுகி என்ற பாம்பை மிதித்து ஆடும் வண்ண மயிலோன் திருவருளால், இவரது சித்தம் அதனால் சிறிதும் கலங்கவில்லை. முதல் நாள் தொடங்கி ஐந்தாம் நாளிரவு வரையில் ஆணுருவும் பெண்ணுருவும் கொண்ட ஆறு, ஏழு பேய்கள், இவரைச் சூழ்ந்து தொல்லை விளைத்தன. ஆயினும் அவைகளில் ஒன்றேனும் சுவாமிகளைத் தீண்டவே இல்லை. பின்அவை மெல்ல மறைந்தொழிந்தன.

ஒரு சமயம் ஒரு பெரிய ஆவிபோன்ற ஒன்று சுவாமிகளை அணுகியது. பின் அது இவரைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, 'வா' என்ற குரல் கொடுத்து மேலே தூக்கியது. ஆனால் இவர் தம் அருகிலிருந்த எட்டிமர யோகதண்டத்தால் அடித்தனர். இவர் அடித்த அடி மேலே தூக்கிய ஆவியின் மேல் படவில்லை. உடனே சுவாமிகள் திருவாறெழுத்தைச் செபித்தனர். கொஞ்சநேரத்தில் பேய்த்தலைமை சான்ற அந்த முனி, தெற்கு நோக்கி நெடுந்தொலைவு சென்று மறைந்தது.

இவ்வநுபவத்தை,

"நிலவளந்தரு பிரப்பை ஈமமா
நிலனிருந்து நான் நினை நினைந்தபோது
அலகை ஐந்து நாள் எனை வளைந்தபோம்
அது விளைத்தக்கால் அவைதுரத்தினாய்
வலிய ஆவிபேய் அணுகி என்னை மேல்
வருதி என்று எழல்புரி வியந்தரம்
விலகவே செய்தை இங்ஙன் நீஎனை
விடுவதென்கொல் சூரடு மடங்கலே"

(ஸ்ரீமத்குமாரசுவாமியம் குறித்தது)

எனப் பாடியிருக்கக் காணலாம்.

**அடிகளவர் அருட்பேறு:**

ஆறாம் நாள் ஆசிரியருக்கு மனமடங்கி இறைவனை வழிபடும் பேறு கிட்டியது.

"சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு வாய் ஏன் பராபரமே"

என்பது தாயுமானவர் அநுபவவுரையன்றோ?

ஒரு நாள், நீஎழுந்துவிடு என்ற குரல் கேட்டது. உடனே பாம்பன் முனிவரும், "ஐயனே! இக்காலத்து மனிதருள் யாரையும் ஞானாசிரியனாக அடைய என்மன மிசையாது. கரவாகிய கல்வியுளார் கடைசென்று நான் இரந்து இடருறாதவாறு கூறத்தக்க மெய்ப் பொருள் எதுவாயினும் நீயே அருள் செய்க. பின்னர் நான் எழுந்து விடுவேன்" என வேண்டியிருந்தனர்.

ஏழாம் நாளிரவில் ஒரு காளைக் குமரர் இவர்கண் முன் தோன்றினார். அவரது சிரமோ முண்டிதமாய (மொட்டை அடித்து) இருந்தது. அரையில் தூய கோவணமொன்று மட்டுமேதுலங்க இருந்தது. அவ்விளைஞருடன் சடைமுடிதரித்த இரண்டு முனிவர்கள் இருந்தனர்.

வந்த இளைஞர் நம் சுவாமிகளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அம் முனிவர்கள் அவ்விளைஞரை நோக்கி, ஐயா! இவருக்கும் உமக்குள்ள கல்வித்திறம் உண்டு. இவர் உம்மைக் காணுமாறு இங்குப் போந்தார் எனப் பரிவுரை வழங்கி அறிமுகப்படுத்தினர்.

உடனே அக்குமரர் இவர் பக்கமாகத் திரும்பினார்; திருநீற்றை அள்ளி அடிகள் திருமேனி எங்கணும் பூசினார்; கண்கள் இரண்டிற்குமிடையான புருவநடுவைக் கைகாட்டி, மிக்க அருளோடும் இரகசியமான ஒன்றைக் கூறிவிட்டு மேற்குத் திக்கு நோக்கி மெல்ல நடை கொண்டார். இரு முனிவர்களும் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். விரைவில் அம்மூவரும் மறைந்துவிட்டனர். அவ் விளைஞரது அருள்வாக்கே உபதேசமென்று உணர்ந்த ஆசிரியர், அவ்விடத்தை நீங்க மனமின்றி மறுபடியும் யோக நிட்டையில் அமர்ந்தருளினார்.

**வேலன் விடையுதவுதல்:**


நிட்டை தொடங்கி 35ஆம் நாளிரவு 26 நாழிகை அளவில், இவர் தலைக்கு மேலுள்ள வெளியிலிருந்து ஒரு பேரொளி வந்தது. உடனே மண்ணும் விண்ணும் நடுங்குவன போல இவருக்குத் தோன்றிது. விண் முழுவதும் ஒரே ஜோதிமயமாகக் காட்சியளித்து, "ஏகாதசருத்திரர் வருகின்றனர் விரைவில் எழுந்து விடுக" என்ற கட்டளை இவர் காதில் விழுந்தது. அஞ்சா நெஞ்சு படைத்த நம் அடிகளார் சற்றும் தயங்காமல், "எவர் கூறினும் நான் எழ மாட்டேன். என் செவ்வேட்பிரான் ஆணை கிடைத்தால் தான் எழுவேன்" என்றார். "செவ்வேள் கட்டளை தான் எழுந்திரு" என்று அவ்வேள் கட்டளையும் அவ்வாறே கிடைத்தது.

உடனே அடிகள் குவித்த கையுடன் எழுந்து மும்முறை வலஞ்செய்து விழுந்து படியுற வணங்கினார். பிரியமனமின்றியே ஒருவாறு அவ்விடத்தை நீங்கி வேலிவாயிலை நீங்கி வெளிவந்தார். நல்ல நிலவொளி மேற்றிசைவிண்ணில் ஒளிர, அடிகளார் ஊர்த் தெருவை யுற்றார். ஊரார் பலரும் கூடினர். ஒரு வாரமளவும் அருகிலுள்ள கிராம மக்கள் வந்து அடிகளாரிடம் திருநீறு பெற்றுப் போயினர். சுவாமிகளும் கோவணதாரியாய் மோன நிலையிலே இருந்தார்.

**யோகநிலைச்சிறப்பு:**

பாம்பனார் செய்த யோகம் பல வகைகளில் சிறப்புடையது. அவர் யோகம் பயிலத் தொடங்கி சிலநாள் வரையில், பிசைந்து வைக்கப்பட்ட உணவை ஒரு துவாரத்தின் வழியே பெற்று உண்டார். சுவாமிகள் நிட்டை கூடியது மொத்தம் 35 நாட்கள். பல நாட்களாக உணவு ஒழித்து நின்றது நமக்கு வியப்பூட்டுவதல்லவா? குமரனையே குருபரனாகப் பெற்றபேறு என்ன வென்பது ! இவர் பெற்ற அநுபவம், நிட்டை நிலை முதலியவற்றை இவரது நூற்களில் குறிப்பாகப் பேசியுள்ளனர்.

## சஷ்டி விரதத்தில் பக்தர்கள்



சஷ்டி விரதம் உள்ள பக்தர்கள் சிலர் உமிழ்நீரும் விழுங்காது ஆறுநாள் உண்ணாநோன்பிருப்பர். சிலர் உண்ணாநோன்புடன் மௌனவிரதமும் காப்பர். சிலர் அவ்வப்போது பழச்சாறு மட்டும் பருகுவர். சிலர் பிற்பகல் 1 மணிக்கு ஒரு வேளை மட்டும் பச்சரிசிச்சோறு உண்பர்.

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - குதம்பைச் சித்தர்

முனைவர் இரா. செல்வக்கணபதி

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையில் வந்த ஞானநூலாசிரியர்களுள் ஒருவர் குதம்பைச்சித்தர்.

**''மாங்காய்ப்பால் உண்டு மலைமேல்**
**இருப்போர்க்குத்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி - குதம்பாய்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி ?''**

என்ற இவர் பாடல் சித்தர் உலகினர் நன்கு அறிந்த ஒன்று.

இவர் பாடியனவாகக் கிடைத்து இருக்கும் 32 கண்ணிகளிலும் தனிச்சொல் குதம்பாய் என்ற விளியாக அமைந்துள்ளது.

குதம்பை என்பது பெண்கள் காதில் அணியும் ஒருவகை ஆபரணம். அதனை அணிந்த பெண் ஒருத்தியைக் குதம்பாய் என்று கூவி அழைத்து ஞானம் உரைத்த காரணத்தால் இவர் குதம்பைச் சித்தர் என வழங்கப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது.



சுடர்த்தொடீ என்றும், பெய்வளை என்றும் கனங்குழை என்றும் ஆபரணத்தோடு இணைத்துப் பெண்களை விளிக்கும் பழக்கம் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. ஏதுக்கடி? என்றே கண்ணிகள் நின்றதால் இவை அனைத்தும் ஒரு பெண்ணை முன்னிலைப் படுத்திப் பாடப்பட்டனவே என்பது உறுதியாகிறது.

குதம்பைச் சித்தர் வரலாறு பற்றி அறிதற்கு எந்த தடயமும் கிடைக்கவில்லை. இவர் பிறந்த ஊர், இவர் ஆசிரியர், இவர் தம் மாணாக்கர், மரபு, வாழ்க்கை குறித்த எந்த தகவலும் இல்லை. இவர் பாடல்களில் காணப்படும் 'பட்டயம்', 'வாதாட்டம்', 'பத்திரம்', 'நட்டணை', 'பல்லாக்கு, 'கொண்டாட்டம்', 'உத்தாரம்' - முதலிய சொற்களை நுணுகி ஆராய்ந்தால் இவர் காலம் கி.பி.12 முதல் 15ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட தாகலாம் என்று ஓரளவு உணர முடிகிறது.

'ஆதாரமான அடி முடி கண்டோர்க்கு' என்றும், 'அட்டதிக்கெல்லாம் அசைந்தாடும் நாதர்க்கு' என்றும் வரும் தொடர்களைக் கொண்டு இவர் நெறி சிவநெறியே என்பதை உணர முடிகிறது.

'தந்திரமான தலம்', 'மந்திரம்', 'அட்டாங்கயோகம்', 'கருத்தறிவாளர்', 'பின்ஆசை' என்று வரும் சொற்களும் தொடர்களும் குதம்பைச் சித்தரைத் திருமூலர் வழி வந்தவர் என்று அடையாளப் படுத்துகின்றன.

சிவனே பரம்பொருள் என்பதை உணராத வரைத் தம்மைத் தாமே பெரியராக மதித்து நின்றனர் பிரம்மனும் திருமாலும். அந்நிலை அன்னார்க்குப் பேதமை பற்றி வந்தது. சிவன் ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாய் எழவும் அன்னார் அடிமுடி தேடி அரற்றி நின்றனர். சிவனே பரம் பொருள் என உணர்ந்து, வாதாட்டம் ஒழிந்தனர். திருமூல நாயனார்- திருமந்திரம் - இரண்டாம் தந்திரத்துள். அடிமுடி தேடல் என்ற பகுதியில் ஒன்பது பாடல்களால் இவ்வரலாற்றை விரித்துரைக்கிறார்.

**''பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்**
**பிரமன்மால் தங்கள் பேதைமையாலே**
**பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க**
**அவனடி தேடி அரற்றுகின் றாரே''**

என்பது இப்பகுதியில் இடம் பெற்ற ஒரு திருமந்திரம். குதம்பைச் சித்தர் இவ்வரலாற்றைச் சாறு பிழிந்து திரட்டி

**''ஆதார மான அடிமுடி கண்டோர்க்கு**
**வாதாட்டம் ஏதுக்கடி - குதம்பாய்**
**வாதாட்டம் ஏதுக்கடி?''**

என ஒரு கண்ணியில் பதிவு செய்கிறார்.

சைவத்தில் இறையருளால் பெறுவதற்குரிய இரண்டு நெறிகளுள் ஒன்று துறவறம். குறைவறப் பேணி நிற்க இயலுமாயின் இது இல்லறத்திலும் உயர்ந்தது. ஆயின் இந்நெறி கரடு முரடானது. முட்கள் நிறைந்தது. ஒழுக்கமே இதன் மூலம். ஒழுக்க நெறி நிற்க மாட்டாதார் இந்நெறியை மேற்கொண்டால் தாமும் பழிக்கப்படுவர். துறவறமும் இகழப்படும். திருமூலர் இதனை நன்கு தெளிவு படுத்துகிறார்.

**''நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்**
**நெறியில் வழுவின் நெருஞ்சில்முட் பாயும்**
**நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு**
**நெறியில் நெருஞ்சிமுள் பாயகில் லாவே''**

மிக அருமையான இதனை உள்வாங்கிக் கொண்ட இச்சித்த மூர்த்திகள்

**''வஞ்சகம் அற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்**
**சஞ்சலம் ஏதுக்கடி - குதம்பாய்**
**சஞ்சலம் ஏதுக்கடி ?''**

என அழகுபடத் துறவிகளுக்கு நன்னெறி புகட்டுகின்றார்.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் சித்தர் நெறியையும், சிவநெறியையும் புதுப்பித்து வாழ்வளித்த வள்ளல் வடலூர் இராமலிங்க அடிகளார். உயரிய தத்துவச் சிந்தனைகளை அவர் சித்தர்நெறி நின்று வழங்கும் பண்பாளர்.

**''வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்**
**மயில்குயில் ஆச்சுதடி - அக்கச்சி**
**மயில்குயில் ஆச்சுதடி''**

என்பது ஒரு பதிவு. இத்தகு கண்ணிகளுக்கு மூலம் குதம்பைச் சித்தர் கண்ணிகளே என்று கருதுவதில் பிழை இல்லை. மனித உடலில் தலைக்கு மேலான வெளியிடத்தை வானம் என்கிறார் வள்ளலார். மயில் என்பது தோகை விரித்து ஆடிக் கண்களைக் குளிர்விக்கும் காட்சித் தத்துவம். அதனை 'மயில்குயில் ஆச்சுதடி' என்றது காட்சி விரிவு மாற்றமடைந்து ஓசைத் தத்துவமாகிய 'நாத'மாக மாறி நின்றதைச் சுட்டியது. இவ்வாறே குதம்பைச் சித்தரும்

**''மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி - குதம்பாய்**
**தேங்காய்ப்பால் ஏதுக்கடி?''**

என ஞானப் படிமுறை வளர்ச்சியினைப் பூடகமாக உரைத்துச்செல்வதைக் காண முடிகிறது.

சித்தர் பாடல்களில் ஆய்வு மேற்கொள்ள விரும்புவார் பலரும் வடலூர் வள்ளலாரை நன்கு படித்தறிதல் வேண்டும். பல நுட்பமான வினாக்களுக்கு அவரிடம் விடைகள் கொட்டிக் கிடக்கின்றன. சித்தர்கள் சடங்காசாரங்களை வெறுத்தவர்கள். ஞானம் ஒன்றையே முன்னிலைப்படுத்தினர்.

திருஅருட்பாவின் ஆறாம் திருமுறையில் மதிமண்டலத்து அமுதம் என்று தொடங்கும் முதல் குறிப்புடைய பத்துப் பாடல்களின் தொகுதி ஒன்று உள்ளது. அங்கே சித்தர்கள் வைத்த பூடகக் குறியீடுகளுக்கு விளக்கங்கள் உள்ளன. குதம்பைச் சித்தர் பதிவில் 'மலை' என்பது தலைக்கு மேலான வெட்டவெளி. இதனை சகஸ்ராரம் என்பர். 'ஜோதி மலை ஒன்று தோன்றி' என்று பாடுவார் வள்ளலார். 'தலைமலை' என்பர் நூலாசிரியர். அதனையே இமயமாக உருவகிப்பதும் உண்டு.

திரு.வி.க. ''இமயமலை அல்லது தியானம்'' என நூல் ஒன்று தந்துள்ளார். சித்தர் பாடலில் மாங்காய்ப்பால் என்பது 'மதிமண்டலத்து அமுதம்' என வள்ளலார் வழி அறிய முடிகிறது. அது ஊற்றெடுக்கும் தலையின் ஓர் இடம் தோற்றத்தில் மாங்காய் போல் காணப்படும். அந்த ஞான அமுதப் பெருக்கை அனுபவ வாயிலாக உணரவல்லார்க்கு உலகியல் இன்பங்கள் ஒரு பொருளாகத் தோன்றாது என்பது கருத்து. ஞானகுரு வாயிலாக இதன் உண்மைத்திறம் அறிதல் இயலும்.

'யான் எனது' என்னும் பற்றுக்களை விடுதலே முக்திநிலை. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பது ஞானவாசகம். 'ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்' என்கிறது திருமந்திரம். அறம் முதலிய மூன்றையும் அரனை நினைத்து விட்டொழித்தலே பேரின்பவீடு என்கிறார் ஔவை. ஞான நூல்கள் பலவும் பற்றுவிடற்கு அறிவுரை கூறுவன. பற்று விட்டார்க்கு அவை ஒன்றும் தேவை இல்லை என்பதைச்சித்தர்

**''தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை**
**தேவாரம் ஏதுக்கடி - குதம்பாய்**
**தேவாரம் ஏதுக்கடி?''**

என்று பதிவு செய்து அறிவுறுத்துகிறார். 'தன்னை அறிந்து தலைவனைச் சார்ந்தார்க்கு' ஆசைகள் இராது என்கிறார். ஐம்பெரும் பூதங்களுள் பெரிது வான். அதனை வெட்டவெளி என்பர். அதனையே இறைவன் திருமேனி என்பர் சைவ நூலாசிரியர். ஏனைய பூதங்கள் பொய். வானே மெய். பிறிதெல்லாம் அதில் ஒடுங்கும் என்பதை உணரவல்லார்க்கு வேறு சிறப்பு ஒன்றும் தேவை இல்லை என்பதை

**''வெட்டவெளி தன்னை மெய்யென்றிருப் போர்க்குப்**
**பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்**
**பட்டயம் ஏதுக்கடி?''**

என விளக்கி நிற்கிறார்.

சிவநெறியையும், சித்தர் நெறியையும் இணைத்து யோக நெறியில் நிறுத்தி, அதன்வழி முயன்று அரிதாகிய சிவப்பேற்றை எளிதாக வழி அடைய வழிகாட்டும் நன்மார்க்கமாகக் குதம்பைச் சித்தர் பாடல்கள் அமைகின்றன. அணுகுதல் கடிது. அணுகிவிட்டால் பேரின்பம்.

## கண்நோய்கள் தீர்க்கும் கண்ணாயிரநாதர்



திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் பேருந்து வழித்தடத்தில் 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள திருத்தலம் திருக்காறாயில் என வழங்கப்படும் திருக்காரவாசல். இத்திருத்தலம் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாகும்.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவர் அருள்மிகு கண்ணாயிரநாதர். அம்பிகை அருள்மிகு கைலாசநாயகி.

சிவநிந்தையால் பதவியிழந்த நான்முகன், இத்திருத்தலத்தில் தவம் புரிந்து சாபவிமோசனம் பெற்றான். அப்போது பிரமனுக்கு ஆயிரம் கண் கொண்ட அதிசய வடிவில் சிவபெருமான் காட்சி வழங்கினபடியால் கண்ணாயிரநாதர் என்று இறைவர்திருநாமம் வழங்குகின்றது.

கண் சம்பந்தமான நோயுள்ளவர்கள் இத்திருத்தலம் வந்து அருள்மிகு கண்ணாயிர நாதரை வழிபடக் கண்நோய்கள் தீருகின்றன.

கரிசிலாங்கண்ணித் தைலம், பொன்னாங் கண்ணித் தைலம், தேங்காய் எண்ணெய் மூன்றும் கலந்த முக்கூட்டு மூலிகைத் தைலம் இறைவனுக்கு அபிடேகம் செய்யப்பட்டுக் கண்நோய் தீர வேண்டி வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு வழங்கப் படுகின்றது.

அம்மூலிகைத் தைலம் தேய்த்து நீராடக் கண் நோய்கள் குணமாகி விடுகின்றன.

# பொறுமையால் கிடைக்கும் பெருமை

(நீதிக்கதை)

-சுவாமி கமலாத்மானந்தர்
இராமகிருஷ்ணமடம், சென்னை

மகான் ஏகநாதர் கோபம் என்னும் சொல்லையே அறியாத அதிசய மனிதராக இருந்தார்.

ஒரு முறை சில கொடியவர்கள் எப்படியாவது ஏகநாதரைக் கோபம் கொள்ளச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர். அதன் பொருட்டு அவர்கள், யார் ஏகநாதரைக் கோபம் கொள்ளச் செய்கிறார்களோ அவர்களுக்கு இரு நூறு ரூபாய் பரிசாகத் தரப்படும் என்று அறிவித்தனர்.

மகான் ஏகநாதரின் பெருமையை மக்கள் அறிவார்கள். ஆகவே தீயவர் பணம் தருவதாகப் பலமாகப் பிரசாரம் செய்துங்கூட, பண ஆசைகாரணமாக அந்த இழிந்த செயலைச் செய்ய எவரும் முன் வரவில்லை.



கடைசியாக ஒரு பிராம்மண இளைஞன் தன்னால் அந்தக் காரியத்தைச் செய்து விட முடியும் என்று மார்தட்டிக் கொண்டு முன்வந்தான்.

மறுநாள் காலையில் அந்த இளைஞன் ஏகநாதரின் வீட்டை அடைந்தான். அப்போது ஏகநாதர் பூஜையறையில் பூஜை செய்து கொண்டிருந்தார். வந்த இளைஞன் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். கைகால்களைக் கூடக் கழுவாமல் எவரிடமும் எதுவும் கேட்காமல் நேரே பூஜையறைக்குச் சென்றான்.

ஏகநாதர் ஒருமுகப்பட்ட நிலையில் பூஜை செய்து கொண்டிருந்தார். இளைஞன் நேரே ஏகநாதரின் மடிமீது வந்து உட்கார்ந்து கொண்டான். இவ்விதம் செய்வதனால் ஏகநாதர் நிச்சயம் கோபம் அடைவார் என்று எதிர் பார்த்தே அவன் அவருடைய மடியின் மீது வந்து அமர்ந்தான்.

ஆனால் நடந்தது என்ன? ஏகநாதர் கோபமே கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் அவனைப் பார்த்து, குழந்தாய்! உன்னைப் பார்த்து எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது. நானும் எவ்வளவோ பேரைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் உன்னைப் போல் இவ்வளவு அன்புடன் யார் மடிமீது அமர்ந்து கொள்கிறார்கள்? உன் அன்பே விநோதமானது! என்றார்.

அந்தண இளைஞன் ஏமாற்றத்துடன் அவரையே பார்த்துக் கொண்டு சும்மா இருந்துவிட்டான்.

இளைஞன் மனதிற்குள், 'ஏதேது! இந்த மனிதனைக் கோபப்படச் செய்து, சுலபமாக இருநூறு ரூபாய் அடைந்து விடலாம் என்று நினைத்தது எவ்வளவு மடத்தனம்! இவரைக் கோபமடையச் செய்யவே முடியாது போல் தோன்றுகிறதே! என்று எண்ணமிட்டான்.

இருந்தாலும் இருநூறு ரூபாய் ஆசைஅவனைவிடவில்லை. மீண்டும் வேறு முயற்சி செய்யப் பலத்த திட்டம் ஒன்றைத் தீட்டி வைத்துக் கெண்டான்.

உணவுக்கு நேரம் நெருங்கியது. ஏகநாதருக்கு அருகிலேயே அந்த இளைஞனுக்கும் இலை போடப்பட்டிருந்தது. இருவரும் உணவுக்கு வந்து அமர்ந்தனர். ஏகநாதரின் மனைவி கிரிஜாபாய் உணவு வகைகளைப் பரிமாறினாள். பிறகு நெய்யை இலையில் இடுவதற்காக அவள் கீழே குனிந்தாளோ இல்லையோ, உடனே டக்கென்று அந்த இளைஞன் கிரிஜாபாயின் முதுகின் மீது ஏறி அமர்ந்து கொண்டான். இந்தச் செயல் நிச்சயம் ஏகநாதரின் ஆத்திரத்தைக் கிளப்பிவிடும் என்று அவன் நினைத்தான். ஆனால் அவனுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

ஏகநாதரோ மிகவும் அமைதியாக மனைவியைப் பார்த்து ''கிரிஜா! ஜாக்கிரதை! இளைஞர் கீழே விழுந்து விடப் போகிறார்'' என்றார்.

கிரிஜாபாய் கணவருக்கு கொஞ்சமும் சளைத்தவள் அல்லள். அவள் கணவன் கூறியதற்குப் பதில் அளிக்கும் வகையில், ''பயப்படாதீர்கள் , எனக்கு நமது குழந்தை ஹரியை முதுகின் மீது சுமந்து கொண்டு காரியங்கள் செய்து பழக்கம். இந்தக் குழந்தையைக் கீழே போட்டு விடுவேனா?'' என்று கூறினாள்.

தம்பதிகளின் பெருமைக்கு உரிய செய்கைகளைக் கண்டும் அவர்களின் அமைதியான பேச்சைக் கேட்டும் இளைஞன் வியப்படைந்தான். அவனுக்கு இருநூறு ரூபாய் தனக்கு கிட்டும் என்ற எண்ணம் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டு விட்டது. மிகவும் வெட்கத்துடன் கிரிஜாபாயின் முதுகிலிருந்து குதித்து ஏகநாதரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

## சனிபகவானைக் காலின் கீழ் கொண்ட ஆஞ்சநேயர்

ஆஞ்சநேய பக்தர்களிடம் சனி பகவான் ஆதிக்கம் செலுத்தமாட்டார்.




காரணம், ஆஞ்சநேயரைப் பிடிக்கச் சென்ற சனிபகவானை ஆஞ்சநேயர் வாட்டி வதைத்து விட்டார்.

''உம்மையும் இனி பிடிக்கமாட்டேன். உம் பக்தர்களையும் பிடிக்கமாட்டேன்'' என்று வரம் அளித்து தப்பிப் பிழைத்தார் சனிபகவான்.

இதனை உணர்த்தும் வகையில் செங்கற்பட்டு ஸ்ரீ கோதண்டராமர் ஆலயத்தில் சனியை வதம் செய்யும் ஆஞ்சநேயர் தனிச்சந்நிதியில் காட்சி தருவதைக் காணலாம்.

# இவ்வளவு தூரம் வந்த பிறகு

- அ. நிறைமதி, பி.எல்.



கோவன் என்கிற இருளர் தலைவன் உண்டாக்கிய ஊர், அவன் பெயரிலேயே கோவன்புத்தூர் என்று வழங்கி வந்தது.

அக்கோவன்புத்தூரே கோயம்புத்தூர், கோவை என இன்று வழங்கிவரும் தமிழகத்தின் தலை சிறந்த தொழில் நகரமாகும்.

கோவை என்றால் மக்களின் நினைவிற்கு உடனே வருவது மருதமலை முருகன் திருக்கோயில் ஆகும்.

''மருதமலை மாமணியே முருகய்யா!''


''மருதமலைக்கு நீங்க வந்து பாருங்க!'' ஆகிய திரைப் பாடல்களாலும் புகழ்ப் பெற்ற இம் மருதமலையில் வீற்றிருக்கும் அருள்மிகு மருதாசல மூர்த்தியாம் முருகப் பெருமானை அறியாதவர்கள் யார்?

முருகப் பெருமான் வீற்றிருக்கும் குன்று தோறாடல் தலங்களில் சிறந்த தலமான மருதமலையை ஏழாம் படைவீடு எனவும், ஆர்வ மிகுதியால் கொண்டாடும் முருக பக்தர்களும் அதிகம் உள்ளனர்.

சிரசில் கண்டிகையுடனும், பின்பக்கம் குடுமியுடனும் அரைக்கச்சைஅணிந்து, வலத்திருக் கரத்தில் ஞானத் தண்டேந்தி இடது திருக்கரத்தை இடையில் வைத்துத் தண்டபாணியாகக் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கும் மருதமலையானை வழிபட சகலசெல்வங்களும் கைகூடும் என்ற நம்பிக்கையோடு பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் நாளும் நாளும் மருதமலைக்கு வந்து வழிபட்டுச்செல்கின்றனர்.

குழந்தைப் பேறு இல்லாதவர்கள் மருத மலையில் காவடியைச் சுமந்து கொண்டிருக்கும் இடும்பன் சந்நிதியை வழிபட்டால் கைமேல் பலனாகக் குழந்தை வரம் உண்டாகும் என்பதால் இங்கு வந்து வழிபடும் பக்தர்கள் எண்ணிக்கை ஏராளம் ஆகும்.

பதினெண் சித்தர்களில் ஒருவரான பாம்பாட்டிச் சித்தர் இங்குள்ள ஒரு குகையில் தங்கியிருந்து யோக நெறியில் சமாதி கூடும் நிலை பெற்றார் என்பதும் இம்மருத மலைக்குரிய பெருமைகளில் ஒன்றாகும்.



இத்தகைய மருதமலைக்கு வந்து மருதாசல மூர்த்தியை வழிபடும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவையிலேயே சிறப்புற்று விளங்கும் பழமையான பேரூர் பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலை வழிபடுவதில் ஆர்வம் கொள்ளாதது ஏன் என்பது தெரியவில்லை.

தேவார மூவரில் சுந்தரர் வழிபட்டுப் பாடியுள்ள அருமையான திருத்தலமாகும் இது.

''மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்
சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே!''

''பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான்
பிறவா நெறியானே!''

என்றெல்லாம் இத்திருத்தலத்தைச் சுந்தர மூர்த்தி நாயனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

ஒரு முறை தெய்வப் பசுவாகிய காமதேனு பேரூர் வந்து தவம் செய்து கொண்டிருந்த போது, காமதேனுவின் கன்று துள்ளிக் குதித்து விளையாடியது. அக்கன்றின் கால், லிங்கமூர்த்தியை மூடியிருந்த புற்றில் அழுந்திக் கொண்டதால் காலை வெளியே எடுக்க முடியவில்லை.

ஆகவே அழுந்திய காலை வெளியே எடுக்க கன்று தன் கொம்பினால் குத்திப் புற்றை உடைத்தது.

கன்று தன் கொம்பினால் குத்தியதால் புற்றினுள் இருந்த லிங்கமூர்த்தியின் தலையில் இரத்தம் பீறிட்டது.

காமதேனு தன் கன்று விளைத்த இடருக்கு வருந்தியபோது சிவபெருமான் இடப வாகனத்தில் காட்சி கொடுத்து, ''காமதேனுவே! உமாதேவியின் கொங்கைத் தழும்பும், வளைத் தழும்பும் யாம் மார்பில் மகிழ்ச்சியாகக் கொண்டது போல், எம் முடியில் உம் கன்றின் குளம்புச் சுவடும், கொம்புச் சுவடும் கொண்டு அருளினோம். காமதேனுவாகிய நீர் வழிபட்டதால் இந்த ஊரும் இனி பட்டிபுரி என வழங்கும். எமக்குப் பட்டீஸ்வரர் எனும் பெயர்

# குடந்தை திருநாகேஸ்வரம் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா



குடந்தை அருள்மிகு திருநாகேஸ்வரம் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா 15-9-05 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு இந்து சமய அறநிலைய அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்களும் இத்திருக்குடநீராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



---

வழங்கும்'' என்று அருள் புரிந்த அற்புதமான திருத்தலம் ஆகும் இது.

கோவையில் சிறப்புற்றிருக்கும் பழம் பெரும் பதியாகும் இது. இங்குள்ள நடராசர் சபை கண் பெற்றோர் யாவரும் காண வேண்டிய சிற்பக் கருவூலம் ஆகும். கோவை மாநகருக்கு மேற்கில் வெள்ளியங்கிரி - சிறுவாணி செல்லும் நெடுஞ் சாலையில் ஆறே கி.மீட்டர் தொலைவில் அமைந்து விளங்கும் இத்திருக்கோவிலைக் கோவை செல்வோர் அவசியம் கண்டு வழிபடுதல் வேண்டும்.

பேரூர்த் திருத்தலத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் மேற்கெல்லை முடிவாக அமைந்து விளங்கும் அருள்மிகு வெள்ளியங்கிரி யாவரும் காணவேண்டிய அற்புதமான திருத்தலம் ஆகும்.

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற சிவபெருமானை வேண்டித் தவமிருந்ததும், சிவபெருமான் பாசுபதாஸ்திரம் தந்தருளியதும் இம்மலையே என்கின்றது தலபுராணம்.

உமாதேவி வேண்டிக் கொண்டபடி சிவபெருமான் திருநடனம் ஆடிக்காட்டிய திருத்தலமுமாகும் இது.

தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட தேவர்கள் புல் ஆகும் சாபம் பெற்றனர். அவர்களின் சாபநீக்கம் செய்தருளியவர் அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர்.

கடல்மட்டத்திற்கு மேல் 6000 அடி உயரத்திலும், அடிவாரத்திலிருந்து சுமார் 5.4 கி.மீ. தூரத்திலும், வில்லென வளைந்து பஞ்சகிரி மலைகளுக்கு நடுவில் அமைந்து விளங்கும் இத்திருத்தலம் தட்சிண கைலாயம், பூலோகக் கயிலாயம் என வழங்கப் பெறுகின்றது.

மலையேற வலுவுள்ளவர்கள் மலையேறி வழிபடலாம். பெண்களும், வயதானவர்களும், சிறுவர்களும் தரிசிக்க வேண்டி அடிவாரத்திலும் ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதால் யாவரும் அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவரை அடிவாரத்திலேயே வழிபட்டுப் பயன் பெறலாம். கோவைக்கு வந்தவர்கள் அவசியம் கண்டு வழிபட வேண்டிய இயற்கை எழில் கொஞ்சும் மலை அருள்மிகு வெள்ளியங்கிரி மலை என்பது உண்மை.







## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியுள்ள திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் தங்கரதத் திருப்பணி

தமிழகத்தின் பெருமைக்குக் காரணமான புகழ்மிக்க பழைமையான திருத்தலங்களில் ஒன்று திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் ஆகும்.

இத்திருக்கோயிலுக்கு இதுவரை தங்கத்தேர் இல்லாத குறையைப் போக்கும் வகையில் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தங்கரதம் அமைக்க ஆணை வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பதினாறேமுக்கால் அடி உயரத்தில் புதிய தங்கரதம் 291 கிலோ செம்பு, 11.3 கிலோ வெள்ளி மற்றும் 10.100 கிலோ சுத்த தங்கம் உபயோகித்து ரூ.84,01,775 (ரூபாய் எண்பத்திநான்கு லட்சத்து ஆயிரத்தி எழுநூற்றி எழுபத்தைந்து மட்டும்) மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்தங்கரதத்திருப்பணி விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளது தமிழகமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை வழங்கும் என்பது திண்ணம்.

இன்னும் கோவைக்கே பெருமை சேர்ப்பவர் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர். பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் எழுந்தருளி வைப்பதற்காக மாட்டு வண்டியில் எடுத்து வரும் போது வண்டியின் அச்சு முறிந்து ஈச்சநாரியிலேயே இடம் பெற்றுவிட்ட அருமையான விநாயகரைத் தரிசிக்காவிட்டால் இத்தலயாத்திரை நிறைவு பெறாது என்பது திண்ணம்.

27 நட்சத்திரங்களுக்கு நாளொரு வண்ணமாக விநாயகரை அலங்காரம் செய்வது நாம் கண்டு மகிழ வேண்டிய ஒன்றாகும். தமிழகத்திலேயே விநாயகப் பெருமானுக்கு தங்கத் தேர் அமைந்து விளங்குவது இத்திருத்தலத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

1790 ஆம் ஆண்டில் திப்புசுல்தான் படைகள் கோவையில் தண்டு அமைத்து தங்கியிருந்த போது வெளிப்பட்ட தண்டு மாரியம்மன் திருக்கோயிலும் கோவையில் புகழ் பெற்று விளங்கும் கோனியம்மன் திருக்கோயிலும் பக்தர்கள் வழிபட வேண்டிய உன்னத திருத்தலங்கள் ஆகும்.

கொங்கு மண்டலமாம் கோவையில் இன்னும் அநேகத் திருத்தலங்கள் உள்ளன என்ற போதிலும் மேற் காணும் ஆலயங்கள் யாவும் கோவைக்குச் செல்வோர் அவசியம் காண வேண்டிய அரிய திருத்தலங்கள் ஆகும்.

உதகை செல்லும் பயணிகள் கோவை, மேட்டுப்பாளையம் வழியாகவே உதகை செல்ல முடியும்.

உதகைப் பயணம் உவகைப் பயணம் ஆகும். இதனை ஆன்மீகப் பயணமாக அமைத்துக் கொள்ள விரும்பும் பக்தர்கள் பின் வருமாறு பயணத் திட்டத்தை வகுத்துக் கொள்வது நலமாகும்.

முதல் நாள் : ஈச்சநாரி, கோனியம்மன், தண்டு மாரியம்மன் கோவில்களையும், பேரூர், வெள்ளியங்கிரி திருக்கோயில்களையும் பார்த்து இரவு கோவையிலேயே தங்கல்.

இரண்டாம் நாள் : காலை மருதமலை தரிசித்துப் பின் காரமடை அரங்கநாதர் கோயில் தரிசித்து, மேட்டுப்பாளையம் வனபத்திர காளியம்மனை வணங்கி உதக மண்டலம் தங்கல்.

மூன்றாம் நாள் : உதகை இயற்கை எழில் தரிசிப்பதோடு அருள்மிகு மாரியம்மன், அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோயில்கள் தரிசிக்கலாம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில்

வடபழனி, சென்னை - 26.

## மகாகந்த சஷ்டி இலட்சார்ச்சனை விழா

## அழைப்பிதழ்

### பார்த்திப ஆண்டு (ஆங்கில ஆண்டு 2005)

திருமுருகன் தலங்களுள் தொன்மை வாய்ந்த தென்பழநியில் பழநியாண்டவராகவும் சென்னை யம்பதியில் கோடம்பாக்கம் வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டுவன அருள்செய்ய வடபழநிஆண்டவராகவும் எழுந்தருளி இருப்பவர் அருள்மிகு வடபழநிஆண்டவர்.

ஆன்மாக்கள் உய்யவும் நாட்டு மக்கள் நலமுடன் வாழவும் வேண்டி நடைபெறும் மகாகந்தசஷ்டி இலட்சார்ச்சனை விழாவில் 2-11-2005 புதன்கிழமை முதல் 7-11-2005 திங்கட்கிழமை உச்சிக்காலம் முடிய அருள்மிகு வடபழநிஆண்டவருக்கு இலட்சார்ச்சனை நடைபெறும்.

அர்ச்சனை ஒன்றுக்கு ரூ.50/- செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இலட்சார்ச்சனை பிரசாதமாக லட்டு, முறுக்கு மற்றும் தேங்காய்ப் பழம் அன்பர்களுக்கு வழங்கப்படும். இலட்சார்ச்சனையில் பங்கு கொண்டு அருள்மிகு வடபழநிஆண்டவரின் பேரருளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

7-11-2005 திங்கட்கிழமை இரவு 7.00 மணிக்கு சூரசம்ஹாரம்.

8-11-2005 செவ்வாய்கிழமை இரவு 7.00 மணிக்கு திருக்கல்யாணம்.

9-11-2005 முதல் 12-11-2005 முடிய தினசரி சுவாமி வீதியுலா நடைபெறும்.

7-11-2005 அன்று இரவு சிறப்பு அலங்காரத்துடன் சுவாமி புறப்பாடு மற்றும் சூரசம்ஹார நிகழ்ச்சி நடைபெறும். திருக்கோயிலுக்கு நன்கொடைகள் வழங்க விரும்புவோர் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இலட்சார்ச்சனை விழாவில் தினசரி காலை 7.00 மணி முதல் பகல் 12.30 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.30 மணி முடிய இலட்சார்ச்சனை நடைபெறும்.

**த. மகாதேவன்,** பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

**கே. துரைசாமி,** எம்.ஏ.பி.எல்.,
அறங்காவலர் குழு தலைவர்.

**டாக்டர். கே. ராஜகார்த்திக்,**

**ஜெ. வைத்தியநாதன்,**

**கு. சுப்பராயன்,**

**ஆர். ஜானகி**

அறங்காவலர்கள்



பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருச்செந்தூர்

## 2005- ஆம் ஆண்டு கந்தசஷ்டி திருவிழா

# அழைப்பிதழ்

**2-11-2005** முதல் 6-11-2005 முடிய - கந்தசஷ்டி திருவிழா - நாள்தோறும் காலை இரவு யாகசாலை பூஜை நடைபெறும. பகலில் உச்சிகால தீபாராதனை முடிந்ததும் யாகசாலை தீபாராதனை, பின் யாகசாலையிலிருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச்சப்பரத்தில் எழுந்தருளி வீரவாள் வகுப்பு, வேல்வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடன் சண்முக விலாசம் சேர்ந்ததும் தீபாராதனை நடைபெறும்.

மாலை 6.00 மணிக்கு மேல் திருவாவடுதுறை ஆதீனசஷ்டி மண்டபத்தில் வைத்து அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேகம் அலங்காரம் முடிந்த பின்னர் சுவாமி அம்பாளுடன் தங்கரதத்தில் கிரிவீதி உலா வந்து திருக்கோயில் சேரும்.

**7-11-2005** சூரசம்ஹாரம் - காலை யாகசாலை பூஜை நடைபெறும். உச்சிக்கால தீபாராதனை முடிந்ததும் யாகசாலை தீபாராதனைக்குப் பின்னர் யாகசாலையிலிருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்க சப்பரத்தில் எழுந்தருளி சண்முகவிலாசம் சேர்ந்ததும் தீபாராதனை நடைபெறும்.

பிற்பகல் 4.00 மணியளவில் அருள்மிகு ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளுதல், சூரசம்ஹாரம் நடைபெற்ற பின்பு சந்தோஷ மண்டபத்தில் சுவாமிக்கும், அம்பாளுக்கும் அலங்காரமாகி தீபாராதனைக்கு பின்னர் கிரிப்பிரகாரம் உலா வந்து திருக்கோயில் சேர்தல். பின்னர் சாயாபிஷேகம் நடைபெறும்.

**8-11-2005** அதிகாலை 5.00மணியளவில் தெய்வானை அம்பாள் தபசு காட்சிக்கு எழுந்தருளுதல். மாலை சுவாமி எழுந்தருளி அம்பாளுக்குக் காட்சி தந்து தோள் மாலை மாற்றித் திருவீதி வலம் வந்து திருக்கோயில் சேருதல். இரவு திருக்கல்யாணம் நடைபெறும்.

### பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள்

1. பக்தர்கள் வசதியாக தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. கந்தசஷ்டி திருவிழாவின் போது காலை, மாலை யாகசாலை பூஜை நடைபெறும்.
3. இத்திருக்கோயிலில் பன்னீர் இலைவிபூதி பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
4. இத்திருக்கோயிலில் அனைவருக்கும் நற்சந்தனம் வழங்கப்பட்டு வருகிறது.
5. ஒவ்வொரு தமிழ்மாதக் கடைசி வெள்ளியன்று 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
6. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நன்கொடையாளர் பங்களிப்புடன் கூடிய அன்னதானத் திட்டத்தின்கீழ் தினசரி 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது.
7. திருக்கோயில் சார்பில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையன்று ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெறுகிறது.
8. திருக்கோயில் சார்பில் மாணவர்களுக்கு ஞாயிறு தோறும் ஆன்மீக ஒழுக்கநெறி பயிற்சி வகுப்பு நடத்தப்பெறுகிறது.
9. திருக்கோயில் சார்பில் மாணவர்களுக்கு ஞாயிறு தோறும் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தப் பெறுகிறது.

**இணையதளம் மூலம் பிரார்த்தனை நிறைவேற்றலாம்**

வெளியூர்களிலிருந்து வர இயலாத அன்பர்கள் கீழ்க்கண்ட இணையதள முகவரியில் தொடர்பு கொண்டு, பிரார்த்தனை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

www.tntemple.org e-mail: tcrtemple@sancharnet.in

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய தொடர்புகொள்ள வேண்டிய வெப்சைட் www.tiruchendurmurugan.org கந்தசஷ்டி திருவிழாவில் பக்தர்கள் கலந்துகொண்டு செந்திலாண்டவர் அருள்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**கோ. பக்கிரிசாமி, பி.எஸ்ஸி.பி.எல்.,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்.

**டாக்டர் திரு பா. சிவந்தி ஆதித்தனார்,**
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

**மு. இராமச்சந்திரன்,**
**கே..ஆர்.பி. மணிமொழியன்,**
**வி. அண்ணமலைசுப்ரமணியன்,**
**ரா. தேவசேனா.**